www.padippakam.com

1 - 15 நவம்பர் 1997 ☐ ரூ. 3.50

திடீர் தமிழனின் சாதி எதிர்ப்பு சவடால்

# புதிய ஜனநாயகம்




தரகர் கருணாநிதியின் சாதனை

## சிறு தொழிலுக்குப் பூட்டு

## அந்நியக் கம்பெனிக்கு பட்டுக் கம்பளம்

படிப்பகம்

## கர்நாடகா வழியில் கேரளா! - மதுரை மாவட்டம் பாலையாகும் அபாயம்!!

ஒருங்கிணைந்த மதுரை மாவட்டத்தை வறட்சியாக்க கூடிய விதத்தில் பெரியாறு அணையில் நீர்மட்டத்தை கேரள அரசு அடாவடித்தனமாக குறைத்து விட்டதை எதிர்த்து விவசாயிகள் விடுதலை முன்னணி ஜூன் மாதம் தொடங்கி ஆகஸ்டு முடிய மூன்று மாத இயக்கமாக இதற்கான போராட்டத்தை எடுத்தது.

இந்தப் போராட்டத்தின் முதல் கட்டமாக தேனி மாவட்டத்தின் லோயர் கேம்ப் தொடங்கி மதுரை மாவட்டம் செக்காணூரணி வரை 100 இடங்களில் கேரள அரசின் அடாவடித்தனத்தை எதிர்த்தும், போலி கம்யூனிஸ்டுகளை அம்பலப்படுத்தியும், சுவரெழுத்துகள் எழுதப்பட்டன. 15,000 பிரசுரங்கள் இரண்டு மாவட்டம் முழுவதும் விநியோகிக்கப்பட்டன. அடுத்து இந்தப் போராட்டத்தின் அவசியத்தை விளக்கி 3000 சிறு வெளியீடுகள் போடப்பட்டு பேருந்துகளிலும், கிராமங்களிலும் மக்கள் மத்தியில் கொண்டு செல்லப்பட்டது. அடுத்த கட்டமாக தேவாரம், கம்பம், ஆண்டிபட்டி, உசிலை ஆகிய ஊர்களில் பொதுக்கூட்டம் நடத்தப்பட்டது. ஆயிரக்கணக்கில் மக்கள் பொதுக் கூட்டத்திற்கு ஆதரவு தந்துள்ளனர். அடுத்ததாக தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

அடுத்த கட்டமாக ஆகஸ்டு 5-ம் தேதி இரண்டு மாவட்டம் முழுவதும் பஸ் மறியல் பிரச்சாரம் செய்யப்பட்டு மறியல் நடந்தது. மறியலின் முதல் நாளன்றே மோகன், வசந்தன் இருவரையும் கைது செய்தது காவல் துறை. ஆயினும் மறியல் வெற்றிகரமாக நடந்தது.

பல்லாயிரக்கணக்கானவர்கள் மத்தியில் இப்பிரச்சனை கொண்டு செல்லப்பட்டு, மக்கள் இதைப் பற்றி பேச ஆரம்பித்தவுடன், அதுவரை மௌனமாயிருந்த பத்திரிகைகளெல்லாம் பெரியாறு அணை பிரச்சினை பற்றி அரைகுறையாக எழுத ஆரம்பித்தன. மு.க.வின் சன் டிவியோ பாளையம் வட்ட வி.வி.மு. செயலர் மோகனை பேட்டி கண்டது. ஆனாலும் உண்மை நிலவரங்களை மூடி மறைத்துவிட்டு, இவரின் பேட்டியை அரைகுறையாக ஒளிபரப்பி தமிழின உணர்வை (!) காட்டிக் கொண்டது.

'கேரள மார்க்சிஸ்டு'களோ இருக்கின்ற அணை நீர்மட்டத்தை மேலும் குறைக்கப் போவதாக குரைத்துக் கொண்டுள்ளனர். அதோடு மட்டுமின்றி முழுப் பூசணிக்காயை சோற்றிலே மறைக்க முயற்சித்தது போல, கேரள மக்கள் மத்தியில் 152 அடி தண்ணீர் தேக்கினால் இடுக்கி மாவட்டம், குமுளி ஆகிய பகுதிகள் மூழ்கிவிடும் என்று பிரச்சாரம் செய்து, இன வெறியை ஊட்டிக் கொண்டிருக்கின்றனர்.

இந்த பித்தலாட்டங்களை மக்களிடையே அம்பலப்படுத்திய போது, மக்கள் இந்த போலி மார்க்சிஸ்டுகளான சி.பி.ஐ., சி.பி.எம் மீது வெறுப்பை உமிழ்ந்தனர்.

தகவல்,
வி.வி.மு., கம்பம்

## பவானி ஆற்றை மாசுபடுத்தும் ஆலைகளுக்குப் பாதுகாப்பு! போராடும் மக்களுக்கு அச்சுறுத்தல்!!

கோவை மாவட்டத்தில் மேட்டுப்பாளையத்திலிருந்து 9 கி.மீ. தூரத்தில் உள்ளது தேக்கம்பட்டி கிராமம். இக்கிராமத்தில் ஐந்து சாயத் தொழிற்சாலைகள் உள்ளன. அவற்றின் கழிவுகள் அருகிலுள்ள பவானி ஆற்றில் விடப்படுவதால், விளை நிலங்கள் பாழாகி விவசாயம் அழிந்து வருகிறது. குடிநீரும் நஞ்சாகி வருகிறது.

தேக்கம்பட்டி ஊராட்சி மன்றத்திலுள்ள 18 கிராம மக்கள் ஒன்று கூடி, 'ஆலையிலிருந்து வெளியேறும் இரசாயனக் கழிவுகளால் விவசாய நிலங்கள், கிணறுகள், குடிநீர் மாசுபடுவதோடு, ஆலையின் புகையினால் காற்றும் நஞ்சாகி, மக்கள் வாழ முடியா நிலை உருவாகி வருகிறது' என 2.7.97 அன்று ஆலைகளுக்கு கடிதம் எழுதினர்.

ஆனால் இந்த ஆலைகளோ பதில் கூட எழுதவில்லை. எனவே தொடர்ந்து ஆலை இயங்கக் கூடாது என 24.7.97-இல் ஊராட்சி மன்றத்தில் ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இதே போலவே 7.7.97-இல் காரமடை ஊராட்சி ஒன்றியக் குழு உறுப்பினர்களும் 'இந்த ஆலைகளின் இரசாயனக் கழிவுகளால் சுற்றுச் சூழல் கெடுகிறது' என ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றி உற்பத்தியை நிறுத்த வேண்டும் என முடிவு செய்தனர். மேலும் சொர்வால் என்ற சாயத் தொழிற்சாலையில் இயங்கும் 16,927 குதிரைத் திறன் (எச்.பி.) கொண்ட மின் மோட்டாரும் இயங்க அனுமதி வழங்கக் கூடாது எனவும் ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றியுள்ளனர்.

ஊராட்சி மன்றமும், ஊராட்சி ஒன்றியமும் ஆலைகள் இயங்கக் கூடாது என ஏகமனதாகத் தீர்மானம் போட்டும் ஆலைகள் இயங்குவதை நிறுத்த முடியவில்லை. ஆள்வது அதிகாரிகளும் போலீசுமாயிற்றே!

இது பற்றி மாவட்ட ஆட்சியாளர், சம்பந்தப்பட்ட அதிகாரிகள், மேட்டுப்பாளையம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அருண்குமார் என எல்லோரிடமும் நேரில் முறையிட்டனர். பலன் ஏதுமில்லை. பணம் பாதாளம் வரை பாயும் என்பதை நேரில் கண்டதுதான் மிச்சம்.

24.9.97-இல் கோவை மாவட்ட ஆர்.டி.ஓ. ஆய்வு செய்ய நேரில் வருவதாக தகவல் வரவே தேக்கம்பட்டி கிராம மக்கள் கூடினர். அப்போது "கோயம்புத்தூர் கோட்ஸ் அண்டு கோட்டிங் லிமிடெட்" என்ற சாயத் தொழிற்சாலை லாரி பவானி ஆற்றிலிருந்து நீர் எடுத்து வந்தது. மக்கள் அதை சிறைப் பிடித்தனர். ஏனெனில் ஏற்கனவே இது பற்றிய பிரச்சினை வந்தது. அப்போது காரமடை காவல் நிலைய ஆய்வாளர் இனி லாரிகளில் நீர் எடுக்க மாட்டார்கள் என உறுதியளித்தார். இது பொய் என நிரூபிக்கவே மக்கள் லாரியை மடக்கினர்.

இதனால் ஆர்.டி.ஓ. வருவதற்கு முன் சுமார் 50 ரிசர்வ் போலீசு, துப்பாக்கி ஏந்திய அதிரடிப் படையினர் 20 பேர், மேட்டுப்பாளையம் டி.எஸ்.பி. ராமசாமி, ஆய்வாளர் மோகன் சந்திரபாபு, மற்றும் மேட்டுப்பாளையம், காரமடை உள்ளூர் போலீசார் என பெரும் படை குவிக்கப்பட்டது.

அதன்பின் வந்த ஆர்.டி.ஓ., மேட்டுப்பாளையம் தாசில்தார் ஆகியோர் மக்களுடன் மாலை 3 மணி வரை பேச்சு வார்த்தை நடத்தி, லாரியை விடுவித்தனர். பிறகு மாவட்ட ஆட்சியாளருடன் தொடர்பு கொண்டனர். பேச்சு வார்த்தைக்கு மாவட்ட ஆட்சியாளர் வரச் சொன்னார் எனக் கூறி மக்கள் பிரதிநிதிகள் 15 பேரை அழைத்துக் கொண்டு சென்றனர்.

இங்கு கிராமத்தில் நின்ற லாரியைத் தள்ளி விடும்படி டி.எஸ்.பி. ராமசாமி அழைத்த போது யாரும் வரவில்லை. அருகிலிருந்தவரை உனது பெயர் என்ன என்று மிரட்டினார் ராமசாமி. அவர் மிரட்டலுக்கு பணியாததால் காரமடை ஆய்வாளர் தினகரன், உதவி ஆய்வாளர் மாரியப்பன் மற்றும் அதிரடிப் படையினர் அவரை அடித்தனர். தடுக்கச் சென்ற நால்வருக்கும் அடி, உதை கிடைத்தது.

கோபமடைந்த மக்கள் அவர்களைச் சூழ்ந்து கொள்ள அதிரடிப் படையினர் துப்பாக்கியை நீட்டி மிரட்டினர். 'வீரப்பனைப் பிடிக்க துப்புக் கெட்ட உங்கள் வீரம் எங்களிடம் தானா?' என பெண்கள் ஆவேசமாகப் பேசினர். உடனே காரமடை ஆய்வாளர் தினகரன் மன்னிப்பு கேட்டார்.

பாதிக்கப்பட்ட நபர்கள் சென்னை உயர்நீதி மன்ற தலைமை நீதிபதிக்கு தந்தி மூலம் மனுச் செய்துள்ளனர். பேச்சு வார்த்தை என நாடகமாடிய ஆர்.டி.ஓ., மாவட்ட ஆட்சியாளர் இல்லை என பிரதிநிதிகளை திருப்பி அனுப்பி விட்டார்.

24.9.97-ல் தேக்கம்பட்டி மக்கள் சொர்வால் கழிவு நீர் குழாயை உடைக்கப் போவதாக பயந்து போன நிர்வாகம் போலீசு பாதுகாப்பைக் கேட்டது. மக்கள் கோரிக்கையை புறக்கணித்து அதிகார வர்க்க கும்பல், போலீசு படையைக் குவித்து ஆலையை பாதுகாத்தது.

— ம.க.இ.க.,
மேட்டுப்பாளையம்,
கோவை.



படிப்பகம்

www.padippakam.com

புதிய
ஜனநாயகம்

*மார்க்சிய — லெனினிய
அரசியல் ஏடு*

தொகுதி: 12

இதழ்: 24

1 - 15 நவ. '97

உள்நாடு:
தனி இதழ்: ரூ. 3.50
ஆண்டு சந்தா: ரூ. 84.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 18

அட்டை ஓவியம்: கரோ

படைப்புகள் அனுப்பவும்
மற்றும்
அனைத்துத் தொடர்புக்கும்
புதிய ஜனநாயகம்,
அஞ்சல் பெட்டி எண்: 6015,
அசோக் நகர்,
சென்னை - 600 083.

# அரசியல் சட்டப் பிரிவு – 356 ஓட்டுக் கட்சிகளின் முரண்நிலை!

மாநில அரசாங்கத்தைக் கலைத்துவிட்டுத் தனது முகாமையாளரான ஆளுநர் ஆட்சியைப் பிரகடனப்படுத்திக் கொள்வதற்கான அதிகாரத்தை மத்திய அரசுக்குத் தரும் அரசியல் சட்டம் 356 பிரிவின் மீது மீண்டும் விவாதங்கள் கிளம்பியிருக்கின்றன. இந்த முறை உத்திரப்பிரதேச அரசியல் நெருக்கடிகளைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தி ஆதாயம் அடைய ஐக்கிய முன்னணியும் காங்கிரசும் எத்தணித்ததை ஒட்டி இந்த விவாதங்கள் எழுந்துள்ளன.

ஆளுக்கு ஆறுமாதம் ஆட்சி நடத்துவது என்ற பேரப்படி உத்திரப் பிரதேசத்தில் பாரதீய ஜனதாக் கட்சியும் பகுஜன் சமாஜ் கட்சியும் போட்டுக் கொண்ட அரசியல் விபச்சார ஒப்பந்தம் கடந்த மாதம் திடீரென முறிந்து போனது. அதைத் தொடர்ந்து, சட்டமன்றத்தில் பெரும்பான்மையான பலம் பெற்று அரசாங்கத்தைத் தக்க வைத்துக் கொள்வதற்கான இழிசெயல்களில் பாரதீய ஜனதா கட்சி இறங்கியது. ஒரு உறுப்பினருக்கு ஐம்பது இலட்ச ரூபாய், அமைச்சர் பதவி என்ற பேரத்தின் அடிப்படையில் காங்கிரசு, ஜனதாதளம், பகுஜன் சமாஜ் கட்சி, சமாஜ்வாதி கட்சி, சுயேச்சைகளின் அணி ஆகியவற்றைப் பிளந்து, ஏறக்குறைய ஐம்பது பேரை விலைக்கு வாங்கிவிட்டது. இதனால், பாரதீய ஜனதாவின் கல்யாண்சிங் அரசாங்கத்தின் மீதான நம்பிக்கை வாக்கெடுப்பின் போது சட்டமன்றத்தில் இரண்டு தரப்புமே அராஜகம் - வன்முறை வெறியாட்டத்தைக் கட்டவிழ்த்துவிட்டன. இதுவரை எங்கும் நடந்திராத வகையில் சட்டமன்ற நடவடிக்கையைக் கவனிக்க மூன்று ''பார்வையாளர்''களை அனுப்பி, அறிக்கை பெற்று, அங்கு நடந்த அராஜகத்தைக் காரணமாகக் காட்டி, கல்யாண்சிங் அரசாங்கத்தையும், உ.பி. சட்டமன்றத்தையும் கலைத்துவிட்டு, ஆளுநர் ஆட்சியைப் பிரகடனப்படுத்தும்படி ஆளுநர் ரமேஷ் பண்டாரி மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்தார்.

ரமேஷ் பண்டாரி யார், யாரால், எதனால் உ.பி. ஆளுநராக நியமிக்கப்பட்டார் என்பன முக்கியமானவை. ராஜீவ் காந்தியின் விசுவாசியான ரமேஷ் பண்டாரி, வெளியுறவுத் துறைச் செயலராக இருந்து இந்தியாவின் ஈழப்போருக்கும் ஆக்கிரமிப்புக்கும் தூண்டுதலாகப் பணியாற்றியவர்களுள் ஒருவர். சந்திராசாமி போன்ற இரகசிய உலக ஆயுத பேரத் தரகர்களின் கூட்டாளி. ஐக்கிய முன்னணி அரசுக்கு காங்கிரசு அளித்துவரும் ஆதரவுக்கு ஈடாக, அதன் நிர்பந்தத்தை ஏற்று உ.பி. ஆளுநராக நியமிக்கப்பட்டவர்தான் ரமேஷ் பண்டாரி. அவரது முயற்சியால் உருவான காங்கிரசு - பகுஜன் சமாஜ் கட்சி கூட்டணி, பிறகு வந்த உ.பி. தேர்தலில் பெரும்பான்மையைப் பிடிக்க முடியாமற் போனது. தேர்தல்கள் முடிந்ததும் ஆட்சி அமைப்பதற்கான வாய்ப்புக்களைப் பரிசீலிக்க வேண்டியவரும், மரபுப்படி பெரிய கட்சியான பாரதீய ஜனதா கட்சி ஆட்சி அமைக்க முதல் வாய்ப்பளிக்க வேண்டியவருமான ரமேஷ் பண்டாரி அப்படிச் செய்யாது பல நாட்கள் இழுத்தடித்து, இறுதியில் ஆளுநர் ஆட்சியைப் பிரகடனம் செய்தார். காங்கிரசு, முலயம் சிங் ஆகியோரின் கைப்பாவையாகவே உ.பி.யை ஆண்டார். பிறகு ஏற்பட்ட மாயாவதி, கல்யாண்சிங் அரசாங்கங்கள், அவரது தொடையில் முள்ளாகவே தைத்திருந்தன. எனவேதான், கிடைத்த வாய்ப்பை உடனடியாகப் பயன்படுத்திக் கொண்டு மீண்டும் ஆளுநராட்சிக்குப் பரிந்துரை செய்தார்.

ஆளுநர் ஆட்சிப் பிரகடனத்துக்கு மத்தியில் ஆளும் ஐக்கிய முன்னணிக் கட்சிகளிலேயேகூடப் பெரும்பான்மை ஆதரவில்லாத நிலையிலும், காங்கிரசு, முலயம் சிங் நிர்பந்தத்துக்குப் பணிந்தது, மத்திய அரசு. கல்யாண் சிங் ஆட்சியைக் கலைத்து, ஆளுநர் ஆட்சியைப் பிரகடனம் செய்யும் பரிந்துரையை மறுபரிசீலனைக்கென அரசுத் தலைவர் நாராயணன் திருப்பி அனுப்பிய போது, இஞ்சி தின்ற குரங்கின் நிலைக்குக் காங்கிரசும் ஐக்கிய முன்னணியும் தள்ளப்பட்டன. வேறு வழியின்றிப் பரிந்துரையை விலக்கிக் கொண்டன. ஆனால் விவகாரம் அத்துடன் முடியவில்லை. கட்சி மாறிய அத்தனை பேரையும் மந்திரிகளாக்கியது பாரதீய ஜனதா. அவர்களில் பலரும் வெளிப்படையாகத் தெரிந்த கிரிமினல் குற்றக் கும்பல்களின் தலைவர்கள். இதே பாணியை குஜராத்திலும் பின்பற்றி ஆட்சியைக் கைப்பற்றும் முயற்சியில் பாரதீய ஜனதா இறங்கியுள்ளது.

ரமேஷ் பண்டாரியைப் போல கிரிமினல் மூளைக்காரர்கள் மாநில ஆளுநர்களாக நியமிக்கப்படுவதும், அவர்கள் சட்டப்படியான, தேர்ந்தெடுக்கப்பட்ட பெரும்பான்மையான மாநில ஆட்சிகளை அப்பட்டமாக அதிகார முறைகேடுகளில் ஈடுபட்டு கலைப்பதும், கட்சிமாறிகளைக் கொண்டு பெரும்பான்மையாகும் கட்சிகளை

தொடர்ச்சி 18-ஆம் பக்கம்

படிப்பகம்

www.padippakam.com

# தி.மு.க.வின் தொழிற் கொள்கை:
# தமிழர் வாழ்வு பறிப்பு அந்நியருக்கு பாய் விரிப்பு

''ஐயோ! அரை வயிற்றுச் சோற்றிலும் மண்ணை அள்ளிப் போட்டுவிட்டார்களே!'' என்று புலம்பினார் அந்த ஏழைத் தாய். ''வத்திக்குச்சி கம்பெனியையும் மூடிட்டா நாங்க எங்க போயி எப்படி பொழைக்க முடியும்? பரம்பரை பரம்பரையா செஞ்சு வந்த தொழிலையும் பாவிங்க பறிச்சிட்டானுங்களே!'' என்று குமுறினார் ஒரு முதியவர்.

சிவகாசி, சாத்தூர், கோவில்பட்டி, விருதுநகர், இராசபாளையம் வட்டார மக்கள் தாராளமயம் - இயந்திரமயம் எனும் புதிய பொருளாதாரக் கொள்கையால் தீப்பெட்டித் தொழிலுக்கு ஏற்பட்டுள்ள பேரபாயத்தைக் கண்டு பீதியில் உறைந்து போயுள்ளார்கள். தமிழகம் முழுவதும் தீப்பெட்டித் தொழிலில் ஈடுபட்டுள்ள 8 இலட்சத்துக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் தங்களது எதிர்காலம் எரிந்து சாம்பலாகிப் போவதை அறிந்து வேதனையில் உழல்கிறார்கள்.

தீப்பெட்டி தொழிலில் ஏ,பி,சி,டி என்று நான்கு வகை உட்பிரிவுகள் உள்ளன. இதில் ''ஏ'' பிரிவு என்பது முழுக்கவும் இயந்திரத்தால் தீப்பெட்டிகளைத் தயாரித்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் நிறுவனங்களாகும். ''பி'' பிரிவு என்பது அரை இயந்திர வகைப்பட்டதாகும். மூன்றாவது வகையான ''சி'' பிரிவில் பெரும்பாலும் கையால் தயாரிக்கப்பட்டு சில வேலைகள் மட்டும் இயந்திரத்தால் செய்யப்படுபவையாகும். கடைசிப் பிரிவான ''டி'' வகையில் தான் முழுக்க முழுக்க மனிதர்களே கையாலேயே தீப்பெட்டி தயாரிக்கின்றனர். தென் மாவட்டங்களில் குடிசைத் தொழிலாக உள்ள இதில் ஏறத்தாழ 8 லட்சம் பேர் ஈடுபட்டுள்ளனர்.

புதிய பொருளாதாரக் கொள்கையின் படி தற்போது ''பி'' மற்றும் ''சி'' பிரிவுகளை இயந்திரமயமாக்கும் வேலைகள் தீவிரமாக நடந்து வருகின்றன. இப்பிரிவுகளுக்கு உற்பத்தி வரம்பு ஏதும் நிர்ணயிக்கப்படவில்லை. அதேசமயம் ''டி'' பிரிவுக்கு மட்டும் மாதத்துக்கு 4 ஆயிரம் பண்டல் (24 லட்சம் தீப்பெட்டிகள்) என வரம்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இயந்திரமயமாக்கலின் விளைவாக ''பி'' மற்றும் ''சி'' பிரிவுகள் ஒரே நாளில் இந்த 4 ஆயிரம் பண்டல் உற்பத்தியைத் தயாரித்துவிட முடியும். இதனால் கையால் தீப்பெட்டி தயாரிக்கும் ''டி'' பிரிவைச் சேர்ந்த எட்டாயிரத்துக்கும் மேற்பட்ட சிறுதொழில் நிறுவனங்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டு மூடுவிழாவை எதிர்நோக்கியுள்ளன.

வறட்சி நிலவும் தென் மாவட்டங்களில் பல கிராம மக்களின் வாழ்வுக்கு ஆதாரமாக இருப்பது தீப்பெட்டி தொழில்தான். அடிப்பெட்டி ஒட்டுவது, லேபிள் ஒட்டுவது, குச்சி அடுக்குவது முதலானவற்றில் பல பெண்களும் சிறுவர் - சிறுமிகளும் கடந்த ஐம்பது ஆண்டுகளாக ஈடுபட்டு வருகின்றனர். இது தான் வாழ்க்கை என்று நம்பியிருந்த அவர்களின் எதிர்காலம் இன்று இருளில் தள்ளப்பட்டுவிட்டது.

இப்பிரச்சினை குறித்து தமிழகத்தைச் சேர்ந்த மத்திய அமைச்சர்களான ப. சிதம்பரம், முரசொலி மாறன் ஆகியோரிடம் சிறு தொழில் தீப்பெட்டி உற்பத்தியாளர் சங்கப் பிரதிநிதிகள் முறையிட்டும் கூட, இன்று வரை எந்தப் பலனுமில்லை.

கடந்த செப்டம்பர் மாதத்தில் சிவகாசி, கோவில்பட்டி வட்டாரத்தில் சுமார் 100 கோடி ரூபாய் மதிப்புடைய தீப்பெட்டிகள் விற்பனையாகாமல் தேக்கமடைந்து நெருடிக்கடி தீவிரமானதும், இயந்திரமயமாக்கலைக் கைவிடக் கோரியும், குடிசைத் தொழிலாக உள்ள தீப்பெட்டித் தொழிலைக் காப்பாற்றக் கோரியும் செப்டம்பர் 29-ஆம் தேதியன்று தொழிலாளர்களும், தீப்பெட்டி நிறுவன உரிமையாளர்களும் அடையாள வேலை நிறுத்தமும், உண்ணாவிரதமும் மேற்கொண்டனர். சங்கப் பிரதிநிதிகள் தமிழக முதல்வரிடமும் அமைச்சர்களிடமும் முறையிட்டும் கூட தீப்பெட்டித் தொழிலைப் பாதுகாக்க தமிழக அரசு எந்த நடவடிக்கையும் எடுக்காமல் கை கட்டி நிற்கிறது.

தீப்பெட்டி தொழில் மட்டுமல்ல; திருப்பூரின் பின்னலாடைத் தொழிலும் புதிய பொருளாதாரக் கொள்கையாலும், அந்நிய மூலதன ஆதிக்கத்தாலும் பெரும் நெருக்கடியை எதிர் கொண்டுள்ளது. ''ஜாக்கி'', ''ஹேனெண்ட்ஸ்'' எனும் இரு அமெரிக்க நிறுவனங்கள் பல்லாயிரம் கோடி ரூபாய் மூலதனத்துடன் பின்னலாடை மற்றும் உள்ளாடைத் தொழிலில் இறங்கத் திட்டமிட்டுள்ளன. இதற்காக ''டான்டெக்ஸ்'' மற்றும் பெங்களூரைச் சேர்ந்த ''பேஜ் அப்பேரல்ஸ்'' நிறுவனங்களுடன் இவை ஒப்பந்தமிட்டுள்ளன. இந்தியாவிலுள்ள மேட்டுக்குடியினரின் தேவைகளை நிறைவு செய்வதுதான் தங்களது நோக்கம் என்று இவை கூறினாலும், நாளை நமது நாட்டின் உள்நாட்டுச் சந்தை முழுவதையும் இவை கைப்பற்றிக் கொள்ளும். இதனால் உள்ளூர் சிறுஉற்பத்தியாளர்கள் ஒழித்துக் கட்டப்படுவதோடு சாமானிய மக்களுக்கு இனி குறைந்த விலையில் உள்ளாடைகள் கிடைப்பதே அரிதாகி விடும்.

இது மட்டுமின்றி, இவை இந்தியாவின் பின்னலாடை உற்பத்தி மற்றும் ஏற்றுமதியைக் கைப்பற்றிக் கொள்ளும்போது மனித உழைப்பைச் சார்ந்து நின்று பின்னலாடை ஏற்றுமதியில் ஈடுபட்டுவரும் சிறு உற்பத்தியாளர்கள் முற்றாகத் துடைத்தெறியப்படுவர். இதன் விளைவாக ஏறத்தாழ 3 லட்சம் தொழிலாளர்கள் வேலை இழக்கும் நிலை ஏற்படும்.

ஏற்கெனவே தாராளமயக் கொள்கையின்படி பருத்தியையும் நூலையும் தடையின்றி ஏற்றுமதி செய்ய அனுமதியளித்ததன் விளைவாக ''ஹொசைரி'' நூல் விலை தாறுமாறாக உயர்ந்துள்ளது. பின்னலாடைத் தொழிலுக்கு அளிக்கப்பட்டு வந்த வரிவிலக்கும் மானியமும் நிறுத்தப்பட்டு இப்போது புதிய வரிகள் விதிக்கப்பட்டுள்ளன. இதனால் இத்தொழிலில் ஈடுபட்டு வந்த சிறு உற்பத்தியாளர்கள் நசியத் தொடங்கினர். ஏறத்தாழ 60,000 தொழிலாளர்கள் வேலையிழந்தனர்.

திருப்பூர் அருகே முதலிபாளையத்தில் ரூ. 20 கோடி செலவில் தமிழக அரசால் கட்டப்பட்ட பின்னலாடைத் தொழிற்பேட்டை இன்னமும் திறக்கப்படாமல் பாழடைந்து கிடக்கிறது. இதுதவிர, திருப்பூர் ஏற்றுமதியாளர்கள் சங்கத்தின் (TEA) சார்பில் கட்டப்பட்ட மற்றொரு பின்னலாடை தொழிற்பேட்டையும் இன்னமும் திறக்கப்படாமல் முடங்கிக் கிடக்கிறது. ஒரு வேளை இத்தொழிற்பேட்டைகள் திறக்கப்பட்டாலும் அங்கே தொழில் தொடங்க சிறு முதலீட்டாளர்கள் முன் வருவார்களா என்பதற்கும் உத்திரவாதமில்லை. ஏனெனில், புதிய பொருளாதாரக் கொள்கையின் விளைவாக நூலிழை விலையேற்றத்தாலும், பன்னாட்டு நிறுவனங்களின் வருகையாலும் பின்னலாடைத் தொழில் வேகமாக நசிந்து வருகிறது. அதைப் பாதுகாத்து வளர்க்க தமிழக அரசு எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை.

★ காலணி தயாரிப்புத் தொழில், சிறு தொழில் துறையில் தனிச்சிறப்பாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கையினால் காலணி தயாரிக்கும் தொழிலில்

பிரான்சு நாட்டின் ரினால்ட் மற்றும் இந்தோனேசிய டெக்ஸ்-மேக்கோ நிறுவன அதிகாரிகளுடன் தரகர் கருணாநிதி.





படிப்பகம்

தமிழகத்தில் ஆயிரக் கணக்கானோர் ஈடுபட்டுள்ளனர். இப்போது இவர்களது பிழைப்பிலும் மண் விழுந்துவிட்டது. தீப்பெட்டி தொழிலைப் போலவே காலணி தயாரிப்புத் தொழிலிலும் இப்பந்திரமயமாக்கம் வேகமாக திணிக்கப்பட்டு வருகிறது. ''காலணிகளை பெரிய அளவில் உற்பத்தி செய்யவும் ஏற்றுமதி செய்யவும் இதர நாடுகளுடன் போட்டியிடவும் பெருமளவு மூலதனமும் நவீனப்படுத்தலும் அவசியமாகிறது. சிறு தொழில் துறையில் அவ்வளவு முதலீடு செய்ய முடியாதபடி வரம்புகள் உள்ளன. எனவே சிறுதொழில் துறை ஒதுக்கீட்டிலிருந்து காலணி தயாரிப்பை நீக்கி பெருந்தொழில் துறையில் சேர்க்க வேண்டும்'' என்று தோல் ஏற்றுமதிக் குழுமம் (சி.எல்.இ) எனும் பெருமுதலாளிகளின் கூட்டமைப்பு கோரி வருகிறது. நிதியமைச்சர் சிதம்பரமும் தொழிலமைச்சர் மாறனும் இதற்கு ஆவண செய்வதாக உறுதியளித்துள்ளனர்.

★ தமிழக அரசின் ஆதரவின்மை, ஊக்கமின்மை காரணமாக எவர்சில்வர் பாத்திர சிறுதொழில் நிறுவனங்கள் அண்மைக் காலமாக நசியத் தொடங்கியுள்ளன. இத்தொழிலுக்குத் தேவையான தகடுகள் டெல்லி, அவுரங்காபாத்திலிருந்து வருகின்றன. புதிய பொருளாதாரக் கொள்கையினால், இத்தகடுகளுக்குக் கூடுதல் வரி விதிக்கப்படுகின்றன. சேலத்திலிருந்து தகடுகள் பெறலாம் என்றாலும், அவை மலிவானதாக இல்லை. உற்பத்திச் செலவுகள் அதிகரிப்பு, வரிச்சலுகை - மானியம் இல்லாமை முதலானவற்றால் சாத்தூர், கும்பகோணம், சென்னை முதலான இடங்களிலுள்ள பல எவர்சில்வர் பட்டறைகள் தரகு முதலாளித்துவ பெரு நிறுவனங்களோடு போட்டியிட முடியாமல் மூடப்பட்டு விட்டன.

★ சிகரெட் உற்பத்தியில் ஏகபோகமாக உள்ள பன்னாட்டு நிறுவனங்களுக்கு அளவும் தரமும் குறைந்த ''மினி சிகரெட்டுகள்'' தயாரித்துக் கொள்ள அனுமதியளித்ததன் விளைவாக, பீடித் தொழில் நலிவடைந்து போய்விட்டது.

★ ''அயோடின் கலந்த உப்பு'' ஆடம்பரமாகச் சந்தைக்கு வந்த பிறகு, உப்பு காய்ச்சுவதைக் குடிசைத் தொழிலாகக் கொண்டுள்ள ஆயிரக்கணக்கான குடும்பங்கள் பிழைக்க வழியின்றித் தவிக்கின்றன.

★ தாராளமயக் கொள்கையின்படி, நூலிழைகளைத் தடையின்றி ஏற்றுமதி செய்ய அனுமதித்ததன் விளைவாக, நூல் விலை தாறுமாறாக உயர்ந்து விசைத்தறி தொழில் மீள முடியாத நெருக்கடியில் சிக்கித் தவிக்கிறது. இதோடு, கடுமையான மின் கட்டண உயர்வும் சேர்ந்து இத்தொழிலை மேலும் நலிவடைச் செய்து பல்லாயிரக்கணக்கான விசைத்தறி தொழிலாளர்களின் எதிர்காலத்தைக் கேள்விக்குறியாக்கியுள்ளது.

புதிய பொருளாதாரக் கொள்கையால் சிறு தொழில் நிறுவனங்கள் மூடுவிழாவை



திருப்பூர்-முதலிபாளையத்தில் இன்னும் திறக்கப்படாமல் பாழடையும் பின்னலாடைத் தொழிற்பேட்டை.

எதிர் நோக்கி உள்ளதற்கு இவை ஒரு சில சான்றுகள்தான். இன்னும் மருந்து, பல்பொடி, மின்சாதனங்கள், எழுது பொருட்கள் எனப் பல்வேறு சிறு தொழில் நிறுவனங்கள் நலிவடைந்துள்ளதைப் பட்டியலிடப் பக்கங்கள் போதாது.

இருண்டு கிடக்கும் தமிழகத்தில் ஒளிவிளக்கேற்றப் போவதாகக் கூறிக் கொண்டு ஆட்சிக்கு வந்த கருணாநிதி, தொழில் துறையில் தமிழகத்தை முதலிடத்துக்கு உயர்த்தப் போவதாக வாக்குறுதி அளித்தார். மத்திய அரசின் அமைச்சரவையில் தமிழகத்தைச் சேர்ந்த ப. சிதம்பரமும், முரசொலி மாறனும் நிதி மற்றும் தொழிலமைச்சர்களாகப் பதவியேற்றதும் தமிழக மக்கள் மிகவும் எதிர்பார்ப்புடன் இருந்தனர்.

பிறவியிலேயே ஊமையாகிவிட்ட குழந்தை, நீண்ட சிகிச்சைக்குப் பிறகு வாயைத் திறந்து பேசப் போவதைக் கேட்க ஆவலோடு நின்ற பெற்றோரிடம், ''நீ எப்போ அம்மா விதவையாவாய்?'' என்று கேட்டதாம்! அதைப் போலத்தான், பல லட்சக் கணக்கான மக்களின் வாழ்வுக்கு ஆதாரமான சிறு தொழில் நிறுவனங்களை மூடிவிட்டு, தமிழகத்தை நிரந்தரமாக இருளில் தள்ளிவிட்டுள்ளது இக்கும்பல்.

மறுபுறம், தரகுப் பெருமுதலாளித்துவ நிறுவனங்களுக்கும், பன்னாட்டு நிறுவனங்களுக்கும் தொழில் தொடங்க உடனடியாக நிலம் ஒதுக்கீடு, வரிச்சலுகை, சாலை, மின்வசதி எனக் கணக்கற்ற சலுகைகளை வாரியிறைத்து பட்டுக் கம்பளம் விரித்து வரவேற்கிறது. மூடிக் கிடக்கும் ஸ்டாண்டர்டு மோட்டார் ஆலையைத் திறக்க எந்த முயற்சியும் மேற்கொள்ளாத அதே சமயம், 1400 கோடி ரூபாய் முதலீட்டில் தென்கொரிய ஹுண்டாய் கார் தொழிற்சாலைக்கு தி.மு.க. அரசு அடிக்கல் நாட்டியது.

அதைத் தொடர்ந்து,

• தென் கொரியாவின் கும்ஹோ நிறுவனத்துடன் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (டிட்கோ) இணைந்து திருப்பெரும்புதூர் அருகே ரூ. 350 கோடி முதலீட்டில் டயர் உற்பத்தி தொழிற்சாலை.

• ரூ. 40 கோடி முதலீட்டில் சென்னை அருகிலுள்ள இருங்காட்டுக்கோட்டையில் தென்கொரிய இல்ஜின் நிறுவனத்தின் கார் உதிரிப்பாகத் தொழிற்சாலை.

• தென்கொரிய தேரிம் நிறுவனத்தின் ரூ. 30 கோடி முதலீட்டில் கார் உதிரிப் பாகத் தொழிற்சாலை.

• ஜப்பானின் மிட்சுபிஷி நிறுனத்துடன் இந்துஸ்தான் மோட்டார் நிறுவனம் கூட்டுச் சேர்ந்து திருவள்ளூரில் அமைக்கவுள்ள ''லான்சர்'' கார் உற்பத்தி ஆலை.

• பிரான்ஸ் நாட்டின் ரினால்ட் நிறுவனமும் இந்தோனேஷியாவின் டெக்ஸ் மாக்கோ நிறுவனமும் இணைந்து நிறுவவுள்ள கனரக வாகனத் தொழிற்சாலை.

• ஜப்பானைச் சேர்ந்த மட்சுஷிதா நிறுவனம் ரூ. 50 கோடி முதலீட்டில் இருங்காட்டுக் கோட்டையில் குளிர்பதன சாதனம் தயாரிக்கும் தொழிற்சாலை.

• திரவ எரிபொருள் உதவியுடன் மலேசியாவின் தெனாகா நேஷனல் பெர்ஹாட் நிறுவனம் ரூ. 1500 கோடி முதலீட்டில் நிறுவவுள்ள 4 சிறிய மின் நிலையங்கள்.

— எனப் பட்டியலிட்டுக் காட்டி முதல்வர் கருணாநிதியும் அமைச்சர்களும் தமிழகம் தொழில் வளர்ச்சியில் நாலுகால் பாய்ச்சலில் முன்னேறி வருவதாக மார் தட்டுகிறார்கள். தமிழகத்தில் 1991-லிருந்து 1995 மே மாதம் முடிய ரூ. 1,699 கோடி அளவுக்குத்தான் அந்நிய முதலீடுகள் வந்தன. ஆனால் 1996 ஜூனிலிருந்து 1997 ஜூலை வரை, ஒரே ஆண்டில் ரூ. 4,038 கோடி அந்நிய முதலீடுகள் கிடைத்துள்ளன என்று புள்ளி விபரங்களைக் கூறித் தமது தரகு வேலையையே பெரும் சாதனையாக விளம்பரப்படுத்தி வருகிறார்கள். தமிழகத்தில் கடந்த ஓராண்டில் 1,12,000 கோடி முதலீட்டில் 318 தொழிற்சாலைகள் புதிதாகத் திறக்க ஒப்பந்தமிடப்பட்டுள்ளன என்று தமது சாதனைகளைக் காட்டி பூரித்துப் போகிறார்கள்.

இந்த அந்நிய ஏகாதிபத்திய நிறுவனங்களால் தொழில் வளர்ச்சியும் வேலை வாய்ப்பும் பெருகும் என்பதற்கு எந்த அடிப்படையும் கிடையாது. ஏனெனில், இந்நிறுவனங்கள் உற்பத்தி செய்யும் பொருட்கள் அனைத்தும் ஏற்றுமதிக்கானவை; உள்நாட்டுச் சந்தைக்கானதல்ல. சர்வதேசச் சந்தையின் தேவைக்கேற்பவே அவற்றின் உற்பத்தி அமையும். கிடைக்கும் இலாபத்தை இந்நிறுவனங்கள் தமது நாட்டுக்கு கொண்டு செல்லுமே தவிர, இங்கு தொழிலை விரிவுபடுத்தவோ, மறுமுதலீடு செய்யவோ முன்வராது. அதிநவீன எந்திரங்களைக் கொண்டுள்ள இந்நிறுவனங்களல் சில ஆயிரம் பேருக்குத்தான் வேலை கிடைக்கும். மேலும் இந்நிறுவனங்கள் அமைந்துள்ள தொழிற்பேட்டைகள், சுதந்திர வர்த்தக வளையங்கள், தொழில் பூங்காக்களில் இந்திய தொழிற்சட்டங்கள் செல்லுபடியாகாது. அந்நிய நிறுவனங்கள் இட்டதே சட்டமாகும். அரசின் சலுகை, வசதிகளை அனுபவித்துக் கொண்டு, இந்திய மக்களின் மலிவான உழைப்பைச் சுரண்டி, குறுகிய காலத்தில் கொழுத்த இலாபமீட்டுவதே இந்நிறுவனங்களின் நோக்கமாகும்.



படிப்பகம்

www.padippakam.com

குடிக்கக் கூழில்லாதபோது கொண்டைக்குப் பூவைத்த கதையாக, ஆயிரக்கணக்கான சிறு தொழில் நிறுவனங்களை மூடிவிட்டு, விரல்விட்டு எண்ணக்கூடிய சில அந்நிய நிறுவனங்களை அரசின் சலுகை - உதவியோடு நிறுவுவதையே தி.மு.க. அரசு தனது கொள்கையாகக் கொண்டுள்ளது. சிறு தொழில் மட்டுமல்ல; தமிழகத்தின் உயிராதாரமான விவசாயத்தை மேம்படுத்த புதிய வளர்ச்சித் திட்டங்களோ, பாசனத் திட்டங்களோ எதுவும் கிடையாது. காவிரியில் போதிய நீரின்றி தஞ்சை, திருச்சி, நாகை, திருவாரூர் மாவட்ட விவசாயிகள் பரிதவிக்கின்றனர். தென் மாவட்டங்களில் கடந்த மூன்றாண்டுகளாக மழையின்மையால் வறட்சி நிலவுகிறது. இந்நிலையில், மலர் பயிரிட்டு ஏற்றுமதி செய்தால் அந்நியச் செலவாணி கிடைக்கும் என்று விவசாயிகளிடம் வக்கிரமாக உபதேசிக்கிறார்கள், தி.மு.க. அமைச்சர்கள். விவசாயத்தைப் புறக்கணித்துவிட்டு, ஓசூரில் மலர் வளர்ப்புக்கான தொழில் பூங்காவை அந்நிய நிறுவனங்களுடன் சேர்ந்து தமிழக அரசு அமைக்கப் போவதாக அறிவிக்கிறார், அமைச்சர் ஆற்காடு வீராசாமி.

இவையனைத்தும், அந்நிய ஏகாதிபத்தியங்களின் தரகர்களாக மாறிவிட்ட தி.மு.க. ஆட்சியில் சூரியன் உதிக்கவில்லை; மாறாக, மேற்கில் மறைந்து தமிழகத்தை இருள்சூழப் போவதையே எச்சரிக்கையாக உணர்த்துகின்றன.

• மனோகர்

# பீரங்கிக் கொள்ளையன் கல்லறையைத் தட்டும் ஹெலிகாப்டர் ஊழல்

பீரங்கித் திருடன் பாசிச ராஜீவ் சாவுடன் சேர்ந்து அவரது இதர ஊழல் - கொள்ளைக்கான ஆதாரங்களையும் புதைத்துவிட்டதாக காங்கிரசு கயவாளிகள் கனவு காணும் நேரத்தில், இப்போது வெஸ்ட்லாந்து ஹெலிகாப்டர் ஊழல் புதிய ஆதாரங்களுடன் வெளிவந்து, அவர்களை அச்சுறுத்திக் கொண்டிருக்கிறது.

1986-ல் ராஜீவ் பிரதமராக இருந்தபோது பிரிட்டனைச் சேர்ந்த வெஸ்ட்லாந்து நிறுவனத்திடமிருந்து 21 ஹெலிகாப்டர்களை இந்திய அரசு வாங்கியது. அன்றைய ரூபாய் மதிப்பில் ரூ. 117 கோடியும், ஹெலிகாப்டர்களை இறக்குமதி செய்து இயக்குவதற்காக ரூ. 5 கோடியும் செலவிடப்பட்டது. 1986 செப்டம்பர் மற்றும் 1988 பிப்ரவரி ஆகிய இரு தவணைகளில் அனைத்து ஹெலிகாப்டர்களும் வந்திறங்கின. ஆனால் இவற்றில் எந்தவொரு ஹெலிகாப்டரும் சரிவர இயங்கவில்லை.

1988-ம் ஆண்டில் காஷ்மீரிலுள்ள வைஷ்ணோ தேவி கோயிலருகே ஒரு வெஸ்ட்லாந்து ஹெலிகாப்டர் விழுந்து நொறுங்கியது. 1989-ல் நாகாலாந்து தலைநகர் கொஹிமா அருகே மற்றொன்று வெடித்துச் சிதறியது. இவ்விரு விபத்துகளைத் தொடர்ந்து விமான ஓட்டிகள், வெஸ்ட்லாந்து ஹெலிகாப்டர்களை விண்ணில் செலுத்தவே மறுத்து விட்டனர்.




இந்த ஹெலிகாப்டர்களை உற்பத்தி செய்யும் பிரிட்டனிலேயே இவை பயன்பாட்டில் இல்லை. மேலும் வெஸ்ட்லாந்து நிறுவனமும் ஒப்பந்தப்படி உதிரிப் பாகங்களை வழங்கவில்லை. இதனால் கடந்த பத்தாண்டுகளாக இவை இயக்கப்படாமல் இன்று துருப்பிடித்துப் போய்விட்டன. இனி இவற்றைச் சீரமைத்து இயக்கவும் முடியாமல் போன நிலையில், இந்திய அரசு இவற்றை காயலாங் கடையில் போட முடிவு செய்து ரூ. 51 கோடிக்கு ஏலத்துக்கு விடுவதாக அண்மையில் சர்வதேச டெண்டர் விடுத்துள்ளது.

1989-ல் மத்திய கணக்கு - தணிக்கை அதிகாரிகள் குழு (CAG), வெஸ்ட்லாந்து ஹெலிகாப்டரால் ஏற்பட்ட நட்டம் பற்றி விசாரிக்கக் கோரியது. ஆனால் ஹெலிகாப்டர் வாங்கியதில் கோடி கோடியாய் சுருட்டிய ராஜீவ் கும்பல், இம்மோசடியை மூடிமறைப்பதிலேயே குறியாய் இருந்தது.

பின்னர் ஆட்சிக்கு வந்த வி.பி.சிங் தலைமையிலான தேசிய முன்னணி அரசு, இம்மோசடி பற்றி விசாரணை நடத்த உத்தரவிட்டது. ஆனால் தே.மு. அரசு விரைவிலேயே கவிழ்ந்து விசாரணை முடக்கப்பட்டு விட்டது. அதன் பிறகு பதவிக்கு வந்த சந்திரசேகர், நரசிம்மராவ் அரசுகள் இந்த ஊழல் விவகாரத்தை ஆழக்குழிதோண்டிப் புதைத்துவிட்டன. தற்போது துருப்பிடித்துக் கிடக்கும் ஹெலிகாப்டர்களை ஏலம் விடுவதையொட்டி, இந்த ஊழல் விவகாரம் மெதுவாகக் கசியத் தொடங்கிய போதிலும், காங்கிரசு தயவில் ஆட்சி நடத்தும் குஜ்ரால் அரசு இந்த விவகாரம் பற்றி வாயே திறக்காமல் பதவியைத் தக்க வைத்துக் கொள்வதிலேயே குறியாக உள்ளது.

போபர்ஸ் பீரங்கி பேர ஊழலை காங்கிரசு கயவாளிகள் மூடிமறைத்தாலும், சுவீடன் நாட்டுப் பத்திரிகைகள் புதிய புதிய ஆதாரங்களுடன் அம்பலப்படுத்தியதைப் போல, வெஸ்ட்லாந்து ஹெலிகாப்டர் ஊழலை இந்திய ஆட்சியாளர்கள் மூடி மறைத்து வரும் வேளையில், கடந்த செப்டம்பர் 15-ம் நாளன்று பிரிட்டிஷ் அரசே இந்த ஊழல் பற்றி விசாரணை நடத்த உத்திரவிட்டுள்ளது.

இரும்புத் தலைவியாக வர்ணிக்கப்பட்ட அன்றைய பிரிட்டிஷ் பிரதமர் தாட்சர், உலக வளர்ச்சி இயக்கத் திட்டத்தின்படி, "இந்தியாவில் ஏற்பட்ட எதிர்பாராத திடீர் இழப்புகளுக்கான உதவி" என்ற பெயரில் வெஸ்ட்லாந்து ஹெலிகாப்டர்களை இந்தியாவின் தலையில் கட்டி ஊழல் - மோசடிகளில் ஈடுபட்டுள்ளார் என்ற உண்மை இப்போது நிருபணமாகியுள்ளது. 1988-லேயே தாட்சரின் மோசடிகளை அன்று எதிர்க்கட்சியாக இருந்த தொழிற்கட்சி எம்.பி.க்கள் பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் அம்பலப்படுத்தினார். டாம் டாலியெல் என்ற எம்.பி.க்கு கொலை மிரட்டல்கள் வந்தன. இப்போது தொழிற்கட்சியினர் ஆட்சிக்கு வந்ததும், தாட்சர் ஆட்சியில் நடந்த ஹெலிகாப்டர் ஊழல் விவகாரம் தோண்டி எடுக்கப்பட்டு, விசாரணைக்கு உத்திரவிடப்பட்டுள்ளது.

நலிவடைந்து போயிருந்த வெஸ்ட்லாந்து நிறுவனம், இந்தியாவுக்கு ஹெலிகாப்டர்களை விற்றதும், அதன் பங்குகளை சுவிஸ் நாட்டில் இயங்கும் தமது பினாமி நிறுவனத்தின் மூலம் இத்தாலி நாட்டு பெருமுதலாளித்துவ நிறுவனம் அதிக அளவில் வாங்கியது. அதைத் தொடர்ந்து அந்த இத்தாலிய நிறுவனத்தின் மதிப்பு உயர்ந்தது. அதன் பங்கு விலையும் உயர்ந்தது. ஹெலிகாப்டர் விற்பனை மூலம் வெஸ்ட்லாந்து நிறுவனத்தின் பங்குகளை அடிமாட்டு விலைக்கு வாங்கி இத்தாலிய நிறுவனம் பூதாகரமாக வளர்வதற்கு அரசு நிதியைக் கேடாகப் பயன்படுத்தி தாட்சர் மோசடி செய்துள்ளார் என்று தொழிற்கட்சியினர் குற்றம் சாட்டுகின்றனர். இத்தாலிய மருமகனாகிய ராஜீவ், மக்களின் வரிப்பணத்தை வாரியிறைத்து துருப்பிடித்த ஹெலிகாப்டர்களை ஏன் வாங்கவேண்டும்? இதில் ராஜீவின் இத்தாலிய மனைவி சோனியாவின் பங்கு என்ன? இந்த மோசடியில் தாட்சரும் ராஜீவ் கும்பலும் சுருட்டியது எவ்வளவு? இதன் பின்னணியில் யார் யார் உள்ளனர்? என்பன கோடி ரூபாய் கேள்விகள்!

• குமார்



படிப்பகம்

www.padippakam.com

## இந்திய - பாக். எல்லை மோதல்கள் :

# 'தேசிய' வெறிக்கு உயிர்பலிகள்

செப்டம்பர் 30, 1997 ஜம்மு - காஷ்மீரின் இந்திய ஆக்கிரமிப்புப் பகுதியில் உள்ள கார்கில் நகர் மீது திடீரென குண்டு மழை பொழிந்தது. ராக்கெட்டுகள் ஏவிவிடப்பட்டன. 17 அப்பாவி மக்கள் மாண்டனர். 30-க்கும் மேற்பட்டோர் கடுமையாக காயம்பட்டனர். கட்டிடங்கள் பல தரைமட்டமாயின. ஒரு பள்ளியும், மசூதியும் இதிலடங்கும்.

ஜம்மு - காஷ்மீரின் பாகிஸ்தான் ஆக்கிரமிப்புப் பகுதியிலிருந்து பாகிஸ்தான் இராணுவம் நடத்திய தாக்குதல்தான் இது. உடனே இதற்கு பதிலடியாக இந்திய இராணுவமும் எதிர்த்தாக்குதல் நடத்தியது. பாகிஸ்தான் இராணுவ பங்கர்கள் பல அழிக்கப்பட்டன. சுமார் 51 இராணுவத்தினர் கொல்லப்பட்டதாக இந்திய இராணவம் கூறுகிறது. 'அப்படி ஏதுமில்லை; அப்பாவி பொது மக்கள்தான் 20 பேர் கொல்லப்பட்டனர்' என பாகிஸ்தான் இராணுவம் எதிர்க் குற்றச்சாட்டு வைக்கிறது.

ஜம்மு - காஷ்மீரை இந்தியா, பாகிஸ்தான் இரு நாடுகளும் ஆக்கிரமித்துக் கொண்டுள்ளன. இதை முழுமையாக யார் கைப்பற்றுவது என இரண்டு முறை போரையும் நடத்தியுள்ளன. பல சுற்று பேசியாகிவிட்டது. ஆனாலும் ஒரு தீர்வு எட்டப்படவில்லை. ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட், செப்டம்பர் மாதங்களில் இரண்டு பேரும் ஆக்கிரமித்த எல்லைப் பகுதியில் துப்பாக்கி சூடு நடத்துவதும் போர் வந்துவிட்டது என பதற்றம் உருவாவதும் வழமையான ஒன்று.

சென்ற ஆண்டு காஷ்மீரத்தில் ஆக்கிரமித்த எல்லைப் பகுதியில் 35 முறை இருபுறமும் தாக்குதல் நடத்தப்பட்டது. இந்த ஆண்டு செப்டம்பர் முடிய 40 முறை தாக்குதல் நடந்துள்ளது. குளிர் காலத்திற்கு முன் இன்னமும் நடக்கலாம்.

1965, 1971 யுத்தங்களில் இறந்தவர்களை விட இந்த எல்லைப்புற தாக்குதல்களில் மிக அதிகமான இராணுவத்தினரும் பொது மக்களும் இறந்துள்ளதாக ஒரு புள்ளி விவரம் கூறுகிறது. தவிர இரு புறமும் படையினர் குவிக்கப்பட்டு எந்நேரமும் தாக்குதலுக்கு தயாராயிருப்பதால் இராணுவ செலவும் மிக அதிகமாகிறது.

ஒருபுறம், இரு நாடுகளிலுமே உள்நாட்டில் வறுமை, வேலையில்லாத் திண்டாட்டங்கள் என சமூக அவலங்கள் அதிகரித்து வருகின்றன. இவற்றிலிருந்து மக்களின் கவனத்தை திசை திருப்பவே எல்லையில் போர் என அடிக்கடி தாக்குதல் நடத்துவது, தேசிய வெறியைத் தூண்டி விடுவது என இரு நாடுகளும் தொடர்ந்து செய்கின்றன.

மற்றொரு புறம், உலக அளவில் உலக மயம், தாராள மயம் என பொருளாதார - அரசியல் மாற்றங்கள் இரு நாடுகளிலும் புதிய நிலைமைகளைக் கோருகின்றன. இந்தியாவில் உற்பத்தியாகும் கூடுதல் மின்சாரத்தை பாகிஸ்தான் கேட்கிறது. ரசியாவிலிருந்தும் சிதைந்த சோவியத்திலிருந்து பிரிந்த நாடுகளிலும் கிடைக்கும் எரிவாயுவைப் பெற இந்தியா விரும்புகிறது. அதற்கான குழாய்கள் பாகிஸ்தான் வழியாகவே வரவேண்டும். பாகிஸ்தானும் எரிவாயு பெற விழைகிறது. இவை மட்டுமின்றி எண்ணற்ற வழிகளில் இரு நாடுகளுக்கிடையே பொருளாதார உறவு தேவைப்படுகிறது.

இரு நாடுகளுக்கிடையே உள்ள பகைமை உறவை மாற்றியமைக்க வேண்டிய கட்டாயம் நிலவுகிறது. எனவே கடந்த ஏப்ரல் இரண்டாவது வாரத்தில் இரு நாடுகளின் வெளியுறவுச் செயலாளர்கள் மட்டத்தில் முதல் கட்ட பேச்சு வார்த்தை நடந்தது.

இதைத் தொடர்ந்து 'மாலி'யில் இரு பிரதமர்களும் சந்தித்த போது காஷ்மீர் பற்றி பேச்சு வார்த்தை நடந்தது. இக்கட்டத்தில் எல்லைப் பகுதியில் பரஸ்பர தாக்குதலும் பதற்றமும் நிலவியது. இரு நாடுகளும் ஒருவருக்கொருவர் குற்றம் சாட்டினர்.

அடுத்து, செப்டம்பர் இறுதியில் ஐ.நா. சபையின் பொதுக் குழுவில் பேசச் சென்ற இரு பிரதமர்களும் சந்தித்தனர். அப்போது பாக். பிரதமர் எல்லையில் இராணுவத்தைக் குறைத்துக் கொள்ளலாம் என முன் வைத்தார். பயங்கரவாதிகளுக்கு பயிற்சியளித்து இந்தியப் பகுதி காஷ்மீருக்குள் பாகிஸ்தான் அனுப்பி வருகிறது. அதுவரை எல்லையில் இராணுவத்தை குறைப்பதென்ற பேச்சுக்கே இடமில்லை என மறுத்துவிட்டார் குஜ்ரால்.

இரு பிரதமர்களும் தனித்தனியே அமெரிக்க அரசுத் தலைவர் கிளிண்டனை சந்தித்தனர். பாகிஸ்தான் பிர்தமர், காஷ்மீர் பிரச்சினையில் அமெரிக்கா தலையிட்டு பேச வேண்டும் என முதலிலிருந்தும், நேரிலும் வலியுறுத்தினார். இந்தியாவோ கிளிண்டன் அது பற்றி பேசுவதாயிருந்தால் சந்திக்க முடியாது என முதலிலேயே மறுத்து விட்டதால், கிளிண்டன் அது பற்றி பேசவில்லை. பாக். நலனுக்காக இந்தியாவுடன் தேவையின்றி முரண்பட அமெரிக்கா விரும்பவில்லை.

ஐ.நா. சபையிலும் நவாஸ் ஷெரிப் காஷ்மீர் பிரச்சினையை பெரிதாக பேசினார். குஜ்ராலோ இது பற்றி பேசவேயில்லை. இந்த ஆகஸ்ட், செட்டம்பரிலும் எல்லையில் பெரிய அளவு தாக்குதல் தொடர்ந்தது.

எல்லைப் பிரச்சினையால் வீண் செலவு, உயிர் இழப்பு, மேலும் பொருளாதார உறவுக்கும் தடை என்ற நிலையை மாற்ற இரு தரப்பிலும் பேச்சு வார்த்தை நடத்த முயல்கின்றனர். அதே நேரம் இரு நாடுகளிலுமுள்ள ஆளும் வர்க்க கும்பல்கள் ஒரு சமாதானம் வந்துவிடக் கூடாது என்பதில் உறுதியாக உள்ளனர். ஏனெனில் மக்களின் கவனத்தை திசை திருப்ப இது ஒரு நம்பகமான துருப்புச் சீட்டாக உள்ளது.

எல்லை மோதலின் கோரம்: பாகிஸ்தானின் தாக்குதலில் உறவினர்களை இழந்து கதறும் கார்கில் நகரப் பெண்கள்.



கடந்த ஏப்ரல் மாதம் இதே கார்கில் நகரில் பாகிஸ்தான் தாக்குதலுக்கு மூவர் பலியானார்கள். பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு பகுதியில் சாம்ப், கோட்லீ, பாக், சகோதி, அத்முகம், துத்நியல் நகரங்களும் இந்திய ஆக்கிரமிப்புப் பகுதியில் கார்கில், குகரன், தித்வால், உரி, பூன்ச், ரஜௌரி, நௌசரா நகரங்களும் இப்படி ஆண்டு தோறும் மாறி மாறி தாக்குதலுக்கு உள்ளாகின்றன. செத்து மடிவது அப்பாவி காஷ்மீர் மக்களும்தான்.

காஷ்மீர் மக்களோ தங்களது உரிமைகளுக்கான சுயநிர்ணய உரிமைப் போரை தொடர்ந்து நடத்துகின்றனர். இது பாகிஸ்தானின் சதி என இந்தியா தனது இராணுவத்தைக் குவித்து கொலை வெறியாட்டம் போடுகிறது. இதையே காரணமாக்கி, முஸ்லிம் மதவெறியைத் தூண்டி, காஷ்மீரை முற்றாக ஆக்கிரமிக்க முயல்கிறது பாகிஸ்தான்.

• பாரி



படிப்பகம்

www.padippakam.com

# உத்திரப் பிரதேசம் :

# சாதி - மதவாதிகளின் அரசியல் விபச்சார அசிங்கம்

உத்திரப் பிரதேசத்தில் அதிகாரத்தைத் தக்க வைத்துக் கொள்வதற்காக பா.ஜ.க. திரைமறைவில் நடத்திய தில்லுமுல்லுகள், குதிரை வியாபாரம்; ''இந்துத்துவம்தான் நாட்டின் மிகப்பெரிய எதிரி'' எனக் கொள்கை பேசித் திரிந்த கட்சிகளிலேயே - காங்கிரசு, ஜனதாதளம், பகுஜன் சமாஜ் கட்சி - ஒரு பிரிவு உடைத்துக் கொண்டு பா.ஜ.க.விற்கு நேரடியாக ஆதரவு தந்திருப்பது; நம்பிக்கை வாக்கெடுப்பு நாளன்று உ.பி. சட்டசபையில் அரங்கேறியே வன்முறை, ரௌடித்தனங்கள் — இவை அனைத்தும் நாடாளுமன்ற ஜனநாயகத்தின் 'மாண்பை'யும், ஓட்டுச்சீட்டு அரசியல் கட்சிகளின் யோக்கியதையையும் மீண்டும் ஒரு முறை சந்தி சிரிக்க வைத்துவிட்டன. பா.ஜ.க. அணிந்திருந்த ''கொள்கைப் பூர்வமாக வளர்த்தெடுக்கப்பட்ட கட்சி'' என்ற முகமூடி கிழிந்து கந்தலாகிப் போனதோடு, ''மேல் சாதியினர்தான் உ.பி.யை ஆள வேண்டும்'' என்ற அதனின் சாதி வெறியும் பளிச்சென்று அம்பலமாகிப் போனது.

★☆★

உ.பி. சட்டமன்றத் தேர்தலில் பா.ஜ:க., சமாஜ்வாதி கட்சி உள்ளிட்டு எந்தவொரு கட்சிக்கும் அறுதிப் பெரும்பான்மை கிட்டவில்லை. அத்தேர்தல் முடிவுகள் வெளி வந்தவுடனேயே பிற கட்சிகளை உடைத்து, ஆட்சியில் அமர பா.ஜ.க. எடுத்த திரைமறைவு வேலைகள் தோல்வியில் முடிந்தன. இதையடுத்து உ.பி.யில் ஆளுநர் ஆட்சி அமலுக்கு வந்தது. இது சமாஜ்வாதி கட்சித் தலைவரான முலயம் சிங்குக்குச் சாதகமாக அமைந்தது. ஐக்கிய முன்னணி அரசில் பாதுகாப்புத்துறை அமைச்சராக இருந்து வரும் முலயம், ஆளுநர் ரொமேஷ் பண்டாரியைக் கைப்பாவையாக வைத்துக் கொண்டு உ.பி.யை மறைமுகமாக ஆளத் தொடங்கினார்.

இந்நிலையில், தனது பரம எதிரியான முலயமை ஓரங்கட்டவும், திடீரென பொதுத் தேர்தல் அறிவிக்கப்பட்டால் தாழ்த்தப்பட்டோர் ஓட்டுக்களை கவர்ந்து கொள்ளுவதற்கு வசதியாகவும் கன்சிராமுடன் கூட்டணி சேரத் தயாரானது பா.ஜ.க. உ.பி. சட்டமன்றத் தேர்தலின் பொழுது பா.ஜ.க.வும், பகுஜன் சமாஜ் கட்சியும் எதிரெதிர் அணியில் நின்று போட்டியிட்டது குறித்தெல்லாம் அக்கட்சி அலட்டிக் கொள்ளவில்லை. பதவிக்காக யாருடனும் கூட்டு வைத்துக் கொண்டு வரும் கன்சிராமும், இம்மனுவாதக் கட்சியுடன் மீண்டும் ஒரு முறை கூட்டணி சேர்ந்தார். இக்கூட்டணிக்கு சொந்த கௌரவம் காரணமாக எதிர்ப்பு தெரிவித்த கல்யாண் சிங்கை, கட்சியின் மையத் தலைமையும், மாநிலத்தின் பார்ப்பனத் தலைவர்களும் நெருக்கடி கொடுத்துப் பணிய வைத்தனர்.


கூட்டணி அமைந்தாலும், அது முரண்பாடுகளின் மொத்த உருவாக இருந்தது. பார்ப்பனிய இந்து மத வெறியனான கல்யாண் சிங்கிற்கும், மாயாவதிக்கும் இடையே இருந்து வரும் தனிநபர் முரண்பாடுகளும், சாதிய நலன்களும் கூட்டணிக்குள்ளே முட்டி மோதிக் கொண்டன. கூட்டணியை தானே முறித்துக் கொண்டால், மைய அரசைப் பிடிக்கும் தனது கனவில் மண் விழுந்தது போலாகி விடும் என்பதால், பா.ஜ.க. கூட்டுக் கமிட்டி அமைத்து, முரண்பாடுகளைப் பூசி மெழுக முயன்றது.

கூட்டணி ஒப்பந்தப்படி முதலில் பதவியில் அமர்ந்த மாயாவதி, ஒரு புறம் ஊழல் முறை கேடுகளில் ஊறி திளைத்தார். மறுபுறம், தனது கட்சியின் ஓட்டு வங்கியைத் தக்க வைத்துக் கொள்ள தாழ்த்தப்பட்டோர் நலன்களுக்காக சில திட்டங்களைத் தீவிரமாக அமல்படுத்தினார். வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் பதியப்பட்ட வழக்குகளை உடனுக்கு உடன் விசாரித்துத் தீர்ப்பு வழங்குவதற்கு வசதியாக 20 தனி நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டு, மாவட்டந்தோறும் கூடுதலாக ஒரு நீதிபதி நியமனம் செய்யப்பட்டனர். இதற்காக 10 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டது. மேலும், மேல்சாதி வெறியர்களின் கொடுமைகளுக்கு ஆளான தாழ்த்தப்பட்ட - ஆதிவாசிப் பெண்களை மணம் புரிந்து கொள்ளும் இளைஞர்களுக்கு உதவி வழங்குவதற்காக 36 லட்ச ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டது. ஏற்கெனவே தாழ்த்தப்பட்டவர்களின் அனுபோகத்தில் இருந்து வரும் நிலங்களுக்கு பட்டா வழங்கவும், அரசிடமுள்ள உபரி நிலங்களைத் தாழ்த்தப்பட்டோருக்கு வழங்கவும் திட்டங்கள் தீட்டப்பட்டன.

இச்சீர்திருத்த திட்டங்கள் தவிர, புதிய மாவட்டங்களை உருவாக்கி, அதற்கு தாழ்த்தப்பட்ட தலைவர்களின் பெயர்களைச் சூட்டியது; கிராமந்தோறும் அம்பேத்கர் சிலை நிறுவியது; பல கோடி ரூபாய் செலவில் அம்பேத்கர் பூங்காக்களை உருவாக்கியது; 15,000 ''அம்பேத்கர் கிராமங்களை'' அரசு தத்தெடுத்துக் கொண்டது என கவர்ச்சிவாத திட்டங்களையும் அறிவித்திருந்தார், மாயாவதி.

இதைப் பொறுத்துக் கொள்ள முடியாமல், உ.பி. மாநில மெங்கும் மேல்சாதி வெறியாகள் பொருமத் தொடங்கினர்; ''கொள்ளைக்காரர்கள் - கொலைகாரர்களைக் கண்டு பயப்படுவதை விட, இந்த வன்கொடுமைச் சட்டத்தைக் கண்டு பொது மக்கள் பயப்படுகிறார்கள்'' என கல்யாண் சிங் மேல்சாதி வெறியர்களின் பொருமலை மேடை அமைத்துப் பேசினார்.

இக்கொந்தளிப்பின் நடுவே, ''தாழ்த்தப்பட்டோர் நலன்களுக்காக மாயாவதி அறிவித்துள்ள திட்டங்களைக் கைவிட மாட்டோம்; பகுஜன் சமாஜ் கட்சியை உடைக்க






படிப்பகம்

www.padippakam.com

முயல மாட்டோம்'' என்ற இரண்டு வாக்குறுதிகளைத் தந்து, கல்யாண் சிங் முதல்வர் பதவியில் அமர வழியேற்படுத்தியது, பா.ஜ.க. தலைமை. ஆனால், அதிகாரம் தனது கைக்கு வந்தவுடனேயே வாக்குறுதிகளையுக் காற்றில் பறக்க விட்டார், கல்யாண் சிங்.

''வன்கொடுமை சட்டத்தை யாருக்கு எதிராகவும் 'தவறாக'ப் பயன்படுத்தக் கூடாது'' என்ற அரசு ஆணையில் கையெழுத்திட்டதுதான், கல்யாண்சிங் முதல்வராகப் பதவியேற்றதும் செய்த முதல் அரும்பெரும் பணி. இதனின் அர்த்தம், ''இச்சட்டத்தை அமல்படுத்துவதை நிறுத்தி வை'' என்பதுதானே யன்றி வேறில்லை. இதையடுத்து, மாயாவதி ஆட்சியின்பொழுது போலீசு - நிர்வாகத் துறையின் மிக முக்கிய பதவிகளில் நியமிக்கப்பட்ட தாழ்த்தப்பட்ட அதிகாரிகள் பந்தாடப்பட்டு, அங்கெல்லாம் மேல்சாதியைச் சேர்ந்த அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர். பதவியேற்ற சில நாட்களிலேயே 295 மாறுதல் உத்தரவுகளைப் பிறப்பித்து, அரசு இயந்திரத்தை மேல் சாதியினரின் கைப்பிடிக்குள் கொண்டு வந்தார், கல்யாண் சிங். ''இனி நம்ம ஆட்சிதான்'' எனப் புரிந்து கொண்ட மேல்சாதி வெறியர்கள், தாழ்த்தப்பட்டோர் மீது நேரடியாகத் தாக்குதல் தொடுக்கத் துணிவு கொண்டனர்.

• தாகூர் சாதியைச் சேர்ந்த நீரஜ் சிங் என்ற வாலிபனை, தாழ்த்தப்பட்ட இளைஞர்கள் சிலர் சுட்டுக் கொன்று விட்டதாகக் கூறி, செப். 18 அன்று தாக்குதலைத் தொடங்கினர் தாகூர் சாதி வெறியர்கள். தௌலானா எனும் பகுதியைச் சுற்றியிருந்த 144 கிராமங்களில் தாகூர்களுக்கும், தாழ்த்தப்பட்ட சமர் சாதியினருக்கும் நேரடி மோதல்கள் நடந்தன. எண்ணிக்கையில் பெரும்பான்மையாக இருந்த தாகூர் சாதியினர், பல கிராமங்களில் அம்பேத்கர் சிலைகளைத் தகர்த்தெறிந்தனர்; தாழ்த்தப்பட்டோரின் வீடுகள் தீக்கிரையாகின. கல்யாண் சிங் பதவியேற்பதற்கு மூன்று நாட்களுக்கு முன் தொடங்கிய இக்கலவரம், அவர் பதவியேற்ற பின் தீவிரமாகத் தொடர்ந்தது.

• பெலி சரண் கிராமத்தைச் சேர்ந்த முகேஷ் என்ற தாழ்த்தப்பட்ட பெண் பாலியல் பலாத்காரப்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டார். இச் சம்பவம் அக்டோபர் 5-ஆம் தேதி நடந்தது. இதற்கு முறையான நீதி விசாரணை கோரி அக்டோபர் 7-ஆம் தேதி தாழ்த்தப்பட்டோர் இரயில் மறியலில் ஈடுபட்டனர். போராடிய தாழ்த்தப்பட்டோரை விரட்டியடிக்க தடியடி நடத்திய போலீசு, பின் எவ்வித முன்னெச்சரிக்கையும் இன்றிச் சுடத் தொடங்கியது. இத்துப்பாக்கிச் சூட்டில் புச்சா, கோபி என்ற இரு தாழ்த்தப்பட்டோர் மாண்டு போயினர்.

• பைசாபாத்தைச் சேர்ந்த பால் கிஷன் என்ற தாழ்த்தப்பட்ட இளைஞன் சந்தேகத்துக்கு இடமான முறையில் இறந்து போனது குறித்து கல்யாண் சிங் அரசு பாரபட்சமாக விசாரணை நடத்தியதென்றும், இவ்விளைஞன் அஜய் யாதவ் மற்றும் கிங்கான் யாதவ் என்ற இரு நபர்களால் கொல்லப்பட்டதாகத் தாழ்த்தப்பட்டோர் கூறுகின்றனர்.

பகுஜன் சமாஜ் கட்சியோடு கூட்டணி சேர்ந்திருந்ததால், பா.ஜ.க. மீது அதிருப்தி கொண்டிருந்த மேல் சாதியினரை அரசு ஆணை மூலம் அரவணைக்க முயன்ற கல்யாண் சிங், மறுபுறம், காங்கிரசு, ஜனதாதளம், பகுஜன் சமாஜ் கட்சிகளைச் சேர்ந்த மேல்சாதி எம்.எல்.ஏ.க்களுக்கு பதவி ஆசை காட்டி, அக்கட்சி மாறிகள் ஆதரவோடு தனது தலைமையில் பா.ஜ.க. ஆட்சியை நிறுவிவிட காய்களை நகர்த்தினார். பகுஜன் சமாஜ் கட்சி தனது ஆதரவை விலக்கிக் கொள்வதாக அறிவித்ததற்கு முன்னதாக, உ.பி. காங்கிரசு தலைவரை கேசரி மாற்றியது கல்யாண் சிங்கிற்கு மிகவும் சாதகமாக அமைந்தது.

காங்கிரசைச் சேர்ந்த 22 உறுப்பினர்கள், ஜனதா தளத்தைச் சேர்ந்த மூவர், பகுஜன் சமாஜ் கட்சியைச் சேர்ந்த உயர் சாதி எம்.எல்.ஏ.க்கள் 12 பேர், சமாஜ்வாதி கட்சியில் இருந்து இருவர் மற்றும் ஒன்பது சுயேச்சை

## ''மாண்புமிகு ரௌடிகள்''



''உ.பி. சட்டசபை உக்கிரமான போர்க்களமாக மாறியது'' என்று அம்மாநில சட்டசபையில் நடந்த மோதலைப் பற்றி எழுதுகின்றன, பத்திரிகைகள். இது, நடந்த அந்த வன்முறை வெறியாட்டத்தை நாகரிகமாகச் சொல்லுவது. ''கண்ணியம் காக்கப்பட வேண்டிய இடத்தில்'' பதவிக்காக எம்.எல்.ஏ.க்கள் கட்சி வேறுபாடின்றி தெரு நாய்களை விடக் கேவலமாக மோதிக் கொண்டனர்.

• மோதலில் 12 உறுப்பினர்களுக்கு இரத்தக் காயம் ஏற்பட்டது. பா.ஜ.க.வைச் சேர்ந்த பொதுப் பணித் துறை அமைச்சர் கல்ராஜ் மிஸ்ராவுக்கு நெற்றிப் பொட்டுப் பிளந்தது. சமாஜ்வாதிக் கட்சியின், சட்டமன்ற தலைவர் தனிராம் வர்மாவுக்கு இடது கை முறிந்து போனது. மோதலில் யாருக்கும் யாரும் சளைக்கவில்லை.

• ''பேப்பர் வெயிட், மைக், மைக் ஸ்டாண்ட், கண்ணாடி டம்ளர், நாற்காலி'' இவையனைத்தும் ஆயுதமாக மாறிப் பறந்தன.

• தங்களுக்குள் மோதிக் கொண்ட எம்.எல்.ஏ.க்கள், பத்திரிகையாளர் மீது ஒட்டு மொத்தமாகப் பாய, பல பத்திரிகையாளர்கள் தரையில் படுத்து, தவழ்ந்து தவழ்ந்தே வெளி வாசலை அடைந்து உயிர் பிழைத்தனர்.

மோதல் முடிந்த பின்பு, உ.பி. சட்டசபையில் தெரசாவின் மறைவுக்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டதாம்; அதோடு சேர்த்து மீறிக் கொள்ளப்படும் சட்டசபை மாண்புக்கும் அனுதாப ஓலை வாசித்திருக்கலாம்.

## ''பா.ஜ.க. பிராண்ட் நாணயம்''

உ.பி. சட்டசபையில் 175 உறுப்பினர்களைக் கொண்டுள்ள பா.ஜ.க., நம்பிக்கை வாக்கெடுப்பில் 222 ஓட்டுக்களைப் பெற்றது. பா.ஜ.க.வின் தோழமைக் கட்சியான சமதா கட்சியின் இரண்டு வாக்குகளைத் தள்ளிவிட்டால், 45 உறுப்பினர்கள் தங்கள் கட்சிகளை விட்டு வெளியேறி பா.ஜ.க.வுக்கு ஆதரவாக வாக்களித்துள்ளனர்.

இந்தக் 'கலக'த்திற்கு பா.ஜ.க. கொடுத்த விலை கொஞ்சம் அதிகம்தான். கட்சி மாறிகள் ஒவ்வொரும் ஐம்பது இலட்ச ரூபாய்க்கு விலை போனதாகச் செய்திகள் வெளி வந்துள்ளன. ஒரு கறுப்பு ஆட்டிற்கு 50 லட்சம் எனில், 45 பேருக்கு... இலஞ்சத்தின் பிரம்மாண்டத்தை நீங்களே கணக்கிட்டுக் கொள்ளுங்கள்.

ஜார்கண்ட் முக்தி மோர்சா லஞ்ச வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ள ராவையும் விஞ்சி நிற்கிறது இந்து மதவெறிக் கும்பல். இலஞ்சத்தோடு, கட்சி மாறிகள் அனைவருக்குமே மந்திரிப் பதவிகளையும் வாரிக் கொடுத்து, வரலாறு காணாத 92 பேர் கொண்ட மாபெரும் மந்திரிசபையை அமைத்து விட்டார், கல்யாண் சிங்.



படிப்பகம்

உறுப்பினர்களை தனக்கு ஆதரவாக இழுத்துக் கொண்டார் கல்யாண்சிங்.

இப்படி புறக்கடை வழியாக உ.பி. ஆட்சியைக் கைப்பற்றிக் கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தில் பா.ஜ.க. இருந்து வந்ததால் தான், அக்கட்சி சபாநாயகர் பதவியை பகுஜன் சமாஜ் கட்சிக்கு விட்டுத் தர மறுத்து விட்டது. சபாநாயகர் பா.ஜ.க.வைச் சேர்ந்தவராக இருந்தால் தான் பகுஜன் சமாஜ் கட்சியைப் பிளந்து பா.ஜ.க.விற்கு ஆதரவாக வெளியேறிய 12 உறுப்பினர்களை, கட்சித் தாவல் தடைச் சட்டத்திற்குப் புறம்பாக, தனிக் குழுவாக அங்கீகரிக்க முடிந்தது. அடிதடி - ரகளை முடிந்து எதிர்க்கட்சிகள் வெளிநடப்பு செய்த பின்பு, சட்டசபையில் பா.ஜ.க. உறுப்பினர்களும் கட்சி மாறிகளும் தான் இருந்தனர். சபாநாயகர் பா.ஜ.க.வைச் சேர்ந்தவராக இருந்ததால் தான், நம்பிக்கை கோரும் தீர்மானத்தை வாக்கெடுப்புக்கு விட்டு, எதிர்ப்பின்றி வெற்றி பெற்றுவிட்டதாக பா.ஜ.க. மார் தட்டுகிறது.

உ.பி.யில் பா.ஜ.க. அமைத்திருக்கும் ஆட்சி மேல்சாதி வெறியர்களின், பதவி வெறியர்களின் ஆட்சி. ஆனால் இதை வசதியாக மறைத்து விட்டு, ஐக்கிய முன்னணி உ.பி. ஆட்சியைக் கலைக்க முடிவு செய்ததை ஜனநாயகப் படுகொலை எனக் கூறி புலம்புகிறது. ''கழுதை விட்டையில் முன் விட்டை என்ன; பின் விட்டை என்ன'' என்ற பழமொழி தான் இவை இரண்டுக்குமே பொருந்தும்.

★☆★

உ.பி. காங்கிரசில் ஏற்பட்டுள்ள பிளவு அக்கட்சியின் இறுதி நாட்கள் எண்ணப்படுவதைச் சொல்லாமல் சொல்லி விட்டது. காங்கிரசின் மாற்றாக மார்தட்டிக் கொள்ளும் பா.ஜ.க.விற்கு இந்தி பேசும் மாநிலங்கள் தவிர நாட்டின் பிற பகுதிகளில் வேரோ விழுதோ கிடையாது. மைய ஆட்சியைக் கைப்பற்றுவதற்கு அது போடுவது கூட்டணிக் கணக்கு தான். ஓட்டுக் கட்சிகளிடையே இப்படி உருவாகும் கூட்டணிகளுக்கு கொள்கை அடிப்படை கிடையாது என்பது ஊரறிந்த உண்மை. அதனால் தான் கூட்டணி முறிந்த பின்னும் பா.ஜ.க.வின் செய்தி தொடர்பாளர் யஷ்வந்த் சின்கா, '' பகுஜன் சமாஜ் கட்சியுடன் மீண்டும் கூட்டு சேர்வது சாத்தியமாகாது எனக் கூற முடியாது; அது எதிர்கால சந்தர்ப்பத்தைப் பொருத்தது'' என்கிறார். கன்சிராமும், ''பா.ஜ.க. ஆதரவளித்தால் நாங்களே ஆட்சியமைப்போம்'' என நம்பிக்கை வாக்கெடுப்புக்கு முன் கூறினார்; இப்பொழுதோ, பா.ஜ.க.வை ஓரங்கட்டிவிட, பகுஜன் சமாஜ் கட்சி - காங்கிரசு - சமாஜ்வாதிக் கட்சி என்ற புதிய கூட்டணிக்கு முயலுகிறார்கள். தேர்தலை எதிர் கொள்ளாமல், எப்படியோ யாருடனோ கூட்டணி சேர்ந்து பதவி - அதிகாரத்தை நழுவி விடாது கைப்பற்றிக் கொள்ள வேண்டும் என்பதுதான் கூட்டணிக்கு ஒரே அடிப்படை.

''பா.ஜ.க.வைத் தனிமைப்படுத்துவது'' என்று கொள்கை - சித்தாந்த விளக்கமளிக்கப்படும் ஐக்கிய முன்னணி கூட்டணியும் இதிலிருந்து மாறுபட்டதல்ல. மக்களைத் திரட்டி, அமைப்பாக்கி, போராடி இந்துத்துவத்தை விரட்டியடிக்கும் கொள்கை எதுவும் அக்கூட்டணிக்கு கிடையாது. அதனால்தான் கூட்டணியைச் சேர்ந்த சமாஜ்வாதிக் கட்சி - ஜனதா தளமும், இக்கூட்டணியைத் தாங்கி நிற்கும் காங்கிரசும், பா.ஜ.க.வை விரட்ட ''356''-ஐ கையில் எடுத்துக் கொண்டன. தி.மு.க.வும் கூட, இதில் ''பெரும்பான்மைக்கு கட்டுப்படுவோம்'' என மழுப்பியது. ஆரம்பத்தில் ''உ.பி. சட்டசபையைக் கலைக்க வேண்டும்'' எனப் பேசிய 'மார்க்சிஸ்டு'கள், பின்னர் சந்தர்ப்பவாதமாக நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டுள்ளனர்.

ஒவ்வொரு முறையும் கூட்டணி ஏற்பட்டு, அது அற்ப ஆயுசில் மடிந்து, மறு கூட்டணி ஏற்படும் பொழுதெல்லாம் நாடாளுமன்ற மாண்பு மடிந்து போகிறது. அராஜகம், ரௌடித்தனம், வன்முறை, குதிரை வியாபாரம் எல்லாம் தலை விரித்தாடத் தொடங்கி விடுகிறது. 'தேசிய' அளவில் இனி எந்தவொரு கட்சிக்கும் தனிப் பெரும்பான்மை கிடைக்கப் போவதில்லை. எனவே, இந்திய அரசியலில் கட்சி தாவல்களையும், புதுப்புது கூட்டணிகளையும் அதிகம் பார்க்கலாம். அதேபொழுதில், இக்கொள்கையற்ற கூட்டணிகளால் மக்கள் மத்தியில் ஏற்படும் அதிருப்தியை பயன்படுத்திக் கொண்டு, ஆளும் வர்க்கங்கள் பாசிச சர்வாதிகாரப் பாதையில் நாட்டைத் தள்ளிவிட்டு வருகின்றன.

• ரஹீம்

## அறிவிப்பு

**''சாதி - தீண்டாமை ஒழிப்பு இயக்கத்தை'' யொட்டி, 7.11.1997 -நவம்பர் புரட்சி நாளன்று விழுப்புரத்தில் நடைபெறவிருந்த சாதி - தீண்டாமை மறுப்பு மணவிழாவும், 10. 11. 1997 அன்று மதுரையில் நடைபெறவிருந்த பேரணி - பொதுக்கூட்டமும் தவிர்க்கவியலாத காரணங்களால் தள்ளிப்போடப்பட்டுள்ளன.**

**சாதி - தீண்டாமை மறுப்பு மணவிழா 22. 11. 1997 அன்று விழுப்புரத்திலும், பேரணி - பொதுக்கூட்டம் 28. 11. 1997 அன்று மதுரையிலும் நடைபெறும் எனத் தெரிவித்துக் கொள்கிறோம்.**

**இவண்,**

**மக்கள் கலை இலக்கியக் கழகம்,**
**விவசாயிகள் விடுதலை முன்னணி,**
**புரட்சிகர மாணவர்-இளைஞர் முன்னணி.**

## ஆவடி கனரக வாகனத் தொழிலாளர் போராட்டம்: சுயவிமர்சனத்துடன் ஒரு விளக்கம்!

*ஆவடி கனரக வாகனத் தொழிற் சங்கங்களின் துரோகம் என்ற தலைப்பில் கடந்த புதிய ஜனநாயகம் இதழ் 12/22-23-ல் ஒரு செய்தி வெளியிட்டோம். பு.ஜ. முகவர் அனுப்பியதால் நம்பிக்கையுடன் வெளியிட்டோம். வெளிவந்த பின்னரே, அதில் தவறான தகவல்கள் உள்ளன எனத் தெரிய வந்தது. இப்படி தவறான செய்தி வெளியிட்டதற்கு வருந்துகிறோம். அதன் பின் புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணியினர் நேரில் சென்று சேகரித்துத் தந்த செய்தி பின்வருமாறு:*

தொழிற்சங்கங்களின் துரோகம் என்பதற்கு மாறாக அனைத்து தொழிற்சங்கங்களின் கூட்டுப் போராட்டக் கமிட்டியின் தலைமையின் வழிகாட்டலில் இன்று கனரக வாகனத் தொழிற்சாலை தொழிலாளிகள் பீஸ் ரேட் உற்பத்தி முறைக்கு எதிராக போராடி வருகின்றனர்.

இதன் செயலாளராக உள்ள பஞ்சாட்சரம் பற்றிய செய்தி உண்மையானதல்ல. தொழிற்சங்கத்தின் தலைமையில் இருந்த சிலர் சிறு முதலாளிகளாக உள்ளனர். பஞ்சாட்சரம் அந்தப் பட்டியலில் இல்லை. மேலும் ஏ.ஐ.டி.ஈ.எஃப். என்ற சங்கம் அகில இந்திய அளவில் போலிக் கம்யூனிஸ்டுகளின் தலைமையில் இயங்குகிறது. ஆனால் பஞ்சாட்சரமோ எச்.எம்.கே.பி.ஐ.ஐச் சேர்ந்தவர். இவர் போலி கம்யூனிஸ்ட் கட்சியைச் சேராதவராயினும் கடந்த மூன்று ஆண்டுகளாக சி.ஐ.டி.யு.வின் சதிகளையும் மீறி ஆவடி ஆலையின் ஏ.ஐ.டி.ஈ.எஃப் தொழிற்சங்கத் தலைமையில் உள்ளார்.

ஏற்கனவே 1972 போராட்டத்தில் பழிவாங்கப்பட்டு, வேலையிலிருந்து நீக்கப்பட்டார். பல ஆண்டுகள் போராடிய பின்பே திரும்ப வேலை கிடைத்தது. இப்போதும் பார்ப்பன அதிகாரிகளின் தேச துரோக, லஞ்ச ஊழல், ஊதாரித்தன செயல்களை அம்பலப்படுத்தி பாராளுமன்றத்தில் கேள்வி கேட்க ஏற்பாடு செய்தது மட்டுமின்றி, பத்திரிக்கையில் செய்தியாகவும் வெளியிட்டார். இதனால் ஆத்திரமுற்ற பார்ப்பன அதிகாரி கும்பத்தின் கும்பல் பழிவாங்க நடவடிக்கை எடுத்து வருகிறது.

இவர் தொழிலாளிக்கு விரோதமாகவோ நிர்வாகத்திற்கு ஆதரவாகவோ செயல்பட்டவரல்ல என்பதே உண்மை. நிர்வாகம் அடாவடித்தனமாக பீஸ் ரேட் உற்பத்தியைத் திணிப்பதால் தொழிலாளிகள் வேறு வழியின்றி போராட்டத்தில் தள்ளப்பட்டுள்ளனர்.

புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி,
சென்னை.

www.padippakam.com



# விபச்சாரத்தை விரட்டியடித்த நடுத்தர வர்க்கத்தினரின் போராட்டம்

விபச்சார மையமாக மாறியிருந்த தெற்கு மும்பையிலுள்ள ராகவ்ஜி சாலையிலிருந்து விபச்சாரிகளை வெளியேற்றுவதில், அப்பகுதிவாழ் மக்கள் தொடர்ச்சியான போராட்டத்திற்குப் பிறகு வெற்றியைச் சாதித்துள்ளனர். ஏற்கனவே மும்பை நகரின் பல பகுதிகள் விபச்சார - சமூக விரோதிகளின் மையமாகிவிட்ட நிலையில், மேட்டுக்குடி - நடுத்தர வர்க்கத்தினர் வாழும் பகுதிகளிலும் இவை பரவத் தொடங்கியுள்ளன. மேல்தட்டு நடுத்தர வர்க்கத்தினர் வாழும் ராகவ்ஜி சாலை பகுதியில் இரவானதும் விபச்சாரிகளை நாடி கார்கள், மோட்டார் சைக்கிள், ஆட்டோ, டாக்சிகளில் பலர் குவியத் தொடங்குவர். சாராய போதையில் பலர் கலாட்டா செய்வர். கடந்த பல ஆண்டுகளாகத் தொடரும் இந்த அக்கிரமத்தை எதிர்த்து இப்பகுதிவாழ் மக்கள் அரசு உயர் அதிகாரிகளுக்கும் போலீசாருக்கும் பலமுறை புகார் மனுக்களை அனுப்பியும், டார்டியோ போலீசு நிலையத்துக்கு நேரில் திரண்டு சென்று முறையிட்டும் கூட எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. விபச்சாரிகளின் சம்பளப் பட்டியலில் போலீசாரும், வாடிக்கையாளர்களாக உயரதிகாரிகளும் உள்ள நிலையில் புகார்கள் குப்பைக் கூடைக்குச் சென்றன.




''இங்கே விபச்சாரம் ஒழிக்கப்பட்டு விட்டது'' என்று ''பேனர்'' கட்டி போராட்ட வெற்றி அறிவிக்கப்படுகிறது.

இனியும் பொறுக்க முடியாத நிலையில் இப்பகுதிவாழ் மக்கள் கண்காணிப்புக் குழுக்களை நிறுவி இரவில் விபச்சார சுகம் தேடி வருபவர்களை விரட்டியடிக்கத் தொடங்கினர். இரவில் இப்பகுதியில் நுழையும் வாகனங்களை மறித்து, குடியிருப்போர் அடையாள அட்டை இல்லாதவர்களைத் திருப்பி அனுப்பினர். இரவில் இங்கு வருவோரைப் பிடித்து அவர்களது வாகன உரிமச் சீட்டிலிருந்து முகவரியைத் தேடி அவர்களது வீடுகளுக்குத் தகவல் கொடுத்து எச்சரித்தனர். பலரைப் புகைப்படம் எடுத்து இனிமேல் இந்தப் பக்கமே வரமாட்டோம் என்று மன்னிப்புக் கேட்க வைத்தனர். பல வெளிநாட்டு சுற்றுலாகப் பயணிகளின் ஆடைகளை உருவிக் கொண்டு விரட்டியடித்தனர். ''விபச்சார சுகம் தேடி வருவோரை உங்கள் வாகனங்களில் ஏற்றாதீர்கள்'' என்று ஆட்டோ - டாக்சி ஓட்டுநர்களுக்கு வேண்டுகோள் விடுத்து பிரசுரங்களை வெளியிட்டனர்.

மக்களின் இந்த அதிரடி நடவடிக்கையால் பல பெரிய புள்ளிகள் அம்பலமாகினர். தம்மைக் காட்டிக் கொடுக்க வேண்டாம் என்று அவர்கள் கெஞ்சினர். இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடுவது சட்டவிரோதமானது; கலவரச் செயல் என்று மிரட்டிய போலீசாரை, இப்பகுதிவாழ் மக்கள் அனைவரும் அணிதிரண்டு மறித்து நிற்கவும், அரண்டு போன போலீசார் பின்வாங்கி விட்டனர். கடந்த ஆகஸ்ட் 15-க்குப் பிறகு அப்பகுதி விபச்சாரத்திலிருந்து ஏறத்தாழ விடுதலை அடைந்து விட்டது.

ஓரளவுக்கு பாதுகாப்பான - உத்திரவாதமான வாழ்க்கையும் சமூகத் தகுதியும் கொண்டுள்ளதாலேயே மேல்தட்டு - நடுத்தர வர்க்கத்தினர் தமது பகுதியில் மட்டும் விபச்சாரத்தை ஒழிப்பதில் வெற்றிபெற முடிந்துள்ளது. அதேசமயம் வேலையின்மையும் பாதுகாப்பற்ற வாழ்க்கையும் கொண்டுள்ள அடித்தட்டு உழைக்கும் மக்கள் வாழும் பகுதிகளில் விபச்சாரமும் சமூக விரோதச் செயல்களும் தீவிரமாகி சமூகத்தைச் சீரழித்து வருகிறது.

# அரியானா விவசாயிகளின் போர்க்கோலம்

விவசாயிகளைப் பழிவாங்கும் பன்சிலால் அரசுக்கு எதிராக அரியானா விவசாயிகள் நடத்திவரும் போராட்டம் அம்மாநிலத்தையே உலுக்கி வருகிறது.

அரியானாவில் கடந்த ஐந்தாண்டுகளாக விவசாயத்துக்கு அளிக்கப்பட்டு வந்த இலவச மின்சாரம் நிறுத்தப்பட்டு, உலக வங்கி உத்திரவுப்படி கட்டணம் வசூலிக்கப்படுகிறது. அதேசமயம், பழுதடைந்த மின்மாற்றிகளை (ட்ரான்ஸ்பார்மர்) சீரமைக்காததால் விவசாயிகளின் மின்சார மோட்டார்கள் எரிந்து போவதாலும், அடிக்கடி ஏற்படும் மின்தடையால் உரிய காலத்தில பயிருக்கு நீரிறைக்க முடியாமல் விவசாயம் பாதிக்கப்படுவதாலும் விவசாயிகள் வெறுப்பும் ஆத்திரமும் கொண்டிருந்தனர். இந்நிலையில் மின்கட்டண பாக்கியை உடனடியாகச் செலுத்த வேண்டும் என பன்சிலால் அரசு கெடுபிடி செய்யத் தொடங்கியது. ஆத்திரமடைந்த விவசாயிகள் மின்மாற்றிகளைச் சீரமைக்காத வரை மின்கட்டண பாக்கியைச் செலுத்த முடியாது என்று கடந்த அக்டோபர் 6-ந் தேதி முதலாக டெல்லி - பிகானீர் ரயில் பாதையில் தொடர் மறியல் போராட்டத்தை மேற்கொண்டனர்.

மகேந்தர்கள் மாவட்ட விவசாயிகளால் தொடங்கப்பட்ட இப்போராட்டம் தீவிரமடைந்து, ரயில் போக்குவரத்து பாதிக்கப்பட்டதும், பன்சிலால் அரசு போராட்டத்தை ஒடுக்க காட்டுமிராண்டித்தனமான அடக்குமுறையைக் கட்டவிழ்த்து விட்டது. அக்டோபர் 10-ந் தேதியன்று, மண்டியாலி கிராமத்தில் ரயில் மறியலில் ஈடுபட்டிருந்த விவசாயிகள் மீது எவ்வித முன்னெச்சரிக்கையுமின்றி போலீசார் கண்மூடித்தனமான துப்பாக்கிச் சூடு நடத்தி ஆறு பேரைக் கொன்றனர். இதன் மூலம் போராட்டம் ஒடுங்கிவிடும் என்று எதிர்பார்த்த ஆட்சியாளர்களின் முகத்தில் கரியைப் பூசிவிட்டு மேலும் உக்கிரமாக விவசாயிகள் போராட்டத்தை தொடருகின்றனர்.

ரயில் மறியல் மட்டுமின்றி, மரங்களை வெட்டி சாலையில் போட்டு வாகனப் போக்குவரத்தையும் விவசாயிகள் துண்டித்தனர். மகேந்தர்கார், பிவாணி மாவட்டங்களில் துப்பாக்கிச் சூட்டைக் கண்டித்தும் ஆர்ப்பாட்டமும் முழு கடையடைப்பும் நடந்தது. கல்வி அமைச்சர் ராம்பிலாஸ் சர்மாவின் மூதாதையரின் வீடு ரதிவாஸ் கிராமத்தில் தீயிடப்பட்டது. இம்மாவட்டங்களிலுள்ள துணை மின் நிலையங்கள் தீயிட முயற்சிக்கப்பட்டு, பின்னர் போலீசாரால் தடுக்கப்பட்டன. அரசுப் பேருந்துகள் சில இடங்களில் எரிக்கப்பட்டதோடு, இரு ரயில் நிலையங்களும் தீயிடப்பட்டுள்ளன.

பாரதீய கிசான் சங்கம் எனும் ஜாட் சாதி பணக்கார விவசாயிகள் சங்கம் தான் போராட்டத்தை தலைமையேற்று நடத்துகிறது. எனினும் விவசாயத்தை முற்றாகப் புறக்கணித்து வரும் ஆட்சியாளர்களுக்கு எதிராக தொடர்ந்து போராட்டத்தை முன்னெடுத்துச் செல்கிறது. இந்நிலைமையைச் சாதகமாக்கிக் கொண்டு, பதவிவெறி பிடித்த பிழைப்புவாதியான முன்னாள் முதல்வர் சௌதாலா உள்ளிட்டு எதிர்தரப்பினர் முதலைக் கண்ணீர் வடித்து அரசியல் ஆதாயமடையத் துடிக்கின்றனர். ஆனால் முந்தைய ஆட்சிகளிலும் இதே நிலைமைதான் நீடித்தது. ஈராண்டுகளுக்கு முன்பு மின் கட்டண உயர்வை எதிர்த்து விவசாயிகள் போராடிய போது, துப்பாக்கிச் சூட்டில் மூவர் கொல்லப்பட்டனர். இதை அனுபவமாகக் கொண்டு, ஓட்டுக் கட்சிகளைப் புறக்கணித்து உலக வங்கிக்கும் அதன் கைப்பாவைகளான ஆட்சியாளர்களுக்கும் எதிராக விவசாயிகள் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வதே இன்றையே தேவையாக உள்ளது.



படிப்பகம்

www.padippakam.com

## விபச்சாரத்தில் குழந்தைகள் :

# அரசின் கண்ணை மறைக்குது அமெரிக்க டாலர்

கிழடு தட்டிப் போனாலும், உடம்பின் கொழுப்பு அடங்காத சேட்டு ஒருவனுக்கு கன்னி கழியாத இளஞ் சிறுமியோடு புணர வேண்டும் என்ற சபலம் பிறந்தது. சேட்டின் சபலத்தை பம்பாய் சிவப்பு விளக்குப் பகுதியைச் சேர்ந்த விபச்சார விடுதியொன்றின் தலைவியிடம் எடுத்துச் சொன்னான் தரகன். இருபதாயிரம் ரூபாய் கைமாறியது. அன்றிரவே அந்தக் கிழட்டு பன்றியின் வெறிக்கு பதினோரே வயதான சுதா பலியானாள்.

• உ.பி. மாநிலம் கார்வாலைச் சேர்ந்த மீனா, தில்லியின் விபச்சார சந்தையில் தள்ளப்பட்டபொழுது, அவளின் வயது பன்னிரெண்டேதான். வெகுளித்தனம் மாறாத அச்சிறுமியை, திருமணம் செய்து கொண்டு தில்லிக்கு அழைத்து வந்து விபச்சாரத்தினுள் தள்ளி விட்டான் அவளது கணவன்.

• வேலை வாங்கித் தருவதாக ஆசை காட்டி, பக்கத்து நாடான நேபாளத்தில் இருந்து அழைத்து வரப்பட்ட பத்து வயது மாயா, இன்று இருப்பது பம்பாய் சிவப்பு விளக்குப் பகுதியில்.

சுதா, மீனா, மாயா - இவர்களைப் போல இன்னும் எத்தனை பேர்? நாடெங்கிலும் கிட்டத்தட்ட 3,00,000 சிறுமிகள் விபச்சாரத்தினுள் தள்ளப்பட்டிருப்பதாகச் செய்திகள் வெளிவருகின்றன; குழந்தை விபச்சாரத்தில் இந்தியா சர்வதேச அளவில் இரண்டாவது இடத்தை எட்டிப் பிடித்து விட்டது.

தாராளமயமாக்கிய பின்னும் இந்திய தொழிற்துறை 5 சதவீத வளர்ச்சியை எட்டிப் பிடிக்க முடியாமல் தடுமாறி நிற்கும் பொழுது, குழந்தை விபச்சாரமோ வருடமொன்றுக்கு 10 சதவீதம் வளர்கிறதாம்! அப்ப நாடு முன்னேறுதுன்னா, அதனின் அர்த்தம் குழந்தைகளைக் கூட்டி கொடுப்பதில் இந்தியா கொடி கட்டிப் பறப்பதைக் குறிப்பதுதானா?

''மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடாதே'' என்று தாராளமயமாக்கலின் ஆதரவாளர்கள் வேண்டுமானால் குதிக்கலாம். ஆனால் அதுதான் உண்மை என்கிறது ''யுனிசெப்'' நிறுவனம். ஆசியாவில் குழந்தை விபச்சாரத்தைப் பற்றி ஆய்வு செய்த யுனிசெப், இந்தியாவைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது, தாராளமயமாக்கலின் பின் அந்நிய சுற்றுலா வருவாய்க்கு இந்தியா கொடுத்து வரும் ஊக்கத்தினால்தான், நாடெங்கிலும் குழந்தை விபச்சாரம் தலைவிரித்தாடுவதாகக் கூறியுள்ளது.

தாராளமயமாக்கலின் பின் தான் ''இண்டெர் நெட்''டின் வக்கிர பாலுறவுப் பக்கங்களில் இந்தியாவின் பெயரும் அடிபடத் தொடங்கியது. மும்பை, சென்னை, தில்லி, கோவா, கோவளம், ஆக்ரா - இங்கெல்லாம் பிஞ்சுகள் எங்கே கிடைக்கும் என்ற தகவலை, உலகத்தின் எந்தப் பகுதியைச் சேர்ந்த வக்கிரம் பிடித்தவனும் கணிப்பொறியின் பட்டனைத் தட்டியே தெரிந்து கொள்ள முடியும். விபச்சாரத்தில் கொடி கட்டிப் பறக்கும் தாய்லாந்து நாட்டின் தலைநகர் பாங்காங்கை விட, இந்தியாவின் கோவாதான் இன்று வசதியானது; பாதுகாப்பானது என்கின்றன பாலியல் சுற்றுலா நிறுவனங்கள்.

''தில்லி, மும்பை, கல்கத்தா, சென்னை, பெங்களூர், ஹைதராபாத் - இந்த ஆறு நகரங்களில் மட்டும் 25,000 குழந்தை விபச்சாரிகள் இருக்கலாம்'' என யுனிசெப் அறிக்கை அம்பலப்படுத்தியுள்ளது. கோவாவில் வெள்ளைப் பன்றிகள்; பிற இடங்களில் உள்ளூர் ஓநாய்கள். இக்கும்பலுக்கு தோலின் நிறத்தில்தான் வேறுபாடேயன்றி, வக்கிர புத்தியில் அல்ல.

நிதி மூலதனத்திற்கும், தொழிற்துறைக்கும் மட்டுமல்ல; இப்பொழுது விபச்சாரத்திலும் தேச எல்லைகள் கிடையாது. பம்பாய் சிவப்பு விளக்குப் பகுதியில் மட்டும் நேபாளத்தைச் சேர்ந்த 20,000 சிறுமிகளும், பெண்களும் விபச்சாரிகளாக காலந்தள்ளி வருகின்றனர். நேபாளத்தைச் சேர்ந்த சிறுமிகள் விபச்சாரத்திற்காக இந்தியாவிற்கு கடத்தப்படுவது பற்றி ''அப்பாவிகளின் விற்பனை'' (Selling of Innocents) என்ற செய்திப் படமெடுத்த ருசித்ரா குப்தா என்ற பெண் பத்திரிகையாளர், ''வறுமை பீடித்துக் கிடக்கும் நேபாள கிராமங்களில் 15 வயது முதல் 45 வயது வரையிலான பெண்களைக் காண முடியவில்லை'' எனக் குறிப்பிட்டுள்ளார். ''கல்கத்தாவின் விபச்சார சந்தையில் 11 சதவீதம் பெண்கள் வங்காள தேசத்தைச் சேர்ந்தவர்கள்'' என்கிறது யுனிசெப் அறிக்கை.

இளஞ்சிறுமிகளை விபச்சாரத்தில் தள்ளிவிடும் கிரிமினல் கும்பல்களுக்கு தேச எல்லைகளே பொருட்டல்ல எனும் போது, மாநில எல்லைகள் எம்மாத்திரம்? ''கோவா மாநிலத்தின் விபச்சார விடுதிகளில் விற்கப்படும் சிறுமிகளுள் பெரும்பாலோர் கர்நாடக மாநிலத்தின் ஏழ்மையான கிராமப் புறங்களைச் சேர்ந்தவர்கள்'' என்கிறது தேசிய மகளிர் கமிசன். குழந்தை விபச்சாரம் குறித்த இக்கமிசன் நடத்திய ஆய்வில், விபச்சாரத்திற்காக சிறுமிகளை ஏமாற்றி கடத்திச் செல்லும் மையமாக பெங்களூர் உருவாகியிருப்பது அம்பலமானது. பெங்களூரில் இரண்டு ரூபாய்க்காக உடலை விற்கும் 10 வயது 16 வயது வரையிலான சிறுமிகளை, தடுக்கி விழுந்த இடங்களில் எல்லாம் காண முடியும். குழந்தை விபச்சாரிகளுள் கர்நாடகச் சிறுமிகள் பெரும்பான்மையாக இருப்பதற்கு வறுமை மட்டும் காரணமல்ல; அம்மாநிலத்தின் கிராமப்புறங்களில் இன்றளவும் நடைமுறையில் இருந்து வரும் தேவதாசி முறை போன்ற பார்ப்பனிய பிற்போக்குத் தனங்களுக்கும் இதில் பங்குண்டு.



*விபச்சாரச் சந்தையில் சிறுமிகள் : தாராளமயமாக்கலின் எதிர் விளைவு.*

''கண்ணுக்கு முன்னாலேயே இத்துணை பெரிய அக்கிரமம் நடந்து கொண்டிருக்கும் பொழுது அரசு கையைக் கட்டிக் கொண்டிருக்கிறதா?'' என்ற நியாயமான கேள்விக்கு, ''ஆம்'' என்று பதில் சொல்ல வேண்டியிருக்கும். ''விபச்சாரத்திற்காக குழந்தைகள் கடத்தப்படுவதை ஓரளவாவது தடுக்க, ஏற்கனவே இருந்து வரும் சட்டத்தைத் திருத்த வேண்டும்'' என சட்ட வல்லுநர்கள் அரசுக்கு ஆலோசனை கூறினார்கள். ''அந்த ஆலோசனை விபச்சார விடுதிகளை நடத்தி வரும் மாஃபியா கும்பல்கள் - அரசியல்வாதிகள் நெருக்கத்தின் காரணமாக குப்பைக் கூடைக்குச் சென்று விட்டது'' எனப் பகிரங்கமாகவே குற்றஞ்சுமத்தியுள்ளது தேசிய மனித உரிமைக் கமிசன்.

குழந்தை விபச்சாரத்தின் சொர்க்க பூமியாகத் திகழும் கோவா மாநிலத் தலைமை போலீசு அதிகாரி பிரார், ''இக்கூச்சல் சுற்று



படிப்பகம்

www.padippakam.com

லாத் தொழிலுக்கு எதிரானவர்களின் கற்பனை'' என வெளிப்படையாகவே கூறியுள்ளார். விபச்சாரத்திற்கு இதைவிட வேறு எப்படி வக்காலத்து வாங்க முடியும்?

அரசைப் பொருத்தவரையில் அதற்கு வருமானம் வேண்டும்; அதுவும் அமெரிக்க டாலராக வேண்டும். அதற்காகத்தானே மேற்கு வங்கம் தொடங்கி தமிழகம் வரை கிழக்கு கடற்கரையையொட்டிய விளை நிலங்களை இறால் பண்ணைகளாக மாற்றி வருகிறார்கள்; ''அந்நிய வர்த்தகம் பெருகும்; டாலர் குவியும்'' என்று கூறிதானே பெங்களூரில் உலக அழகிப் போட்டி நடத்துவதற்கு ஆதரவு தந்தார்கள். சொந்த மண்ணையே விற்கத் துணிந்த ஆட்சியாளர்களுக்கு, எந்த ஏழை வீட்டு குழந்தையோ துகிலுரிக்கப்படுவது குறித்து என்ன அக்கறை வந்து விடப் போகிறது?

• செல்வம்

## ''தமிழினத் தலைவர்'' எலிசபெத் மகாராணியின் சேவகன் ஆனார்!

அடிமைகள் தாங்கள் ஏன் அடிமைகளாயிருக்கிறோம் என சிந்திப்பதற்கு கூட நேரமின்றி ஒடுக்கப்படுகின்றனர். இதையும் மீறி சிந்திக்கும் போது ஸ்பார்ட்டகஸ்களும் பகத்சிங்குகளும் உருவாகின்றனர்.

200 ஆண்டுகளுக்கும் மேலாக நம் நாட்டை ஆக்கிரமித்து அடிமைப்படுத்தி ஒட்டச் சுரண்டியது பிரிட்டன். இன்றும் சுரண்டல் தொடர்ந்து கொண்டுதானுள்ளது. அதனுடைய அரசி எலிசபெத்தை அழைத்து 50-வது 'சுதந்திர' தினப் பொன்விழாவை சிறப்பிக்கின்றனர் இந்திய அடிமைகள்.

எலிசபெத் வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்து சென்னையில் ஆர்ப்பாட்டம் செய்வதென மக்கள் கலை இலக்கியக் கழகம், முற்போக்கு இளைஞர் அணி, தமிழக ஒடுக்கப்பட்டோர் விடுதலை முன்னணி, ஜனநாயக இளைஞர் அணி ஆகிய நான்கு அமைப்புகள் முடிவு செய்தன.

இதற்காக துண்டுப் பிரசுரம், சுவரொட்டி வடிவில் மக்களிடையே பிரச்சாரம் கொண்டு செல்லப்பட்டது. 16.10.97 அன்று ஆர்ப்பாட்டத்திற்கு போலீசு அனுமதியும் அளித்தது. ஒருபுறம் அனுமதி அளித்து விட்டு மறுபுறம் வஞ்சகமாக 15-ம் தேதி இரவு மக்கள் கலை இலக்கியக் கழக தோழர்கள் 15 பேரையும், பிற அமைப்பினரில் சிலரையும் கைது செய்து சிறையிலடைத்தது.

இதையும் மீறி திட்டமிட்டப்படி குறளகம் எதிரே முற்போக்கு இளைஞர் அணியின் ஏழு தோழர்கள் கூடி ஆர்ப்பாட்டம் செய்தனர். அவர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டது எனக் கூறி போலீசார் உடனே கைது செய்தனர்.

எஜமானின் விசுவாச அடிமைகள் ஜனநாயகத்தைப் பற்றி சற்றும் கவலைப்படவில்லை. சுதந்திரத்தை நேசிக்கின்றவர்களுக்கோ அடிமைத்தனத்தை சகிக்க முடியவில்லை.

— ம.க.இ.க., சென்னை.

# அமெரிக்காவின் அணு ஆயுத வெறி

அணு ஆயுதப் பரவல் தடுப்பு, பன்முகப்பட்ட அணு ஆயுதச் சோதனை தடுப்பு ஒப்பந்தங்களில் கையெழுத்திடுமாறு வளரும் நாடுகளை மிரட்டி வரும் அமெரிக்கா, அடுத்தடுத்து அணு ஆயுதச் சோதனைகளிலும், ஆயுத மேம்பாட்டிலும் தீவிரமாக இறங்கியுள்ளது. அண்மையில் நேவடாவில் குறைந்த திறன் கொண்ட இரு அணு ஆயுத சோதனை வெடிப்புகளை (Subcritical Test) பூமிக்கடியில் நடத்தியுள்ளது. ''குறைந்த அளவிலான புளுட்டோனியம் அல்லது யுரேனியத்தைக் கொண்டு நடத்தப்படும் இத்தகைய சோதனைகள் குண்டு வெடிப்புகள் போல இருந்தாலும் அணு ஆயுதங்கள் போல தொடர் விளைவுகளை ஏற்படுத்தாது; ஏற்கனவே உள்ள அணு ஆயுதங்களின் பாதுகாப்பு, செயல்திறன் பற்றி அறிவதற்கே இச்சோதனைகள்'' என்று தனது அணு ஆயுத ஆனால் பல விஞ்ஞானிகள், ஒரு அணு ஆயுதம் 40 முதல் 60 ஆண்டுகள் வரை ஆற்றல் பெற்றவை என்று அமெரிக்காவின் போலி நியாயவாதங்களை அம்பலப்படுத்துகின்றனர். ஏற்கனவே அமெரிக்காவிடமுள்ள அணு ஆயுதங்களைக் கொண்டு உலகை 17 முறை அழிக்க முடியும். இந்நிலையில் மேலும் தீவிரமாகும் அணு ஆயுதக் குவிப்பினால் உலகமே மயான பூமியாகும் அபாயத்திலுள்ளது.

தற்போது சனி கிரகத்துக்கு ''காசினி'' எனும் விண்கோளை அமெரிக்கா ஏவியுள்ளது. 2004-ம் ஆண்டில் சனியைச் சென்றடையும் இக்கோளுக்கு சக்தியளிக்க 30 கிலோ எடையுள்ள புளுட்டோனியம் அடங்கிய மின்கலங்கள் வைக்கப்பட்டுள்ளன. எந்த விண்கோளும் இந்த அளவுக்கு கதிரியக்க ஆற்றல் கொண்ட புளுட்டோனியத்தைக்




''அணு ஆயுத பாசிசம் ஒழிக!'' - அணுக் கதிர்வீச்சு அபாயம் கொண்ட அமெரிக்காவின் ''காசினி'' விண்கோளுக்கு எதிராக ஆர்ப்பாட்டம்.

வெறியை மூடிமறைக்க விஞ்ஞான முலாம் பூசுகிறது.

ஆனால், அணுஆயுத மேம்பாட்டிற்கும் சோதனைகளுக்கும் அடுத்த பத்தாண்டுகளில் 4000 கோடி டாலருக்கு மேல் செலவிடத் தீர்மானித்திருப்பதும், புதிதாக மூன்று அணு ஆயுதச் சோதனை நிலையங்களை நிறுவத் திட்டமிட்டிருப்பதும் அதன் கோர முகத்தை திரைகிழித்துக் காட்டுகின்றன. ஒரு அணு ஆயுதத்தின் ஆற்றல் 13 ஆண்டுகளே நீடிக்கும் என்று வரையறுத்துக் கொண்டு, செயலிழந்து விட்ட ஆயுதங்களை ஈடுசெய்வதாகக் கூறிக் கொண்டு வெறிபிடித்த அணு ஆயுதக் குவிப்பில் அமெரிக்கா ஈடுபட்டு வருகிறது.

கொண்டு சென்றதில்லை. நடுவானில் விண்கோள் பழுதடைந்து வெடித்துச் சிதறினால், பூமியை சக்திவாய்ந்த அணுக்கதிர்கள் தாக்கும். பேரழிவுகளே அதன் விளைவாகும். இக்கொடுஞ்செயலை உலகின் பல்வேறு விஞ்ஞானிகள் கண்டித்துள்ளதோடு, அணு எதிர்ப்பாளர்கள் ''காசினி'' விண்கோளுக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களையும் நடத்தியுள்ளனர். மேலாதிக்க வெறியோடு அணு ஆயுதக் குவிப்பில் ஈடுபட்டு உலகை அச்சுறுத்திவரும் அமெரிக்காவுக்கு எதிராகப் பெருகிவரும் எதிர்ப்புகளைச் சாதகமாக்கிக் கொண்டு, உலக மக்கள் அதை அம்பலப்படுத்தி முறியடிக்க வேண்டிய தருணமிது.



படிப்பகம்

www.padippakam.com

# திடீர் தமிழன் மூப்பனாரின் சாதி எதிர்ப்பு சவடால்கள்

இன்று தமிழகத்தில் ஆதிக்கம் செலுத்தும் பார்ப்பன பத்திரிக்கைகள் சில தலைவர்களை உருவாக்கி, ஒளி வட்டம் போட்டு அரியணையிலும் அமர்த்தி விடுகின்றன. பார்ப்பன - பாசிச ஜெயாவை இப்படித்தான் உருவாக்கி, தமிழகத்தில் ஒரு ஐந்து ஆண்டு இருண்ட காலத்தைக் கொண்டு வந்தன.

இப்போது அவற்றில் சில, மீண்டும் ஜெயாவைத் தூக்கி நிறுத்தும் திருப்பணியைச் செவ்வனே செய்து வருகின்றன. மற்ற சிலவோ மூப்பனாரை 'பெருந்'தலைவராக ஒளிவட்டம் போட்டுக் காட்டுகின்றன.

குறிப்பாக, சாதிக் கலவரத்துக்கு எதிராக உறுதியாக செயல்படுகிறார் என அடுத்தடுத்து செய்திகளையும் படங்களையும் வெளியிடுகின்றன:

- தென் மாவட்டங்களில் சாதிக் கலவரம் நடந்த போது அப்பகுதிகளில் நேரே சென்ற முதல் தலைவர். மக்களை நேரில் பார்த்து பேசி ஆறுதல் சொன்னவர். அவர்களுடன் தரையில் அமர்ந்து பேசினார்.
- பேருந்துகள், மாவட்டங்களுக்கு வைக்கப் பட்ட சாதித் தலைவர்கள் பெயரை நீக்கும்படி முதலில் குரல் கொடுத்தார். இதனால் அச்சாதிய ஓட்டுக்கள் கிடைக்காமல் போய்விடுமோ என்ற பயமின்றி உறுதியாக இருந்தார்.
- தனது தமிழ் மாநில காங்கிரசு கட்சியினர் சாதீய கூட்டங்கள், மாநாடுகளில் கலந்து கொள்ள தடை போட்டதிலும் முதலாவதாக இருந்தார். சென்னை சூளை பகுதியைச் சேர்ந்த ஆதி திராவிட மாணவர் எம்.சி. சங்கருக்கு பொறியியற் கல்லூரியில் இடம் கிடைத்தும் சேருவதற்கான பணமின்றி பரிதவிக்கிறார் என்ற செய்தி தினமணியில் வந்த அன்றே அம்மாணவருக்கு பணம் கொடுத்து உதவினார்
- வெளியூர் பொதுக் கூட்டங்களுக்குச் சென்றால் தாழ்த்தப்பட்டவர்கள் வீடுகளில் தான் சாப்பிடுவேன் என்று உறுதி எடுத்துள்ளார்.

— இப்படி அடுக்கடுக்காக செய்திகளை வெளியிட்டு சாதிக் கொடுமைகளுக்கு எதிராக உறுதியாக நிற்கும் தலைவர் என விளம்பரப்படுத்துகின்றனர். ஆனால் உண்மையோ வேறு விதமாயுள்ளது.

தஞ்சையில் பெரும்பாலான கூலி விவசாயிகள் தாழ்த்தப்பட்ட மக்கள்தான். எனவே தான் அம்மக்கள் மீது சாணிப்பாலும், சவுக்கடியும் என்ற கொடூரமான மனிதத் தன்மையற்ற அடக்குமுறை ஏவிவிடப்பட்டது. ஒன்றுபட்ட கம்யூனிச இயக்கம் இந்த அடக்குமுறைகளுக்கு எதிராக கூலி விவசாயிகளைத் திரட்டிப் போராடி வென்றது. ஆயிரக்கணக்கான வேலி நிலங்களை இன்றும் வைத்துள்ள மூப்பனார், தாழ்த்தப்பட்ட மக்களின் மீதான இந்தக் கொடூரமான அடக்குமுறையை நடத்தியதற்கு ஒரு வரி, ஒரே ஒரு வரி மன்னிப்பாவது கேட்டுள்ளாரா?

அடக்குமுறைக்கு எதிரான போராட்டம் நடந்திருக்காவிட்டால், சாணிப் பாலுக்கும் சவுக்கடிக்கும் தாழ்த்தப்பட்ட மக்கள் இன்றும் தனது இன்னுயிரைத் தந்து கொண்டிருப்பார்கள். இன்றைக்கும் மூப்பனாரின் ஊரில் தாழ்த்தப்பட்ட மக்கள் இவரது பெயரைக் கூற முடியாது என்பதே இதற்கு சான்றாக அமையும்.

மூப்பனாரின் குடும்ப பொறுப்பிலுள்ள திருப்பதி வெங்கடாசலபதி அன்னதான சத்திரத்தில் மேல்சாதி இந்துக்களுக்கு அன்னதானம் வழங்கப்படுகிறது. அங்கு தாழ்த்தப்பட்டவர்கள் நுழையக் கூட உரிமையில்லை. இந்த பார்ப்பனீய ஏற்பாட்டை மாற்றியமைக்க மூப்பனாரை தடுப்பது எது? மேல் சாதி ஆதிக்க உணர்வன்றி வேறென்ன? இந்த லட்சணத்தில் கோயில்களில் சமபந்தி விருந்து என வரிசையிலமர்ந்து நாடகமாடுவது யாரை ஏய்க்க?

ஆயிரம் ஆண்டுகளாக அண்ணன் தம்பிகளாக பழகி வந்தார்களாம், மேல்சாதி வெறியர்களும் தாழ்த்தப்பட்ட மக்களும். பான்பராக் மென்று கொண்டே தனது திருவாய் திறந்து பேசியுள்ளார் மூப்பனார். சாணிப்பாலும் சவுக்கடியும் வாங்கி செத்த தாழ்த்தப்பட்ட மக்கள் வந்து சாட்சி சொல்ல மாட்டார்கள் என்கிற தைரியம்தானே?

பழைய வரலாற்றுக்குக் கூட போக வேண்டாம். முதுகளத்தூர் கலவரம் தொடங்கி, கீழவெண்மணியில் வெந்து சாம்பலானவர்கள் - ஊஞ்சனையில் உயிரை விட்டவர்கள் - விழுப்புரத்தில் செத்து மடிந்தவர்கள் - இன்னும் பல நூறு சாதிக் கலவரங்களில் இன்னுயிரை இழந்த தாழ்த்தப்பட்டவர்கள் - இவை போதாதா மேல் சாதி வெறியர்களின் கொலை வெறியாட்டத்தை வெளிச்சம் போட்டுக் காட்ட! இத்தனைக்கும் பின்னே, அண்ணன் தம்பிகளாக பழகி வந்தார்கள் என பேசினால் அரசியல் சூன்யம் என்பதாக இருக்க வேண்டும். இல்லை என்றால் மேல் சாதி வெறியர்கள் கூறுவதெல்லாம் வேத வாக்கு என எடுத்துக் கொள்ள வேண்டும் என்கிற திமிராக இருக்க வேண்டும். மூப்பனார் இந்த இரண்டுக்கும் சொந்தக்காரர்.

தீண்டாமை பாராட்டுபவருக்கு கட்சியில் இடமில்லை என சவடால் அடிக்கிறார் மூப்பனார். இதை நடைமுறைப் படுத்தினால் மூப்பனார் உட்பட யாருமே அவரது கட்சியில் இருக்க முடியாதே!

சமீபத்தில் மயிலாடுதுறை எம்.பி., பி.வி. இராசேந்திரனின் பெயரைச் சொன்ன ம.க.இ.க. தோழர் தாழ்த்தப்பட்டவர் என்பதாலேயே எம்.பி.யின் கைத்தடிகள் வேதாரண்யம் ம.க.இ.க. பொதுக் கூட்டத்தில் கலவரம் செய்ய முயன்றனர். அந்த மேல் சாதி வெறியன் மீது என்ன நடவடிக்கை எடுத்தார் மூப்பனார்?

மூப்பனார் என்ற சாதிப் பெயரை நீக்க தயாரா என பா.ம.க. ராமதாஸ் கேட்டதும் கிளம்பிய ஆத்திரம் மூப்பனாரை யார் என வெளிச்சம் போட்டுக் காட்டியது.

சாதிக் கலவரம் நடந்த பகுதிக்குச் சென்று இந்த 'உத்தமர்' கண்டுபிடித்த உண்



த.மா.கா. மதுரையில் நடத்திய தாழ்த்தப்பட்டோர் உரிமை பாதுகாப்பு மண்டல மாநாடு : ஓட்டுப்பொறுக்கப்போடும் நாடகம்.



படிப்பகம்

www.padippakam.com

மைதான் என்ன? ஏதுமில்லை. தாழ்த்தப்பட்ட மக்களுக்கு டீக்கடையில் தனிக் குவளை வைத்திருப்பது இவரது கண்ணில் படவில்லை. சிறட்டை ஊர்வலம் விட்ட நாடார் சாதி வெறியர்களின் வெறியாட்டத்தை வசதியாக மறைத்து விட்டார். சங்கரலிங்கம் பெயர் கொண்ட பேருந்தை ஊருக்குள் விட மறுத்த தேவர் சாதி வெறியர்களின் கொலைவெறியாட்டத்தை விழுங்கி விட்டார்.

அடுத்த தேர்தலில் ஓட்டுப் பொறுக்க வேண்டும். அதற்காக கலவரப் பகுதிகளுக்கு சென்று 'போஸ்' கொடுத்து வந்தார். தாழ்த்தப்பட்ட மாணவனுக்கு பண உதவி செய்து விளம்பரம் தேடிக் கொண்டாகி விட்டது. மேல் சாதி வெறியர்களின் கொடூரங்களை கண்டு கொள்ளவில்லை. எல்லா தரப்பினரின் ஓட்டு நிச்சயம் என பகற் கனவு காணத் தொடங்கி விட்டார்.

தமிழகத்தில் தனித்து நின்று ஆட்சியைப் பிடிப்போம் என 1989-ல் காங்கிரசார் குளுரைத்தார்கள். அத்தேர்தலின் போது தாழ்த்தப்பட்ட மக்களின் மீது சாதிக் கலவரத்தைத் திட்டமிட்டு கட்டவிழ்த்து விட்டது மூப்பனார் தலைமையிலான காங்கிரசு குண்டர் படை. மூப்பனார் இதை மறந்திருக்கலாம். தாழ்த்தப்பட்ட மக்களும் ஜனநாயக உணர்வு கொண்ட தமிழக மக்களும் நிச்சயம் மறக்க மாட்டார்கள்.

• முத்து

## சிவப்பஞ்சலி

"க.ப." என அன்புடன் அழைக்கப்பட்ட தஞ்சை, பிரமன் பேட்டை தோழர் க. பழனிவேலு 28.9.97 அன்று காலை 6 மணிக்குக் கடும் மாரடைப்பால் காலமானார். தஞ்சை மாவட்ட விவசாயிகள் விடுதலை முன்னணியில் முன்னணிப் பாத்திரம் வகித்தவர் தோழர் க.ப. தனது இளம் வயதில் பெரியம்மை நோயால் தாக்குண்டு இரு கண் பார்வையையும் இழந்திருந்தாலும், எந்தத் துணையும் இல்லாமலேயே தன்னந்தனியாகவே சென்று அமைப்பு வேலைகளில் ஈடுபட்டு அனைவருக்கும் எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தவர். 1988-இல் குடமுருட்டி வெடி குண்டு வழக்கில் கைதாகி, போலீஸ் அடக்குமுறையை தனது நெஞ்சுறுதியால் வெற்றி கொண்டவர். ஆசை வார்த்தை காட்டி அமைப்பிலிருந்து விலகுமாறு கூறிய போலீசை எள்ளி நகையாடி, நிராகரித்து இறுதி வரை மார்க்சிய - லெனினிய - மாவோ சிந்தனைக்கு விசுவாசமாக நின்றவர். 27.9.97 அன்று வல்லத்தில் நடைபெற்ற தீண்டாமை - சாதி ஒழிப்பு இயக்கப் பொதுக்கூட்டத்தில் பங்கேற்று, மறுநாள் காலை ஊருக்குத் திரும்பும் வழியிலேயே மாரடைப்பு ஏற்பட்டு தோழர் உயிர் நீத்தார்.

செய்தியறிந்த ம.க.இ.க. தோழர்கள் திரண்டு ஒரு கம்யூனிஸ்ட்டுக்குரிய மரியாதையுடன் தோழரின் பூத உடலை அடக்கம் செய்தனர். பின்னர் ம.க.இ.க மாநில இணைச் செயலர் தோழர் காளியப்பன் தலைமையில் இரங்கல் கூட்டம் நடைபெற்றது.

**தோழர் பழனிவேலு புகழ் நீடு வாழ்க!**

— ம.க.இ.க., தஞ்சை

# தாய்லாந்து - மெக்சிகோ வழியில் சட்டபூர்வ வழிப்பறிக்கு ஏற்பாடு

நெடுஞ்சாலைகள் அமைத்தல், நகரப் போக்குவரத்து கட்டுமானப் பணிகள் முதலானவற்றை தனியார் நிறுவனங்களிடம் ஒப்படைத்தால் என்ன கதி ஏற்படும் என்பதை திவாலாகிப் போன மெக்சிகோ, தாய்லாந்து நாடுகளின் அனுபவங்களே நிரூபித்துக் காட்டுகின்றன.

கடந்த அக்டோபர் முதல் வாரத்தில் தாய்லாந்து அரசு "ஹோப்ஃபுல் ஹோல்டிங்ஸ்" எனும் தனியார் கட்டுமான நிறுவனத்துடனான ஒப்பந்தத்தை ரத்து செய்தது. 5300 கோடி டாலர் செலவில் தலைநகர் பாங்காக்கின் விரைவு போக்குவரத்துக்கான கட்டுமானப் பணிகளைச் செய்ய ஒப்பந்தமிட்ட இந்நிறுவனம், அதனை உரிய காலத்திற்குள் முடிக்காமல் இழுத்தடித்து வந்தது. ஆறாண்டுகளுக்குப் பின்னரும் 20% வேலைகளே நிறைவேறியுள்ளன.

பாங்காங் விரைவு நெடுஞ்சாலைப் பணிகள் தொடங்கியதும், அச்சாலையை ஒட்டியுள்ள வீட்டுமனைகளின் விலைகள் உயரும்; இதன் மூலம் தனது பங்குகளுக்கு கிராக்கி ஏற்பட்டு லாபம் பெருகும் என்று அந்நிறுவனம் எதிர்பார்த்தது. ஆனால் எதிர்பார்த்தபடி வீட்டு மனை விற்பனை பரபரப்பாக நடக்கவில்லை. மேலும், பாங்காக் பங்குச் சந்தை வீழ்ச்சியால், எதிர்பார்த்த லாபம் கிடைக்காது என்று அந்நிறுவனம் கட்டுமானப் பணிகளைத் தாமதப்படுத்தியது. எதிர்க்கட்சிகள் இதை அம்பலப்படுத்தத் தொடங்கியதும், வேறுவழியின்றி தாய்லாந்து அரசு ஒப்பந்தத்தை ரத்து செய்து விட்டு, தானே அக்கட்டுமானப் பணியைச் செய்து வருகிறது. இதனால் ஏற்பட்ட நட்டத்தை தாய்லாந்து அரசே ஏற்றுக் கொண்டுள்ளது.

மெக்சிகோவில் 800 கோடி டாலர் செலவில் நெடுஞ்சாலைகள் அமைத்து, செலவுகளை சுங்க வரிமூலம் வசூலித்துக் கொள்ளும் உரிமை 23 தனியார் நிறுவனங்களுக்கு விடப்பட்டன. இதன்படி சாலைகள் அமைக்கப்பட்ட போதிலும், செலவுகள் அதிகரித்து விட்டதாகக் கூறி இந்நிறுவனங்கள் நடந்து செல்லும் பாதசாரிகளிடம் கூட சுங்கவரியைப் பிடுங்கின. இச்சாலைகளில் செல்லும் வாகனங்களிடம் அநியாய சுங்க வரியை விதித்து பகற்கொள்ளை அடித்தன. இதனால் மக்களின் எதிர்ப்பும் போராட்டமும் பெருகத் தொடங்கியதும், இச்சுங்க வரிகளை ரத்து செய்து தனியார் நிறுவனங்களுக்கு ஏற்பட்ட கூடுதல் செலவை தானே அடைப்பதாக இப்போது மெக்சிகோ அரசு அறிவித்துள்ளது. இதனால் பெருத்த நட்டத்திற்கு ஆளாகி மெக்சிகோ அரசு பரிதவிக்கிறது.

இந்நிலையில், தமிழகத்தில் தனியார் நிறுவனங்கள் சாலைகள் அமைக்கவும், இச்சாலைகளைப் பயன்படுத்துவோரிடம் சுங்கவரி வசூலித்துக் கொள்ளவும் உரிமை வழங்கும் புதிய சட்டத் திருத்தத்தை தமிழக அரசு அண்மையில் கொண்டு வந்துள்ளது. இதன் மூலம் தனியார் நிறுவனங்கள் சாலை சுங்கவரி என்ற பெயரில் மக்களிடம் சட்டபூர்வ வழிப்பறி செய்ய அரசே ஏற்பாடு செய்து கொடுத்துள்ளது. மறுபுறம், இத்தனியார் நிறுவனங்கள் உரிய காலத்தில் சாலைகளை நிறுவாமல் இழுத்தடித்தாலும் அதன் பாதிப்பும் நட்டமும் மக்கள் தலைமீதே சுமத்தப்படும். தாய்லாந்து, மெக்சிகோ அனுபவங்களை உணர்ந்து தமிழக மக்கள் இத்தனியார்மயக் கொள்ளையை விழிப்புடனிருந்து முறியடிக்க வேண்டியுள்ளது.

## 12-ஆம் ஆண்டு நிறைவில் புதிய ஜனநாயகம்

இந்த இதழுடன் புதிய ஜனநாயகம் 12-ஆவது ஆண்டை நிறைவு செய்கிறது. பல்வேறு அரசியல் - பொருளாதார நெருக்கடிகளுக்கு இடையே, மார்க்சிய - லெனினிய அரசியல் ஏடொன்று, முற்றிலும் தடைபட்டு நின்று விடாமல் வந்து கொண்டிருப்பது, இந்திய புரட்சிகர வரலாற்றிலேயே இது முதன் முறையாகும். ஆனாலும், கடந்த நான்கைந்து ஆண்டுகளாக பு.ஜ. மாதம் ஒருமுறை மட்டுமே வந்து கொண்டுள்ளது. மறுகாலனியாக்கம், இந்து மதவெறி பாசிச அபாயம் நிலவி வரும் இச்சூழலில், பு.ஜ. முறையாக வெளிவராமல் இருப்பது வேதனையளிக்கக் கூடியது. நிதி நெருக்கடி அச்சுறுத்தும் அபாயமாக எழுந்து நிற்கிறது.

இந் நிதி நெருக்கடியைச் சமாளித்து வெற்றி பெற வாசகத் தோழர்களின் ஒத்துழைப்பு மிக அவசியம். நண்பர்களிடமும், உறவினர்களிடமும், அலுவலகங்களிலும், தொழிற்சாலைகளிலும் பு.ஜ.வை அறிமுகப்படுத்தி, சந்தா சேகரித்து அனுப்புவதன் மூலம் இந்நிதி நெருக்கடியைச் சமாளிக்க வாசகர்கள் உதவலாம். இதோடு, படைப்புகளையும், கருத்துக்களையும் அனுப்பி வைத்து, பு.ஜ.வை மேலும் சிறப்பாக வளர்த்துச் செல்லவும் உதவ வேண்டுகிறோம். தனது வாசகர்களிடமிருந்து இந்த ஒத்துழைப்பு கண்டிப்பாகக் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பில் பு.ஜ. தனது புரட்சிகர பயணத்தைத் தொடர்கிறது.

ஆசிரியர் குழு.



படிப்பகம்

www.padippakam.com

# பின்னோடிகளான "முன்னோடி"கள்

### புரட்சிகர இயக்கங்களின் வெற்றியும் "முன்னோடி"களின் சின்னபுத்தியும்

நமது பத்திரிகைகளும், ஒலிநாடா கலை நிகழ்ச்சிகளும், சிறுவெளியீடுகளும் மூன்று அமைப்புகளும் (ம.க.இ.க., வி.வி.மு., பு.மா.இ.மு.,) இணைந்து தமிழ்நாடு தழுவிய அளவில் முன்னெடுத்த கருவறை நுழைவு, இறால் பண்ணை அழிப்பு, திடீர்ப் பணக்கார அரசியல் ரௌடிகள் எதிர்ப்பு, நெய்வேலி அனல் மின்நிலைய முற்றுகை, விநோதகன் மருத்துவமனையைக் கைப்பற்றுவது, இப்போது துவங்கியிருக்கும் சாதி - தீண்டாமை ஒழிப்பு இயக்கம், தமிழ் மக்கள் இசைவிழா ஆகியவை தமிழ்நாட்டு அரசியலில் குறிப்பிடத்தக்க செல்வாக்கை - தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கின்றன. வேறு ஏதாவது உள்நோக்கம் கொண்டவர்கள் மட்டுமே இதை மறுக்க முடியும்.

ஆனால் ம.ஜ.இ.க.வும், மு.இ. அணியும் பொறாமைக் குணம் கொப்பளிக்க சில அவதூறுகளையும் பரப்பி வருகின்றனர். "அடுத்தடுத்து இயக்கங்கள் நடத்துவதற்கு பு.ஜ.வினரால் எப்படி முடிகிறது? தன்னார்வக் குழுக்களிடம் பணம் வாங்கிக் கொண்டு செய்வதாக இருக்கலாம்" என்று ம.ஜ.இ.க. அவதூறு பரப்புகிறது.

"மக்கள் பிரச்சினைகளை வைத்துப் பிரச்சாரம், போராட்டம் எனத் தன்னெழுச்சி அரசியல் நடத்திவிட்டு, அந்தப் பக்கம் திரும்பிக் கூடப் பார்ப்பது கிடையாது; நீடித்த மக்கள் இயக்கங்களைக் கட்டும் நோக்கமும், கிடையாது. பரபரப்புப் பிரச்சார நாயகர்கள் என்பதால் ஐக்கிய முன்னணி, கூட்டு நடவடிக்கை பற்றி அக்கறை இல்லை" - என்று "முன்னோடி" விமர்சிக்கிறது.

புரட்சிகர இயக்கத்தைக் கட்டியெழுப்புவதில் நாமும், ம.ஜ.இ.க., மு.இ. அணியினரும் அடிப்படையில் வேறுவேறான அணுகுமுறையைக் கொண்டிருக்கிறோம். நமது அரசியல் போர்த் தந்திரமாகிய ஊசலாட்ட சமரச சக்திகளைத் தனிமைப்படுத்தும் தாக்குதல் திசை வழியையும், அதன் வழிகாட்டுதலின் அடிப்படையில் வகுக்கப்படும் தந்திரோபாய அரசியல் நடத்தை, முழக்கங்கள், போராட்ட முறைகளையும், அமைப்பு வடிவங்களையும் புரிந்து கொள்ளவும், அங்கீகரிக்கவும் மறுக்கும் வரை அவர்கள் இப்படி ஏதாவது அவதூறுகள் செய்து கொண்டுதானிருப்பர்.

"நீடித்த மக்கள் இயக்கம்" என்பதற்கு தெளிவான பொருள்வரையறை எதுவும் அவர்களிடமே கிடையாது; அப்படிப்பட்ட இயக்கமெதுவும் இவர்களே கடந்த பல ஆண்டு முயற்சிகளினால் கட்டியெழுப்பியதும் இல்லை. அதிகம் போனால், தர்மபுரி பாலன் கடைப்பிடித்த நடவடிக்கைகளையே அவர்கள் நீடித்த மக்கள் இயக்கங்கள் என்கிறார்கள். அவை என்ன? சாதிப் பிரச்சினை, கந்து வட்டி, நிலப் பிரச்சினை போன்ற அன்றாடப் பிரச்சினைகளில் தலையிட்டு, பஞ்சாயத்துக்கள் நடத்துவது; பல ஊர்களைச் சேர்ந்த அணிகளைத் திரட்டி ஒரு கிராமத்தில் கூட்டங்கள் நடத்துவது; கலை நிகழ்ச்சிகள், கூட்டு உணவு, அரசியல் பிரச்சாரம் போன்றவை அதில் முக்கியமானவை. நமது அமைப்புகள் மைய அரசியல் இயக்கங்களை மட்டும் நடத்தவில்லை. தர்மபுரியில் பாலன் மேற்கொண்டதைப் போன்று கள்ளச் சாராயம், கந்து வட்டி, நிலப்பிரச்சினை, சாதிப்பிரச்சினை, உள்ளூர் அரசியல் ரௌடிகளை எதிர்ப்பது மற்றும் அரசியல் நடவடிக்கைகள் எனப் பலவற்றையும் பல ஊர்களிலும் பல மடங்கு அதிகமாக தொடர்ந்து நடத்திக் கொண்டிருக்கின்றன. இத்துடன் அரசியல் இயக்கங்களும் இணையும்போது ஒரு சக்தி மிக்க அரசியல் இயக்கமாக நமது அமைப்புகள் வளருகின்றன. இத்தகைய அணுகுமுறை இல்லை என்றால் பகுதி, அன்றாடப் பிரச்சினைகளுக்கான செயல்பாடுகள் போர்க்குணமிக்க பொருளாதார வாதமாகவே சீரழியும்; தனிமைப்படுத்தப்பட்டு ஒடுக்கப்படும்.

இந்தியாவின் சிறப்பான அரசியல் நிலைமைகளில் இவை இல்லாமல், மக்கள் யுத்தம் தொடுப்பதென்பது வெறும் சாகச நடவடிக்கைகளாகவே முடியும். இதனால் ஆந்திர - தண்டகாரண்யா, பீகார் இயக்கங்கள் ஒரு குறிப்பிட்ட கட்டத்திற்கு மேல் தேக்க நிலையை அடைந்துள்ளன. இதை மறைத்து, புதிய பகுதிகளில் புதிய நடவடிக்கைகள் என்று சுழல் வட்டத்தில் சிக்கியுள்ளது. மேலும் தண்டகாரண்யா, பீகாரின் சில மாவட்டங்கள் தவிர, நாட்டின் வேறெந்தப் பகுதியிலும் எந்த மாதிரி "நீடித்த இயக்கமும்" இல்லாமல் இருட்டில் தடுமாறிக் கொண்டிருக்கின்றனர். அதே சமயம் அரசியல் தந்திரோபாய அடிப்படையிலான இயக்கங்களை எடுப்பதில் நாட்டிலேயே நமது அமைப்புகள் தாம் முன்னுதாரணங்களை வழங்கியுள்ளன.

இவற்றின் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்ளாத "முன்னோடி"கள், நம்மைப் பரபரப்பு நாயகர்கள் என அவதூறு செய்கின்றனர். ஆனால், அரசியல் தாக்குதல் திசை வழி இன்றி, தந்திரோபாய நடத்தை வழியோ, முழக்கமோ இல்லாமல், அவ்வப்போது ஆளும் வர்க்கத்தினால் முன்னுக்குத் தள்ளப்படும் அன்றாட விவகாரங்களின் பேரில் உதிரித்தனமாக இயக்கங்களை அறிவிப்பதும், இரயிலில் வெடிகுண்டு வீசி சாதாரண மக்களைக் கொல்வதும், "கொரில்லா" முறையில் பேருந்துகளைக் கொளுத்துவதும், 3, 4 பேர் படிப்புச் சான்றிதழ்களை எரிப்பதும் நீடித்த மக்கள் இயக்கங்களாகக் கருதுகின்றனர்.

நாம் பகுதிகளில் தொடர்ச்சி தருவதில்லை என்று புளுகும் இவர்கள், தெற்கே வாசுதேவநல்லூர், சிவகிரி, வடக்கே ஓசூர், திருப்பத்தூர் எனப் பல பகுதிகளிலும் இப்போது ஏன் காணாமல் போனார்கள். அமைப்பே இல்லாத ஊர்களில் நிகழ்ச்சிகள் நடத்துவதாகக் குறை கூறும் "முன்னோடி"கள், கத்தாரையும், வரவர ராவையும் கொண்டு வந்து நிகழ்ச்சிகள் நடத்தும் ஊர்களில் எல்லாம் அமைப்புகள் உள்ளனவா? திருச்சியில் எம்.எஸ்.நாடார் - அ. மார்க்சை வைத்து கத்தார் நிகழ்ச்சி நடத்தினார்களே, அவர்களெல்லாம் இவர்களுடைய அமைப்பினரா? அங்கு 2, 3 பேரை அனுப்பி ரயில் மறியல் நடத்தினார்களே, அவர்கள் உதவி நாடி எந்த அமைப்பிடம் வந்தார்கள்? அவ்வளவு ஏன்? இதே பதிலில், "எமக்குத் தொடர்புகள் கூட இல்லாதிருந்த அப்பகுதியில் (கும்மிடிப்பூண்டியில்) இதரப் பிரிவினரையும் இணைத்துக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது" என்கிறார்கள். தொடர்புகள் கூட இல்லாத பகுதியில் கூட்டு நடவடிக்கைகளில், அதுவும் தன்னார்வக் குழுவுடன் "முன்னோடி"கள் போகலாம்; ஆனால் நாம் பிரச்சாரக் கூட்டங்கள் கூட நடத்தக் கூடாதா?

"ஏற்புடைய விசயங்களில் ராமதாஸ், நஞ்சுண்டசாமி அல்லது முனியாண்டி யாராயிருந்தாலும் இணைக்கப்படக் கூடிய சக்தியாயிருந்தால் இணைந்து போராடுவோம்; கூட்டுச் சேர்ந்து செயல்படுவோம். மற்றபடி லாபம் கருதி சந்தர்ப்பவாதமாகப் பயன்படுத்திக் கொள்ளும் வழிமுறை எமதல்ல" என்று "முன்னோடி" பச்சையாகப் புளுகுகிறது. பண்பாட்டு அமைப்பு மாநாடுகளுக்குத் தலைமையேற்கவும், வரவேற்புக் குழு அமைக்கவும் அவர்கள் இப்படித்தான் செயல்படுகிறார்களா? அமைப்பு மாநாட்டுக்கு அமைப்புக்கே எதிராகப் பேசும் பிரபல வெளியாட் தலைமையேற்க அழைப்பதும், சினிமா நடிகர் - நடிகைகள், கவிஞர்கள் என, பிரபலங்களை வெறும் கவர்ச்சிக்காக - மதிப்புக்காக வரவேற்புக் குழு எனப் பெயர்போடுவதும், அவர்கள் மாநாடு பக்கம் தலை வைத்துக் கூடப் படுப்பதில்லை என்பதும் "முன்னோடி"களின் நடைமுறையாக இல்லையா? "ஏதாவது பிரச்சினையைப் பிடித்துத் தொங்கிப் பிரபலமாகிவிடலாம் என்று நினைப்பவர்கள்" என்று நம்மைக் குறை கூறும் இவர்கள், ஏதாவது பிரபல நபர்களைப் பார்த்துப் பிரபலமாகிவிட நினைப்பது சரியா?

### தியாகிகளின் வியாபார முத்திரை ஏகபோக உரிமைகோரும் "முன்னோடி"

தமிழ்நாட்டில் ம.யு.குழு உருவாகி 17 ஆண்டுகள் ஆகின்றன. தலைமையிடம் இருந்து ஆதரவு பல பெற்றும் - கத்தார், வரவரராவ், சிகந்தர் எனப் பலர் வந்து தூக்கி நிறுத்த முயன்றும் துவண்டு விழுகின்றன - தமிழ்நாட்டு அமைப்புகள். தமிழ்நாட்டில் அவர்கள் என்ன சாதித்தார்கள் என்று எழு



படிப்பகம்

www.padippakam.com

தவே இல்லை. 15 ஆண்டுகளுக்கு முந்திய பாலன் செயல்பாடுகளையே - "காலிப் பெருங்காய டப்பா"வை வைத்து வாசங்காட்டுவதைப் போல - திரும்பத் திரும்பக் கூறுகின்றனர். இப்போது என்ன செய்கிறீர்கள் என்று கேட்டால், தமிழ்நாட்டுத் தலைமை துரோகம் செய்து விட்டது என்று அதையே கூறுகின்றனர். அதுவும் 10 ஆண்டுகளுக்கு முந்திய கதை. பாலன், அப்பு சிலை திறந்த போது மக்கள் திரண்டது 10,000 பேர் என்றார்கள். இந்த ஆண்டு தியாகிகள் நினைவு தினத்திற்கு திரட்ட முடிந்தது 400 பேர். கூட்டு முயற்சியாக நடத்திய சாதி - சமத்துவ மாநாட்டுக்கு பிற அமைப்பினரும் சேர்ந்து திரண்டது 70 பேர்.

இந்த இலட்சணத்தில் முன்னோடி எழுதுகிறது: "இன்று இந்தியா முழுவதும் புரட்சிகர இயக்கமாக சனநாயக சக்திகளாலும், பல்லாயிரம் உழவர் தொழிலாளர்களாலும் நடுத்தர மக்களாலும் அடையாளம் காணப்படுவது." அவர்கள் இயக்கம். "தமிழக புரட்சிகர இயக்க வரலாற்றில் மு.இ.அ. மற்றும் தோழமை அமைப்புகளின் செயல்பாடுகளையும் செல்வாக்கையும் புரட்சிகர சக்திகள் அனைவரும் அறிவர்." பாருங்கள். ஒன்று அகில இந்தியாவுக்குத் தாவுகிறார்கள் அல்லது தமிழ்நாடு என்றால் வரலாறுக்குப் போகிறார்கள். இப்போது; இங்கே என்ன என்று பேசுவதில்லை.

இப்படிப்பட்ட இவர்களது பெயரையும் புகழையும் நாம் பயன்படுத்திக் கொள்ளுகிறோமாம். ம.யு.வுடன் ஐக்கியப்படப் போகிறோமே என்று பேசி வருகிறோமாம். தமிழ்நாட்டில் ம.யு.வே நாம்தான் என்றும், தன் புரட்சிகர ஆயுத நடவடிக்கைகளைக் காட்டி நாமும் அப்படிச் செய்வோம் என்கிறோமாம். குட்டி முதலாளித்துவப் புரட்சியாளர் எனச் சொன்ன சாரு மஜும்தாரைப் புரட்சியாளர் எனப் பிரசுரத்தில் போட்டும், பல ஆண்டுகளாக வழி தெரியாமல் இருந்த அப்பு, பாலன் சிலைக்கு இப்போது மாலை போட்டு கௌரவிக்கிறோமாம். கல்கத்தா பேரணியை நாமே நடத்துவதாக ம.க.இ.க. தோழர் மருதையன் கூறினாராம். இப்படி அவர்களது அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்திக் கொண்டு, மறுபுறம் திட்ட மிட்ட அவதூறு பரப்புகிறோம் என்கிறது "முன்னோடி".

இதெல்லாம் அப்பட்டமான புளுகு தவிர வேறில்லை. தோழர் அப்புவுக்கு ம.யு. தழு அமைவதற்கு முன்பே, 17 ஆண்டுகளுக்கு முன்பாகவே நினைவஞ்சலி நிகழ்ச்சி நடத்தியவர்கள் நாம். பாலன் மீது அரசியல் ரீதியாக எங்களுக்கு விமர்சனமிருந்தாலும், தியாகி என்கிற முறையில் மதித்து வந்திருக்கிறோம். குட்டி முதலாளித்துவப் புரட்சியாளர் என சாருவை நாம் மதிப்பீடு செய்வது அவரது அரசியல் சரி - தவறுகள் அடிப்படையில் தான். ஆனால் கட்சியின் நிறுவனர்களில் ஒருவர் என்கிற முறையில் நாம் மதிக்கிறோம்.

நக்சல்பாரி எழுச்சியின் 30-ஆம் ஆண்டைக் குறிக்கும் நிகழ்ச்சியின் போது இவர்களைக் கண்டு கொள்ளாமல் இருப்பது சரியா? உரிய மரியாதை செலுத்துவது தவறா? முன்னே போனால் கடிப்பார்கள் பின்னே வந்தால் உதைப்பார்கள், மரியாதை செலுத்தினால் பயன்படுத்துகிறார்கள் என்பார்கள். இல்லையானால் இருட்டடிப்பு செய்வதாக ஏசுவார்கள். எதைச் செய்ய?

பகத்சிங், பீர்சா முண்டே போன்றவர்களின் தியாகத்தைப் போற்றுவது கூட பயன்படுத்துவதாகுமா? பாலன் எங்கள் அமைப்புக் காரர், என்று சொன்னோமா? அப்பு முன்னோடிகளுக்கு மட்டும் உரியவரா? அது சரி; தியாகிகளின் வியாபார முத்திரை உரிமை தங்களுக்குரியது என்று கருதுகிறார்கள் போலும். இப்படி அவதூறு செய்யும் இவர்களது அமைப்பிடமிருந்து அரசியல் வேறுபாடு காரணமாகத் தனியாகப் போய் தனிக் கட்சி, இயக்கம் வைத்துக் கொண்ட தமிழரசனை தங்கள் கட்சிக்காரர் என்று பொருள்படும்படி பிரசுரம் போட்டுக் கொள்கிறவர், வேறெப்படிப் பிறரைப் பார்க்க முடியும்?

கல்கத்தா பேரணி நாம் நடத்துவது என்று உரிமை கொண்டாட வேண்டிய அவசியமே நமக்கில்லை. அதற்கு இணையாக நாமே இங்கேயே எழுச்சிமிகு பேரணி நடத்தியிருக்கிறோம். அது ஏற்படுத்தாத செல்வாக்கை, கல்கத்தா பேரணியைக் காட்டிப் பயன்படுத்தி அதை அடைந்துவிட எண்ணுவோமா? தமிழ்நாட்டில் நமது இயக்கம் திராவிட, திரிபுவாதக் கட்சிகளின் தலைமைகளையே கலக்கமடையச் செய்யும் அளவுக்கு வலுவாக வளரும்போது, போயும் போயும் ம.யு.வின் நடவடிக்கைகளைத்தான் பயன்படுத்த வேண்டுமா?

மக்கள் யுத்தக் குழுவுக்கும் நமக்கும் அடிப்படை நிலைப்பாடுகளில் பொதுத் தன்மைகள் இருப்பினும், இன்னமும் அடிப்படை அரசியலில் வேறுபாடுகள் உள்ளன; தண்டகாரண்யாவிலும் பீகாரிலும் நடப்பவை போர்க்குணமிக்க பொருளாதாரவாதப் போராட்டங்கள் தாம்; அவற்றுக்குப் புரட்சிகர அரசியல் அடிப்படை இல்லை; அதைப் புரிந்து கொள்ள ம.யு. தலைமை மறுக்கிறது; சர்வதேச, தேசிய அரசியல் பற்றிய ம.யு. தலைமையின் வெறுமை - இவையெல்லாம் பற்றி பலமுறை பு.ஜ. எழுதியிருக்கிறது. இப்படி ஆதார பூர்வமாக வேறுபடுத்தி எழுதி, பேசி வரும் நாம், தமிழ்நாட்டின் ம.யு. நாம்தான் என்றும், அதன் செல்வாக்கைப் பயன்படுத்துவதாகவும் கூறுவது அப்பட்டமான புளுகு தவிர வேறென்ன? இப்படி வேறுபாடுகளை எல்லாம் வெளியில் பேசவோ, எழுதவோ கூடாது என்பதுதானே அவர்களின் நிலைப்பாடு!

தமிழ்நாட்டில் நாம் நமது சொந்த முயற்சி, இயக்கங்கள் மூலமாக செல்வாக்குப் பெறமுடியும் என்பதை நிரூபித்து வருகிறோம். இந்த நிலையில் ம.யு. மற்றும் மு.இ.அ. நடவடிக்கைகளைக் காட்டி செல்வாக்குப் பெற நாங்கள் முயன்றால், அது தற்கொலைக்கு ஒப்பாகும். தமிழகத்தில் ம.யு. கட்சியே இல்லை என்று மருதையன் வாய்கூசாமல் புளுகியதாக முன்னோடி எழுதியுள்ளது. அப்படி அவர் சொல்லவே இல்லை. ஆனால் அந்த நிலையை உருவாக்கவே "முன்னோடிகள்" தீவிரமாக முயன்று வருகிறார்கள் என்பதுதான் உண்மை!

முற்றும்





தமிழ்நாட்டு அரசியலில் குறிப்பிடத்தக்க செல்வாக்கை ஏற்படுத்திய இறால் பண்ணை அழிப்புப் போராட்டம் (மேலே) மற்றும் தமிழ் மக்கள் இசை மரபை மீட்டெடுக்க, திருவையாறு தியாகய்யர் உற்சவத்தில் நடந்த ஆர்ப்பாட்டம்(கீழே) : இப்படி எமது சொந்த முயற்சியில் மக்கள் ஆதரவைத் திரட்டும் நமக்கு ஆந்திராவின் ம. யு. குழுவைக் காட்டி ஆதாயம் தேடவேண்டிய அவசியமே கிடையாது.


படிப்பகம்

www.padippakam.com

.....தலையங்கத் தொடர்ச்சி

யும் பலமே இல்லாத சிறு கும்பல்களை யும் கூட ஆட்சி அமைக்க விடுவதும், இல்லையானால் 356-ஆவது அரசியல் சட்டப்பிரிவை ஏவி ஆளுநர் ஆட்சியைப் பிரகடனம் செய்வதும், நூற்றுக்கும் மேற்பட்ட முறை நடந்துவிட்டது. எதிர்க்கட்சி அரசுகளை மட்டுமல்ல, மத்திய அரசு தனது விசுவாசிகளை மாற்றிக் கொள்ளும்போதும், தனது நேரடி இராணுவ, துணை இராணுவ ஆட்சியை நிறுவும் போதும் கூட இந்த 356-ஆவது அரசியல் சட்டப்பிரிவை ஏவிவிட்டிருக்கிறது. நாடாளுமன்ற அரசியலைக் கேலிக் கூத்தாக்கவும், மாநில அரசுகளைப் பழிவாங்கும் ஆயுதமாகவும் பாசிச இந்திரா - ராஜீவ் பரம்பரையினால் பயன்படுத்தப்பட்ட இச்சட்டப்பிரிவை, ஜனதா அரசாங்கங்களும் அதே நோக்கங்களுக்காகப் பயன்படுத்தி வந்திருக்கின்றன. பொதுவாக, வலுவான மைய அரசுக்காக வலிந்து நிற்கும் "அகில இந்திய தேசியவாதக் கட்சிகள்" 356-ஆவது பிரிவை ஆதரிப்பதிலும், ஏவிவிடுவதிலும் வியப்பில்லை. மாநில சுயாட்சி பேசி இந்தப் பிரிவையே அகற்றி விட வேண்டும் என வாதிடும் தி.மு.க. போன்ற மாநிலக் கட்சிகளும், போலி இடது சாரிக்கட்சிகளும் கூட இந்த 356-ஆவது பிரிவைப் பயன்படுத்தும் விசயத்தில் அவ்வப்போது சந்தர்ப்பவாதமாகவும் முரண்பாடாகவும் நடந்து கொண்டுள்ளன. குறிப்பாக 356-ஆவது பிரிவை அகற்றக்கோரும் மாநிலக் கட்சிகளே மத்தியில் ஆண்டு வரும் ஐக்கிய முன்னணிக்குள் பெரும்பான்மையாக இருந்த போதும்கூட, அதை அகற்ற முயலவே இல்லை.

மொத்தத்தில், நாட்டிலுள்ள எல்லா வண்ண ஓட்டுப் பொறுக்கிக் கட்சிகளும் தமக்குத் தேவையான போது பயன்படுத்திக் கொள்ளும் ஆயுதமாகவே இந்த 356-ஆவது பிரிவு உள்ளது. அதே சமயம் நாடாளுமன்ற போலி ஜனநாயகம், போலி அரசியல் கூட்டமைப்பு முறையின் முக்கிய அங்கமாகவும், தவிர்க்க முடியாததாகவும் உள்ளது. 356-ஆவது பிரிவை நீக்கி விடுவது என்பது இந்திய அரசியல் கூட்டமைப்பு நீடித்திருப்பதற்கான சட்டபூர்வமான ஆயுதத்தை ஆளும் வர்க்கங்களும், மைய அரசும் இழந்து விடுவதற்கும், நேரடியான வன்முறை ஆதிக்கத்தால் மட்டுமே அதைக் கட்டிக் காப்பதற்கும் வழி வகுப்பதாகும். இது தேசிய இனங்களின் போராட்டத்தைத் தூண்டவும், அவை வளரவும் இடம் கொடுக்கும் என்பதாலேயே 356-ஆவது பிரிவை அகற்றுவதற்கு மாநிலக் கட்சிகளும் கூட உறுதியாக நிற்பதில்லை.

### "டாடா டீ - உல்ஃபா" விவகாரம்:

# ஆளும் வர்க்கத்தின் பிளவும் பீதியும்

அசாம் ஐக்கிய விடுதலை முன்னணி (உல்ஃபா) இயக்கத்துக்கு உதவி, பயங்கரவாதத்தைத் தூண்டிவிடுவதாகக் குற்றஞ்சாட்டி, டாடா டீ கம்பெனிக்கு எதிராக இராணுவமும் அசாம் அரசும் எடுத்துவரும் நடவடிக்கைகள் நாட்டின் அரசியலுக்கே ஒரு புதிய, முக்கியமான பரிமாணத்தைக் கொடுத்துள்ளது.

உலகிலேயே மிகப்பெரிய தேயிலை உற்பத்தி நிறுவனம் டாடா டீ கம்பெனி. அசாமில் மட்டும் அதற்கு 21 தேயிலைத் தோட்டங்கள் இருக்கின்றன. அது இந்த நாட்டிலேயே மிகப்பெரிய தரகு முதலாளியான டாடா குடும்பத்துக்குச் சொந்தமானது. அதன் தலைமைப் பொறுப்பாளர்களில் ஒருவரான ரூசி மோடி சொல்கிறார்: " ஒரு கம்பெனி தன் அலுவலர்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கு பொருளாகவோ, ரொக்கமாகவோ தருவதற்கும், அரசியல்வாதிகளுக்கும் அரசு அதிகாரிகளுக்கும் அன்பளிப்புப் பணம் கொடுத்து ஒரு கம்பெனி தன் பொருளாதார நலன்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கும் இடையே என்னால் வேறுபாடு காணமுடியவில்லை. உல்ஃபாவுக்குப் பணம் தருவது தேசபக்தியற்ற செயல் என்று சொல்லப்படுகிறது. ஆட்சியிலும் அதிகாரத்திலும் உள்ள நபர்களின் சட்டைப் பைகளை நிரப்புவதில் எந்த தேசபக்தியையும் என்னால் காணமுடியவில்லை."

அசாம் முதல் மந்திரி பிரபுல்ல குமார் மகந்தா பின்வருமாறு டாடா டீ கம்பெனி மீது குற்றஞ்சாட்டுகிறார்: "கம்பெனிக்கு ஆபத்து வரும் என்று அனுமானித்துக் கொண்டு, அரசின் எதிரிகளை நண்பர்களாக்கிக் கொண்டு, வெளிநாடுகளில் குடியும் விருந்துமாகக் களித்திருக்கிறார்கள். இதுதவிர, நாட்டின் பாதுகாப்புக்குக் குந்தகம் ஏற்படும் வகையில் அவர்கள் கூட்டுச் சேர்ந்து என்ன செய்தார்கள் என்பது நீதிமன்றத்தில் வெளிவரும். தீவிரவாதிகளுடன் தொடர்பு வைத்திருப்பதாக அறியப்படும் எவரையும் சும்மா விடமாட்டோம்."

நாடாளுமன்ற உறுப்பினரும் டாடாவின் உச்சநீதி மன்ற வழக்கறிஞருமான ராம் ஜேத்மலானி தனது பகிரங்கக் கடிதத்தில் மகந்தாவுக்கு எழுதுகிறார்: "தீவிரவாதிகளுக்கு நிதி உதவி செய்வதன் மூலம் டாடாக்கள் நாட்டின் பாதுகாப்புக்கும் ஒருமைப்பாட்டுக்கும் பெரும் தீங்கு செய்துவிட்டதாக மகந்தா சொல்கிறார். இப்படிச் சொல்வது அப்பட்டமான பொய். தனது குடிமகனைப் பாதுகாக்க இயலாத அரசு, நிர்பந்தம் - மிரட்டல் காரணமாக பணத்தை இழப்பது அல்லது சில கிரிமினல் குற்றமேகூடச் செய்துவிடுவதற்காக, அந்த துரதிருஷ்டசாலியைத் தண்டிப்பதற்காக வெட்கப்படவேண்டும்."

இது அரசியல்வாதியும் அரசாங்கத் தலைவருமான மகந்தாவுக்கும் தரகு அதிகார முதலாளி டாடாக்களுக்கும் இடையிலான மோதல் மட்டுமல்ல. மகந்தாவோடு சேர்ந்து இராணுவ, போலீசு அதிகாரிகளும் இதே குற்றச்சாட்டுகளை வைக்கிறார்கள். டாடாக்களுக்குப் பின்னே இன்னும் சில தரகு அதிகார முதலாளிகளும், அரசியல் தலைவர்களும்

பயிற்சியில் உல்ஃபா போராளிகள்





படிப்பகம்

www.padippakam.com

அரசு அதிகாரிகள் திரண்டு டாடாக்கள் மீதான நடவடிக்கைகளைக் கைவிடும்படி நிர்பந்திக்கிறார்கள்.

பெட்ரோலிய எண்ணெய், தேயிலை, மூங்கில், ''பிளைவுட்'' மரம் என்று இயற்கைச் செல்வ வளங்கொழிக்கும் அசாமின் தேசிய இன சுயநிர்ணய உரிமைக்காக ஆயுதப் போராட்டம் நடத்திவரும் புரட்சிகர இயக்கம் உல்ஃபா. அம்மாநிலச் செல்வ வளங்கள் கொள்ளையடிக்கப்படுவதற்கு எதிராகத் தடைகள், முற்றுகைகள், தாக்குதல்கள் எனப் பல போராட்டங்களை உல்ஃபா நடத்தி வருகிறது. குறிப்பாக, தரகு அதிகார முதலாளிகளிடமிருந்து தனது ஆயுத - இயக்கத் தேவைகளுக்காக அபராதம் விதிப்பதும், கப்பம் வசூலிப்பதும் உண்டு. அமைப்பின் சில துரோகிகளாலும், காங்கிரசு சைக்கியா அரசாங்கத்தின் பயங்கரவாத ஒடுக்கு முறையாலும் சில பின்னடைவுகளைச் சந்தித்த உல்ஃபா மீண்டும் எழுச்சியுற்று, குறிப்பிடத்தக்க வளர்ச்சியும் பெற்றது. அதை ஒடுக்கவும், அதற்குப் போட்டியாகவும் மத்திய உளவுத்துறையால் ஆயுத பாணியாக்கப்பட்ட போடோ மாநிலம் கோரும் இயக்கம், பின்னர், மத்திய - மாநில அரசுகளின் கட்டுப்பாட்டில் இருந்து முறித்துக் கொண்டது; அதுவும் அரசுக்குத் தீராத தலைவலி தரும் தீவிரவாத இயக்கமாக மாறியுள்ளது.

பிரகடனம் செய்யாத உள்நாட்டுப் போரைத் தொடங்கி இராணுவக் கூட்டுத் தலைமையின் கீழ் அசாம் வைக்கப்பட்டு, கடந்த ஜனவரியில் இருந்து உல்ஃபா, போடோ போராளிகளை தேடி அழிக்க முயன்று வருகிறது. இருந்தும் உல்ஃபா, போடோ இயக்கங்களை ஒடுக்க முடியாமல் இருப்பதற்குக் காரணம் டாடா டீ கம்பெனி உட்பட பல தொழில் நிறுவனங்கள் அவற்றுக்கு நிதி உதவி போன்று பல வழிகளிலும் உதவுவதுதான் என்று அசாம் அரசும், போலீசும், இராணுவமும் குற்றஞ்சாட்டுகின்றன. அரசுக்கு எதிராக உல்ஃபாவுடன் சேர்ந்து டாடா டீ கம்பெனியின் உயர் அதிகாரிகள், குறிப்பாக அதன் சமூக நல அதிகாரி புரோஜன் கோகோய், பொது மேலாளர் தோக்ரா, நிர்வாக இயக்குநர் கிருஷ்ணகுமார் ஆகியோர் மீது குற்றஞ்சாட்டி, முதல் இருவரைக் கைது செய்துள்ளது.

டாடா டீ கம்பெனி அதிகாரிகள் கைதானவுடன், வழக்கைக் கைவிடச் செய்வதற்கு தரகு முதலாளிகள் நுஸ்லி வாடியா, ஜெயந்த் மல்கோத்ரா, இராணுவ முன்னாள் தளபதி மானெக்சா, தேவேகவுடா மற்றும் மத்திய உளவுத்துறை (ஐ.பி). மூலம் டாடா கம்பெனி தலைவர் ரத்தன் டாடா பேசியதை தொலைபேசியில் ஒட்டுக் கேட்கப்பட்டு அப்படியே பத்திரிகையில் வந்துவிட்டது. அசாம் அரசுதான் இதற்குக் காரணம் என்று டாடா - வாடியா கும்பல் குற்றஞ்சாட்டி, ஒட்டுக் கேட்ட பிரச்சினையை முதன்மைப்படுத்த முயலுகிறது.

> **வெவ்வேறு ஏகாதிபத்தியங்களுக்கு விசுவாசிகளாகச் செயல்படுவதினால் மட்டுமல்ல, போராளிகளின் தாக்குதல், நிர்பந்தங்களாலும் தரகு அதிகார முதலாளிகளிடையே மோதலை உருவாக்கிப் பயன்படுத்திக் கொள்ள முடியும் என்பதை, "டாடா டீ - உல்ஃபா" விவகாரம் கோடிட்டுக் காட்டியுள்ளது.**

இந்த விவகாரத்தின் விளைவாக —

- நாட்டின் தரகு அதிகார முதலாளிகளுக்கிடையே பிளவு ஏற்பட்டு, டாடா டீ கம்பெனிக்கு ஆதரவாக பிற கம்பெனிகள் தலையிட மறுத்துவிட்டன.
- டாடா டீ கம்பெனிக்குள்ளாகவே அதன் அதிகாரிகளிடையே மோதல் வெடித்துள்ளது.
- டாடா - வாடியா கும்பலுக்கு எதிராகவும் ஆதரவாகவும் அரசுத் தலைவர்கள், அதிகாரிகள், உளவுத் துறையிலேயே பிளவு உருவானது.

இந்தப் பிளவுகளும் முரண்பாடுகளும் இன்னொரு உண்மையை வெளிப்படுத்தின. வெவ்வேறு ஏகாதிபத்தியங்களுக்கு விசுவாசிகளாக செயல்படுவதில் மட்டுமல்ல, போராளிகளின் தாக்குதல், நிர்பந்தங்களாலும் தரகு அதிகார முதலாளிகளிடையே மோதலை உருவாக்கிப் பயன்படுத்திக் கொள்ள முடியும்.

அதோடு அரசுக்கும், தரகு அதிகார முதலாளிகளுக்கும் எதிரான தாக்குதல் வலுக்கும் போது எவ்வளவு தூரம் அவர்கள் நடுநடுங்கிப் போகிறார்கள் என்பதும் தெரிந்தது. போராளிகளுக்கு எதிராகத் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களை ஆயுத பாணியாக்கும் யோசனையை அரசு - இராணுவ அதிகாரிகளே முன் வைத்துள்ளனர். பீதியுற்ற முதலாளிகள், அது தங்களுக்கு எதிராகவே திரும்பும், தொழிலாளர்களிடையே ஊடுருவும் போராளிகள் பயன்படுத்திக் கொள்வார்கள் என்று சொல்லி அலறியிருக்கிறார்கள். மொத்தத்தில் இந்த விவகாரம் ஆளும் வர்க்கங்களையும் அரசு அதிகாரிகளையும் பிளவுபடுத்தி குலைநடுங்கச் செய்திருக்கிறது என்பது தெரிகிறது.

• மாதவன்

# 'மார்க்சிஸ்டு' ஆட்சியில் தொடரும் போலீசு கொட்டடிக் கொலைகள்

போலிக் கம்யூனிஸ்டுகள் ஆளும் மேற்கு வங்கத்தின் 24 பர்கானா மாவட்டத்திலுள்ள நிம்டா என்னும் சிறு நகரத்தில் கைது செய்யப்பட்ட சியாமல் தாஸ் எனும் இளைஞர், கடந்த செப். 14 அன்று போலீசாரின் சித்திரவதையால் கொட்டடியில் மாண்டு போனார். இது மேற்கு வங்கத்தில் இவ்வாண்டில் நடந்த 21-வது கொட்டடிக் கொலையாகும். சியாமல் தாஸ் நோய்வாய்ப்பட்டிருந்த நிலையில், நோயின் தீவிரம் தாளாமல் தனது சட்டையை அவிழ்த்துச் சுருக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார் என்று கொலைகாரப் போலீசு கூசாமல் புளுகியது. இக்கொடுஞ்செயலை எதிர்த்து காங்கிரசுக் கட்சியினர் போலீசு நிலைய முற்றுகைப் போராட்டமும் கடையடைப்புப் போராட்டமும் நடத்திய பின்னருங்கூட, கொலைகார போலீசார் மீது மேற்கு வங்க அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

அடுத்த சில நாட்களில், வினோத் சிங் என்ற 20 வயது இளைஞர், ஹவுரா போலீசு நிலையத்திலிருந்து தப்பியோட முயற்சித்ததாகக் கூறி கொடூரமாகச் சித்திரவதை செய்யப்பட்டார். அவரது பிறப்புறுப்பில் செங்கல்லைக் கட்டித் தொங்கவிட்டு போலீசார் வதைத்ததால், அவரது அடிவயிற்றுப் பகுதி வீங்கி நடக்கக் கூடி முடியாமல் மருத்துவமனையில் கிடக்கிறார். இரகசிய நோய் பீடிக்கப்பட்டிருந்த வினோத் சிங்கை கொட்டடியில் இருந்த மற்ற கைதிகள் தாக்கியதாலேயே இந்நிலைமை ஏற்பட்டது என்று போலீசார் புளுகி வருகின்றனர்.

இந்தியாவிலேயே கொட்டடிக் கொலைகளில் மூன்றாமிடம் வகிக்கும் மாநிலம் என்று மனித உரிமைக் கமிஷனால் குற்றம் சாட்டப்பட்டுள்ள மேற்கு வங்கத்தில், போலீசார் மீது மாநில அரசு நடவடிக்கை எடுக்காதது மட்டுமல்ல; பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிவாரணத் தொகை கூட வழங்குவதில்லை. 1995-இல் பவானிபூர் போலீசு நிலையத்தில் கொல்லப்பட்ட சுபாஷ் தாஸ் என்பவரின் குடும்பத்துக்கு நிவாரணம் கோரி ஜனநாயக உரிமை அமைப்புகள் தொடர்ந்து போராடிய பிறகு, இப்போதுதான் நிவாரணத் தொகை வழங்கப்பட்டுள்ளது.

1977-லிருந்து 1994 வரை போலீசு துப்பாக்கிச் சூடு, அதிக்கிரமங்கள், கொட்டடிக் கொலைகள் பற்றி விசாரிக்க 13 விசாரணைக் கமிசன்கள் அமைக்கப்பட்டன. இவற்றில் 9 கமிசன்கள் அறிக்கை சமர்ப்பித்துள்ள போதிலும், இதுவரை எந்தப் போலீசார் மீதும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. கடந்த ஐந்தாண்டுகளில் 10 இடங்களில் போலீசு அத்துமீறல் - அட்டூழியங்கள் பற்றி புகார்கள் வந்து நிருபணமான போதிலும், இதுவரை 8 கீழ்நிலை போலீசார் மட்டுமே தற்காலிகப் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர் என்று ஜனநாயக உரிமைக்கான அமைப்புகள் குற்றம் சாட்டுகின்றன.

வாச்சாத்தி - சிதம்பரம் அண்ணாமலைநகர் போலீசாரின் பாலியல் வன்முறை - கொலை வெறியாட்டங்களுக்கு எதிராகப் போராடிய 'மார்க்சிஸ்டுகள்' தான், தாங்கள் ஆளும் மேற்கு வங்கத்தில் காக்கிச் சட்டை கயவாளிகளுக்கு அரணாக நிற்கிறார்கள். எதிர்க்கட்சியாக உள்ள மாநிலங்களில் அரசியல் ஆதாயத்துக்காக போலீசாரின் கொடுமைகளை எதிர்த்துப் போராடுவதும், மேற்கு வங்கத்தில் போலீசாரின் அதிக்கிரமங்களுக்கு ஆதரவாக நிற்பதும்தான் புரட்சி பேசும் போலிகளின் பித்தலாட்டக் கொள்கை என்பதை இது நிரூபித்துக் காட்டுகிறது.



படிப்பகம்

www.padippakam.com

# சாதி - தீண்டாமை ஒழிப்பு இயக்கம்

தாழ்த்தப்பட்ட சாதி மக்களை அடக்கி, ஒடுக்கிச் சுரண்டுவது; அவன் தொட்டால் தீட்டு என தாகத்திற்கு கூட தண்ணீர் தர மறுப்பது; அச்சாதி பெண்களின் மீது பாலியல் வன்முறைகளை வரையறையின்றிக் கட்டவிழ்த்து விடுவது; சாதீய இழிவுகளை நிலைநாட்டுவது; மீறுபவர்களின் உயிரைப் பறிப்பது.

— இக்கொடுமைகளுக்கெதிராக உழைக்கும் மக்களை ஓரணி திரட்டிப் போராட வருமாறு அறைகூவி அழைக்கின்றன மக்கள் கலை இலக்கியக் கழகம், விவசாயிகள் விடுதலை முன்னணி, புரட்சிகர மாணவர் இளைஞர் முன்னணி ஆகிய புரட்சிகர அமைப்புகளும் அதன் தோழமை அமைப்புகளும்.

இதனடிப்படையில் வெளியீடு, துண்டுப் பிரசுரம், சுவரொட்டி, சுவரெழுத்து, தெருமுனைக் கூட்டங்கள், பொதுக்கூட்டங்கள் எனத் தமிழகம் தழுவிய அளவில் இயக்கங்களை எடுத்து வருகின்றனர்.

• உத்தமபாளையத்தில் கடந்த 2.10.97-ஆம் தேதி சாதி அரக்கன் ஊர்வலம் நடத்தப்பட்டது. சாதி அரக்கனாக வேடமிட்டு, செருப்பு மாலை அணிவித்து, செருப்பால் அடித்துக் கொண்டே ஊர்வலம் சென்றது. வி.வி.மு. வட்டாரச் செயலர் மோகன் தப்படித்துத் துவக்கி வைக்க, 75 பேர் முழக்கமிட்டுச் சென்றனர். ஊர்வல முடிவில் சாதி - தீண்டாமை கொடுமை பற்றி பேசி, சாதி - தீண்டாமையை ஒழிக்கச் சபதமேற்றனர்.

இப்பகுதியில் ஆதிக்க சாதியாக உள்ள பிறன்மலைக் கள்ளர்களின் ஆதிக்கச் செயல்பாட்டை நேரடியாக சுட்டிக் காட்டி, அது எவ்வாறு தவறு என்பதை எடுத்துக் கூறி பேருந்தில் நிதி வசூல் செய்துள்ளனர், வி.வி.மு. தோழர்கள். பேருந்தில் இருந்தவர்கள் சரிதான் என ஆமோதித்ததோடு, "இவ்வாறு நேரடியாகப் பேசினால், பிரச்சினை வராதா?" என அந்த சாதியைச் சார்ந்தவர்களே கேட்டு, நிதி உதவியும் செய்துள்ளனர்.

• பெரியநாயக்கன் பாளையத்தில் 3.10.97 அன்று மாலை பொதுக் கூட்டம் சிறப்பாக நடைபெற்றது. ஆர்.எஸ்.எஸ். இந்து முன்னணியினரின் ரவுடித்தனத்தை முறியடித்தது ம.க.இ.க. தொண்டர் படை. பார்ப்பன இந்து மத வெறி பாசிஸ்டுகள் பல பகுதியிலிருந்து குண்டர்களைக் குவித்து, போலீசு ஆசியுடன் தாக்குதலுக்குத் தயாராக வந்திருந்தனர். 50-க்கும் மேற்பட்ட தோழர்களைக் கொண்ட தொண்டர் படையின் பாதுகாப்பு வளையம் அவர்களின் திட்டத்தை முறியடித்தது. 700-க்கும் மேற்பட்ட மக்கள் திரண்டு வந்து இறுதிவரை இருந்து, நிகழ்ச்சியைச் சிறப்பித்தனர்.

> சாதி, தீண்டாமையை ஒழிப்போம் என்றாலே பார்ப்பன இந்து மதவெறி பாசிஸ்டுகளுக்கு பற்றி எரிகிறது. இவ்வியக்கத்தை நேராக எதிர்த்தால் அம்பலப்பட்டுவிடுவோம் என்பதால் பார்ப்பனிய நரித்தனத்துடன் எதிர்க்க முனைகிறது.
>
> கோவை மேட்டுப்பாளையம் சாலையில் பெரிய அளவில் எழுதப்பட்ட சுவர்ப் பிரசாரத்தை 'இந்து முன்னணி' காட்டு மிராண்டிகள் வெள்ளையடித்து, 'இந்து முன்னணி, 2000 ஆண்டு' என எழுதிச் சென்றுள்ளனர்.

• சென்னையில் 25.9.'97 அன்று சேத்துப்பட்டு பகுதியிலும், 27.9.'97 அன்று பெரியமேட்டிலும் பொதுக் கூட்டங்கள் நடைபெற்றன. இவ்விரு பொதுக் கூட்டங்களிலும் ம.க.இ.க. தோழர் குமார் சிறப்புரையாற்றினார். சைதாப்பேட்டை, ஐந்து விளக்குப் பகுதியில், 3.10.97 அன்று நடைபெற்ற பொதுக் கூட்டத்திற்கு ம.க.இ.க. தோழர் புவண் தலைமை தாங்க, பு.மா.இ.மு. (விருத்தாசலம் அமைப்பாளர்) தோழர் ஜெயகாந்த் சிங் சிறப்புரையாற்றினார். இம்மூன்று பொதுக் கூட்டங்களிலும் புரட்சிகர கலை நிகழ்ச்சியும் நடந்தது.

• கோவையில் 20.10.97-இல் ஒண்டிப்புதூரிலும், 21.10.97-இல் கணபதி பகுதியிலும் பொதுக் கூட்டங்கள் நடந்தன. இரு இடங்களிலும் மதுரை ம.க.இ.க. தோழர் கதிரவன் எழுச்சிமிகு உரையாற்றினார்.

• தர்மபுரி மாவட்டம் பென்னாகரத்தில் 30.9.97 அன்று 750 பேர் கொண்ட பேரணியும், அதன் முடிவில் பொதுக்கூட்டமும் நடைபெற்றது. பொதுக்கூட்டத்தில் கம்பம் பகுதி வி.வி.மு. செயலர் மோகன் சிறப்புரை நிகழ்த்தினார். பேரணி - பொதுக்கூட்டம் இரண்டிற்கும் நாலாயிரத்துக்கும் மேற்பட்ட பொது மக்கள் கூடி நின்று ஆதரவளித்தனர்.

• தஞ்சைக்கு அருகேயுள்ள வல்லத்தில் 27.9.97 அன்று பொதுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சிறப்புரையாற்றிய தோழர் காளியப்பன், "30.9.97-க்குப் பிறகும் இப்பகுதிகளில் தனி தேநீர்க் குவளை இருப்பது தெரிய வந்தால், அத்தீண்டாமையைத் தூக்கி எறிய நேரடியாகக் களத்தில் இறங்குவோம்" என எச்சரித்தார்.

• கர்நாடகா - கோலார் தங்க வயல் பகுதியிலும், சாதி - தீண்டாமை ஒழிப்பு இயக்கப் பிரச்சாரம், பொதுக் கூட்டம் உள்ளிட்டு, பல்வேறு வழிகளில் நடைபெற்று வருகிறது. இவ்வியக்கச் செய்திகளையும், இயக்கத்தின் மைய முழக்கங்களையும் கோலார் பகுதியில் வெளிவரும் மாலை முரசு நாளிதழ் வெளியிட்டது.

• கம்பத்தில், தி.மு.க. மதுரையில் நடத்திய தீண்டாமை ஒழிப்பு மாநாட்டை அம்பலப்படுத்தி பெரிய தட்டிகள் கட்டப்பட்டன. இத்தட்டிகளைக் காவல் துறையினர் அகற்றியதுடன், தனி தேநீர்க் குவளை உள்ள கடைகளின் பட்டியலை நம்மிடம் கேட்டு வாங்கிக் கொண்டு நடவடிக்கை எடுப்பதாகக் கூறியுள்ளனர். ஆனால் இதுவரை எந்த நடவடிக்கையும் மேற் கொள்ளவில்லை.

இவை தவிர மேல் சாதி ஆதிக்கம் உள்ள கரூர், மதுரை, உசிலை, கம்பம், ஆண்டிப்பட்டி போன்ற பகுதிகளில் பொதுக் கூட்டங்கள் மிகச் சிறப்பாக நடந்தன.

## 81-ஆம் ஆண்டில் ரசியப் புரட்சி நாள்

1917, நவம்பர் 7 - உலகைக் குலுக்கிய ரசியப் புரட்சி உதயமான நாள்.

இது சோவியத் சோசலிச பூமியை மட்டும் உருவாக்கவில்லை. காலனி நாட்டு மக்களின் விடுதலைப் போராட்டத்திற்கு புது இரத்தம் பாய்ச்சியது. இரண்டாம் உலகப் போரின் போது பாசிசத்தை அடித்து நொறுக்கி, ஐரோப்பாவை விடுவித்தது. உலக மக்களை பாசிச இருளில் இருந்து காத்தது.

வெளியில் இருந்து வீழ்த்த இயலாத சோவியத் ரசியாவை, குருச்சேவ் - பிரஷ்னேவ் கும்பல் உள்ளிருந்து கைப்பற்றி, சமூக ஏகாதிபத்தியமாகச் சீரழித்தனர். அதன் பின் வந்த கோர்பி - யெல்ட்சின் கும்பல், ஏகாதிபத்தியங்களின் துணையோடு ரசியாவை முதலாளித்துவ ஏகாதிபத்தியமாகப் புரட்டிப் போட்டனர்.

கம்யூனிசம் தோற்றுவிட்டது என கூக்குரலிடும் ஏகாதிபத்தியங்கள் முதலாளித்துவ ரசியாவிற்கு வழங்கியவை என்ன?

பசி, பஞ்சம், பட்டினி, வேலையில்லாத் திண்டாட்டம், உழைப்பவனுக்கு கூலியில்லை, சிறுவர் - சிறுமியரிலிருந்து ரசியா முழுதும் வியாபித்துள்ள விபச்சாரச் சீரழிவு, மாஃபியா கும்பலின் நேரடி ஆட்சி. ஏகாதிபத்திய நாடுகளிலும் நிலைமை இதுதான். வேலையின்மை, கஞ்சித் தொட்டி வரிசையில் உழைப்பாளிகள்.

தனது நெருக்கடியின் சுமையை ஏழை நாடுகளின் தலையில் வைத்து வருகின்றன, ஏகாதிபத்தியங்கள். இதற்கு, இவர்கள் கைகளில் உள்ள ஆயுதங்கள் தான் ஐ.எம்.எஃப்., உலக வங்கி, உலக வர்த்தகக் கழகம், ஐ.நா. போன்றவை. பனிப்போர் சகாப்தம் முடிந்து விட்டது; ஒற்றைத் துருவ சகாப்தம் துவங்கி விட்டது. எனவே, தடையின்றி ஏழை நாடுகளை மறுகாலனியாக்கி விடலாம் எனத் துடிக்கின்றன, மேலாதிக்க வல்லரசுகளும், ஏகாதிபத்தியங்களும். அவர்களின் இந்த நயவஞ்சகச் சூழ்ச்சியை முறியடிக்க இந்த நவம்பர் புரட்சி நாளில் சபதமேற்போம்! இந்தியப் புரட்சியை முன்னெடுப்போம்!

புரட்சிகர வாழ்த்துக்களுடன்,
ஆசிரியர் குழு



படிப்பகம்

www.padippakam.com

# பீகார் மா-லெ குழுக்களிடையே தொடரும் ஆயுதமோதல் : திருந்த வேண்டிய திசை விலகல்

இந்தியாவில் மிக பின்தங்கிய மாநிலம் பீகார். இன்றைக்கும் அங்கு சாதீயக் கொடுமைகளும் பெண்களின் மீதான பாலியல் வன்முறைகளும் மிகக் கொடூரமாக அரங்கேற்றப் படுகின்றன. கூலி ஏழை விவசாயிகளின் மீதான சுரண்டலுக்கும் அடக்கு முறைகளுக்கும் அளவே கிடையாது.

வசந்தத்தின் இடிமுழக்கமென இந்திய வானில் தோன்றிய நக்சல்பாரி இயக்கம் நிலப்பிரபுத்துவ ஆதிக்க வெறியர்களுக்கு எதிராகப் போரிட்டது. மற்ற மாநிலங்களிலிருந்து வேறுபட்ட முறையில் இங்கு நிலப்பிரபுத்துவம் தனது ஆதிக்கத்தை நிலைநாட்ட முனைந்தது.

மேல்சாதி நிலப்பிரபுத்துவ ஆதிக்க வெறியர்கள் தங்களுக்கென தனிவகைப் படைகளைக் கட்டியமைத்தனர். ஆயுதம் ஏந்திய குண்டர் படைகள் நேரடியாக கூலி - ஏழை விவசாயிகள் மீது குறிப்பாக தாழ்த்தப்பட்ட கூலி விவசாயிகளின் மீது அடக்குமுறைகளை ஏவின.

நக்சல்பாரி இயக்கமும் கொரில்லாக் குழுக்களைக் கட்டியமைத்தது. நிலப்பிரபுக்களின் பல குண்டர் படைகளை அழித்தொழித்தது. இன்றைக்கு பல நிலப்பிரபுக்கள் கிராமங்களையும், நிலங்களையும் கைவிட்டு உயிர் பிழைத்தால் போதும் என நகரங்களுக்கு ஓடியுள்ளனர்.

இந்நிலையில் பீகாரில் சமீப காலமாக வேறு வகையான சில மோதல்கள் நடந்துள்ளன.

• செப்டம்பர் 7-ம் தேதி இரவு. தெற்கு பீகாரின் சத்ரா மாவட்டத்திலுள்ள கிரியால் கிராமம். நக்சல்பாரி குழுவாக இருந்து இன்றைக்கு பாராளுமன்றப் பாதைக்குச் சென்றுவிட்ட லிபரேசன் குழுவின் ஆதரவாளர்கள் சுமார் 150 பேர் இக்கிராமத்தில் கூடினர். இவர்கள் வேறு 5 கிராமங்களிலிருந்து வந்தவர்கள்.

அப்போது மாவோயிச கம்யூனிச மையம் (எம்.சி.சி.) என்கிற புரட்சிகர அமைப்பைச் சேர்ந்த 70 பேர் ஏ.கே. 47 உட்பட நவீன ஆயுதங்களுடன் அவர்களைச் சுற்றி வளைத்து துப்பாக்கி சூடு நடத்தினர். இதில் லிபரேசன் குழுவினர் 10 பேர் கொல்லப்பட்டதாகவும், பலரும் காயமடைந்ததாகவும் செய்திகள் வந்தன.

லிபரேசன் குழுவின் அலுவலக செயலாளர் பிரபாத்குமாரோ 40 பேர் கொல்லப்பட்டதாகவும் 100 பேர் காயமடைந்ததாகவும் கூறுகிறார். இறந்தவர்களில் பலரின் உடலை எம்.சி.சி.யினர் தூக்கிச் சென்றுவிட்டதாகக் கூறுகிறார்.

எம்.சி.சி.யினர் கிரியால் கிராமத்தைச் சுற்றியுள்ள அடர்ந்த காட்டிற்குள் தப்பிவிட்டதாகவும், அக்காட்டைச் சுற்றி வளைத்து தேடுதல் வேட்டை நடத்தி வருவதாகவும் காவல் துறை ஐ.ஜி. நியாஸ் அகமது பேட்டியளித்துள்ளார். எம்.சி.சி. குழு நீண்டகாலம் இயங்கி வந்த இப்பகுதியில் லிபரேசன் குழு செயல்பட முன் வந்ததால் துப்பாக்கி சூடு நடத்தப்பட்டதாகத் தெரிகிறது.

இந்த தாக்குதலும் படுகொலைகளும் நடந்ததாக எல்லா பத்திரிக்கைகளும் விரிவாக எழுதின. எம்.சி.சி. குழு இதுவரை மறுக்கவில்லை.

• பலாமவ், கார்வா மாவட்டங்கள் நீண்ட காலமாக கட்சி ஐக்கியம் குழுவின் செல்வாக்கின் கீழிருந்தது. எம்.சி.சி. குழுவும் இங்கு மக்களைத் திரட்டி அமைப்பாக்கி வருகிறது. இதனால் இந்த இரு புரட்சிகர குழுக்களிடையே மோதல் ஏற்பட்டு பல ஆதரவாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

ஏற்கனவே மூன்று முறை சமாதானப் பேச்சு வார்த்தை நடத்தியுள்ளனர். எந்த பலனுமில்லை. கடந்த ஆகஸ்ட் மாதம் கட்சி ஐக்கியம் குழுவின் செல்வாக்கு மிக்க சாபி கிராமத்தில் பேச திட்டமிட்டிருந்தன இரு குழுக்களும். ஆனால் எம்.சி.சி. குழுவினர் பேசுவதற்கு பதில் ஆயுதங்களுடன் தாக்குதல் நடத்தினர். அரசு தகவல்படி ஒருவரின் உடலை மட்டுமே போலீசார் எடுத்துச் சென்றனர். ஆனால் 12-16 பேர் கொல்லப்பட்டதாக கட்சி ஐக்கியம் குழு தொடர்பாளர் ஒருவர் கூறுகிறார்.



எம். சி. சி. குழுவினரால் சுட்டுக் கொல்லப்பட்ட கட்சி ஐக்கியக் குழுத் தோழர்கள் : புரட்சியாளர்களிடையே ஆயுத மோதலை எக்காரணம் கொண்டும் நியாயப்படுத்த முடியாது

• லிபரேசன் குழுவினரின் குற்றச் சாட்டுப்படி இதுவரை எம்.சி.சி. குழுவினர் 80 லிபரேசன் ஆதரவாளர்களைக் கொன்றுள்ளனர்; கட்சி ஐக்கியம் குழுவினர் 75 பேரைக் கொன்றுள்ளனர். இது மிகைப் படுத்தப்பட்டதாயிருக்கலாம்.

தவிர எம்.சி.சி. - கட்சி ஐக்கியம் குழுவினருக்கிடையேயும் தாக்குதல்கள் நடக்கின்றன.

• செப்டம்பர் 4-ம் தேதி இரவு. ஜெகனாபாத் மாவட்டத்திலுள்ள கடாசின் கிராமம். எம்.சி.சி. குழுவின் ஆயுதம் தாங்கிய 100 பேர் எம்.சி.சி. வாழ்க என முழக்கமிட்டபடி சென்றனர். மற்றொரு புரட்சிகர குழுவான இ.பொ.க. (மா-லெ) கட்சி ஐக்கியம் குழுவின் தீவிர ஆதரவாளர்களான கரிமன் மொசி, லக்கன்தியோ யாதவ் உட்பட அவர்களது குடும்பத்தினர் எட்டுப் பேரை சுட்டுக் கொன்றனர். மூவர் காயமுற்று அருகிலுள்ள வட்டார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

கடாசின் கிராமம் நீண்ட காலமாக எம்.சி.சியின் செல்வாக்கிலிருந்தது. கடந்த ஒரு வருடமாக கட்சி ஐக்கியம் குழு அங்கு செல்வாக்கு பெறத் தொடங்கியது. எனவே

★☆★

பீகாரில் 11 மாவட்டங்களில் நக்சல்பாரி குழுக்களான எம்.சி.சியும், கட்சி ஐக்கியமும் செயல்பட்டு வருகின்றன. இவைகள் தங்களுக்கிடையே தமது செல்வாக்கு பகுதிகள் என பிரித்துக் கொண்டு இயங்குகின்றன.

நக்சல்பாரி கட்சி துவங்கப்பட்ட ஆரம்ப காலத்தில் தனிநபர் அழித்தொழிப்பு என்ற இடது சந்தர்ப்பவாதத் தவறிழைத்தனர். இத்தவறான நடைமுறையால் கட்சி சிதறுண்டு குழுக்களானது; மக்களிடமிருந்து தனிமைப் பட்டது. அக்குழுக்கள் தான் இடது தீவிரவாதத்தையும் குறுங்குழுவாதத்தையும் கைவிட்டு, மக்களைத் திரட்டி போராட ஆரம்பித்தன.

ஆனால் பீகாரில் சமீப காலமாக நடப்பவற்றைப் பார்க்கும் போது மீண்டும் சில



படிப்பகம்

www.padippakam.com

குழுக்கள் இடது சந்தர்ப்பவாதத் தவறிழைப்பதாகத் தெரிகிறது.

லிபரேசன் குழு புரட்சிகர அரசியலைக் கைவிட்டு பாராளுமன்ற, திரிபுவாதப் பாதைக்கு சென்றிருப்பது தவறு. ஆனால் அவர்களை சமரச சக்திகளாக வைத்து, மக்களிடம் அம்பலப்படுத்தி தனிமைப்படுத்த வேண்டும். இது இரத்தம் சிந்தா அரசியல் போராட்டம். கடினமான நடைமுறைதான். இதைக் கைவிட்டு சுட்டுக் கொல்வது என வர்க்க எதிரி போல அணுகுவது புரட்சிகர அரசியலுக்கு எதிரானது. இடது சந்தர்ப்பவாதத் தவறு. இது மக்களிடமிருந்து கட்சியை தனிமைப்படுத்தும்.

ஆனால் புரட்சிகர இயக்கத்தையும், தோழர்களையும் காட்டிக் கொடுக்கின்ற துரோகிகள் கொல்லப்படுவதை நாம் தவறு என பார்க்கவில்லை. அது சரியான நடைமுறைதான். ஆளும் வர்க்கங்கள் இச்சம்பவங்களை அவதூறுகளாக்கி நமக்கெதிராக பயன்படுத்தலாம். தொடர்ந்து நடத்தும் அரசியல் பிரச்சாரத்தின் மூலம் தான் இவ்வகை அவதூறுகளை முறியடிக்க வேண்டும்.

அதே நேரம், எம்.சி.சி., கட்சி ஐக்கியம் என்ற இரு புரட்சிகரக் குழுக்கள் தம்முள் பகுதிகளைப் பிரித்துக் கொண்டு மோதுவது மிகத் தவறானது. இந்த இரு புரட்சிகர குழுக்களிடையே அரசியல் சித்தாந்த ரீதியில் அடிப்படை வேறுபாடுகள் இல்லை. நடைமுறையில் எழும் முரண்பாடுகளை பேசித் தீர்ப்பது தான் சரியானது. அதை விட்டு ஒருவருக்கு எதிராக மற்றொருவர் ஆயுதமேந்துவது புரட்சியை நேசிக்கும் அணிகள், ஆதரவாளர்கள், மக்களிடையே அவநம்பிக்கையை உருவாக்கும்.

புரட்சிகர குழுக்களிடையே நடைமுறையில் சில முரண்பாடுகள் தோன்றலாம். சில எரிச்சலூட்டும் நடைமுறைகளைக் கூட சில குழுக்கள் மேற்கொள்ளலாம். இவற்றை பொறுமையாகத்தான் கையாள வேண்டும். கோபப்பட்டு பகை முரண்பாடாக கையாள்வது பாரதூரமான விளைவுகளை உருவாக்கும். பின்னடைவுக்குக் கூட இட்டுச் சென்றுவிடும்.

முரண்பாடுகளைக் கையாளும் போது பகை முரண்பாடா, நட்பு முரண்பாடா என தெளிவாக வரையறுத்து செயல்பட வேண்டும். புரட்சிகர இயக்கத்தினரிடையே நடைமுறையில் தோன்றும் முரண்பாடுகளை நட்பு முரண்பாடாகத்தான் அணுகி, தீர்க்க வேண்டும். மாறாக இதை எதிரிக்கும் நமக்குமான பகை முரண்பாடாக எடுப்பது அடிப்படையிலேயே தவறாகும்.

இந்த இரு புரட்சிகர குழுக்களும் மக்களிடையே புரட்சிகர நடைமுறைகளை வைத்துள்ளன. மக்கள் நீதிமன்றங்கள் அமைத்து, வீச்சாக செயல்படுகின்றன. சில இடங்களில் நிலப்பிரபுக்களின் நிலம், சொத்துக்களை கைப்பற்றி கூலி ஏழை விவசாயிகளுக்கு பகிர்ந்தளித்துள்ளன. இதனால் இரு அமைப்புகளுமே பீகார் மாநில அரசால் தடை செய்யப்பட்டுள்ளன. ஆனால் இதுவரை அப்பாவி பொது மக்கள் மீது எவ்வித தாக்குதலையும் நடத்தவில்லை. அதே நேரம் நிலப்பிரபுக்களின் கொடூரச் சுரண்டலிலிருந்தும் அடக்குமுறையிலிருந்தும் கூலி ஏழை உழவர்களை, குறிப்பாக தாழ்த்தப்பட்ட மக்களை விடுவிக்கின்றன. இதற்காக தொடர்ந்து ஆயுதமேந்திப் போராடுகின்றன. அவ்வகையில் மக்கள் இக்குழுக்களின் மீது இன்னும் நம்பிக்கை வைத்துள்ளனர்.

இதை குலைக்கின்ற இடது சந்தர்ப்பவாத நடைமுறையைக் கைவிட வேண்டும். இல்லை என்றால் இத்துணை கால புரட்சிகர நடைமுறையும், அரசியலும் விழலுக்கு இறைத்த நீராகிவிடும்.

• மாரி

## தங்கச் சுரங்கமும் தனியார்மயமானது

தமிழக எல்லையை ஒட்டி, கர்நாடகத்திலுள்ள கோலார் தங்கச் சுரங்கமும் தனியாருக்குத் தாரை வார்க்கப்பட உள்ளது. கோலாரிலுள்ள பாரத தங்கச் சுரங்க நிறுவனம் (BGML) கடந்த ஜூன் மாத இறுதியில், நட்டத்தில் இயங்குவதால் தேவைக்கு அதிகமாக உள்ள தொழிலாளர்களை வெளியேற்றப் போவதாக அறிவித்தது. சுயவிருப்பத்தின்படி வேலையிலிருந்து விலகிக் கொள்ளும் தொழிலாளர்களுக்கு சட்டப்படி நிவாரணமும் மறுவாழ்வுத் தொகையும் அளிப்பதாக அறிவித்து, தனியார்மயமாக்கலுக்கான ஏற்பாடுகளைச் செய்து வருகிறது.

இச் சுரங்கத்தில் 5000-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பணியாற்றுகின்றனர். இவர்களில் பெரும்பாலோர் தாழ்த்தப்பட்டவர்கள் ஆவர். அரசுத்துறை நிறுவனமான இந்நிறுவனம், தனியார்மயமானால் மொத்தத் தொழிலாளர்களில் பாதிக்கும் குறைவானோருக்கே வேலை கிடைக்கும். அந்த வேலையும் நிரந்தமானதல்ல என்பதால் தொழிலாளர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகிவிட்டது. இச்சுரங்கத்தில் 16 ஆண்டுகளுக்கும் மேலாக வேலை செய்த ஒரு தொழிலாளி சுய விருப்பத் திட்டத்தின்படி வேலையிலிருந்து விலகினால் அவருக்கு மொத்தமாக ரூ. 65,000 தான் கிடைக்கும். அத்தொகையைக் கொண்டு எதிர்காலத்தை எப்படி ஓட்டுவது என்று புரியாமல் தொழிலாளர்கள் குமுறுகிறார்கள். கோலார் சுரங்கத்தை தனியார்மயமாக்குவதை எதிர்த்தும், பணி நிரந்தரம் கோரியும் கோலார் தங்க வயல் பாதுகாப்புக் கமிட்டியை நிறுவி, தொழிலாளர்கள் ஒன்றிணைந்து போராடி வருகிறார்கள்.

கோலார் சுரங்கத்தை தனியார்மயமாக்கப்போவதாக அரசு அறிவித்தவுடனேயே 15-க்கும் மேற்பட்ட தனியார் நிறுவனங்கள் போட்டி போடுகின்றன. முறையாக இயக்கினால் இச்சுரங்கத்தில் லாபமீட்ட முடியும் என்பதையே இது நிரூபித்துக் காட்டுகிறது. ஆனால் மக்கள் விரோத ஆட்சியாளர்கள் தனியார் மோகத்தில் தொழிலாளர் வாழ்வைச் சூறையாடி வருகிறார்கள்.

## தி.மு.க. - த.மா.கா. கூட்டணியின் மேல்சாதி வெறிக்கு வாலாட்டிய போலீசு!

நீலகிரி மாவட்டம் கோத்தகிரி பகுதியில் சுமார் 300 சிறு விவசாய குடும்பங்கள் வசிக்கும் மசகல் பகுதியில் விவசாயத்திற்கு பாசன நீராகவும், குடிநீராகவும் பயன் தருவது 'பாகபில்' நீரோடை. இதனை திருப்பி 20 குடும்பங்கள் வசிக்கும் தேகில் ஹட்டிற்கு குடிநீர் வழங்குவதாக உள்ளாட்சி தேர்தலின் போது வாக்குறுதி தந்துள்ளார் காமராஜ். பஞ்சாயத்து தலைவராக காமராஜ் (தி.மு.க.) வெற்றி பெற்றதும் வாக்குறுதியை நிறைவேற்ற முயன்றார். மசகல் பகுதி மக்கள் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். மாற்று ஏற்பாடாக மசகல், கூக்கல் பகுதியில் நிலத்தடியிலிருந்து குடிநீர் எடுக்கும் வசதியையும் குறிப்பிட்டனர்.

காமராஜோ பாகபில் நீரோடையிலிருந்தே குடிநீர் வழங்க பிடிவாதம் பிடித்தார். இதனால் சிறிய முரண்பாடுகள் தோன்றி கலவர சூழல் உருவானது. இந்நிலையில் 15.9.97-ல் தனிப்பட்ட இருவருக்கிடையே மோதல் நடந்தது. இதை பயன்படுத்தி மசகல் பகுதி தாழ்த்தப்பட்ட மக்களின் மீது பொய் வழக்கு போட பணம் கொடுத்து காவல் துறை உதவி ஆய்வாளர் தர்மராஜனை ஏவி விட்டனர், காமராஜ், சேர்மன் ராமச்சந்திரன் (த.மா.கா) மாவட்ட கவுன்சிலர் டி. கணபதி (த.மா.கா) ஆகியோர்.

வாங்கிய காசுக்கு வஞ்சனையின்றி மசகல் தாழ்த்தப்பட்டோர் குடியிருப்பில் புகுந்த காக்கிச் சட்டை ரவுடிகள், 15 பேரை கைது செய்து கற்பழிப்பு முயற்சி, கொலை முயற்சி, பஸ் எரிப்பு முயற்சி, கொள்ளையடித்தல் என பல பொய் வழக்கினை ஜோடித்து சிறையிலடைத்துள்ளனர். இந்த மக்கள் விரோத கும்பலின் சதிகளை அம்பலப்படுத்தி பிரசுரம் விநியோகித்தனர் ம.க.இ.க.வினர். அப்போது ரவி என்ற இளந் தோழரைக் கைது செய்து காட்டுமிராண்டித்தனமாக தாக்கி சிறையிலடைத்தது போலீசு.

மயங்கிய நிலையில் குடிநீர் என முனகிய ரவிக்கு சிறுநீர் குடிக்கச் சொல்லியுள்ளான் தர்மராஜ். அந்த இளம் தோழருக்கு மருத்துவ உதவி செய்ய கோத்தகிரி அரசு மருத்துவமனையில் மறுத்துவிட்டனர்.

மக்கள் கலை இலக்கியக் கழகம், விவசாயிகள் விடுதலை முன்னணி அமைப்பினரை ஒழித்துக் கட்டி விடுவதாக தர்மராஜன் சவால் விட்டுள்ளான். காமராஜ் கும்பலோ ம.க.இ.க.வினரை சமூக விரோதிகள் என துண்டுப் பிரசுரம் வெளியிட்டு அவதூறு செய்ய முயன்றுள்ளது.

இவர்களை மக்கள் மத்தியில் தோலுரித்து, அம்பலப்படுத்தி, முறியடிக்கும் பணியினை தோழர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

— ம.க.இ.க., கோத்தகிரி.



படிப்பகம்

www.padippakam.com

# சிவந்த கண்கள் கவனிக்கட்டும்

## வாய்ச் சவடால்

1994 ஆம் ஆண்டில் குழந்தைத் தொழிலாளர் நலத் திட்டமொன்றை ஆரவாரமாக அறிவித்தது, மைய அரசு. இத்திட்டத்திற்கு 850 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்றும், ஐந்தே ஆண்டுகளில் நடெங்கிலும் குழந்தை உழைப்பு ஒழிக்கப்பட்டுவிடும் என்றும் தம்பட்டம் அடித்தனர். ஆனால், திட்டம் அறிவிக்கப்பட்டு மூன்று ஆண்டுகள் கழிந்த பின்னும், 73 கோடி ரூபாய்தான் நிதியாக வழங்கப்பட்டுள்ளது. நாடெங்கிலும் 630 மாவட்டங்களில் அமைக்கப்பட வேண்டிய நலமையங்கள், 76 மாவட்டங்களில் தான் அமைக்கப்பட்டுள்ளன.

## சொரணையற்ற "இடது"கள்

ஜெர்மன் நாட்டைச் சேர்ந்த பன்னாட்டு நிறுவன அதிகாரிகளின் குழுவொன்று, மேற்கு வங்கத்தில் முதலீடு செய்வதற்காக அம்மாநில அமைச்சர்களுடன் பேச்சு வார்த்தை நடத்த வந்தது. எல்லாம் 'இனிதாக' முடிந்த பின்பு, அந்த அதிகாரிகள் குழு ஜோதிபாசு உள்ளிட்டு எல்லா அமைச்சர்களுக்கும் உடைக்கப்பட்ட ஜெர்மன் சுவற்றின் செங்கல் கட்டியினை நினைவுப் பரிசாகக் கொடுத்துத் திரும்பினர். ஜெர்மன் சுவர் வீழ்ந்ததை பொதுவுடைமையின் வீழ்ச்சியாகச் சித்தரித்து வருகிறது, ஏகாதிபத்திய உலகம். ஆனாலும், சொரணையற்ற "இடது"கள் புன்னகை மாறாமல் அந்நினைவுப் பரிசைப் பெற்றுப் பத்திரப்படுத்தி வைத்துக் கொண்டனர்.

## கத்தி போயி வாளு வந்தது

மகாராஷ்டிரா அரசு கணிப்பொறிகள் மூலம் உடனடி லாட்டரி நடத்தும் திட்டமொன்றை நடைமுறைப்படுத்த உள்ளது. இந்த உயர் தொழில் நுட்ப சூதாட்ட முறை மூலம் அம்மாநில அரசுக்கு ஐந்தாண்டுகளில் 500 கோடி ரூபாய் வருமானம் கிடைக்குமாம்! மேற்கு வங்க மாநில "இடது"சாரி அரசோ, "அஞ்சல் வழி லாட்டரி" என்ற புதிய சூதாட்டத்தைத் தொடங்கவுள்ளது. இராசஸ்தானில் இரண்டு நம்பர் லாட்டரி சீட்டு முறை அறிமுகமாகவுள்ளது. ஒரு நம்பர் லாட்டரியை ஒழித்து விட்டோம் என்று கூப்பாடு போட்டுக் கொண்டே ஓராயிரம் புதிய வழிகளில் மக்களை மோசடி செய்ய முயலுகிறார்கள், ஓட்டுச் சீட்டு சதிகாரர்கள்.

## காவிரியில் கழிவு நீர் அபாயம்

நொய்யல் ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள ஒரத்துப்பாளையம் அணையில் தேங்கி நின்ற சாயப்பட்டறை கழிவு நீரை இரகசியமாகத் திறந்து விட்டு, திருச்சி - கரூர் மாவட்ட விவசாயிகளின் வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொண்டது, தி.மு.க. அரசு. இந்த அணை மறுபடியும் சாயப்பட்டறைக் கழிவு நீரால் நிரம்பிவிட்டது. மழைக் காலம் தொடங்கி விட்டதால், மழை நீரோடு நீராக இக்கழிவு நீரையும் திறந்துவிட்டு, விவசாயத்தையும், குடிநீரையும் மறுபடியும் பாழாக்கி விடும் என அஞ்சிக் கொண்டுள்ளனர் இப்பகுதி மக்கள்.

## பிள்ளையையும் கிள்ளிவிட்டு...

ரசியா, பெலாரூஸ், மால்டோவா, உக்ரைன் நாடுகளில் இவ்வருட குளிர் காலம் மிக மோசமானதாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. அப்பொழுது இந்நாடுகளின் வெப்பநிலை உறைபனி நிலைக்கும் கீழாக, — 50 டிகிரிக்கு சென்று விடுமாம். இந்நாடுகளைச் சேர்ந்த 10 இலட்சத்திற்கும் அதிகமான ஏழைகள், அநாதைகளை இக்கடுங்குளிரில் இருந்து காப்பாற்ற 565 கோடி ரூபாய் தேவை. ஆனால் பொருளாதார சீர்திருத்தங்களினால் இந்நாடுகள் போண்டியாகி நிற்பதால், இந்நாடுகளுக்குத் தாராளமாக உதவ உலக நாடுகளுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது செஞ்சிலுவைச் சங்கம்.

## எது பெரிது?

"தடா" வழக்குகளைப் பரிசீலனை செய்வதற்காக சமீபத்தில் மைய அரசின் அமைச்சரவை கமிட்டி கூடியது. ஒன்றரை மணி நேரமே நடந்த இந்தக் கூட்டத்தில் தடா வழக்குகளைப் பரிசீலனை செய்ததை விட, இக்கூட்டத்திற்கு முதல் நாள் பாகிஸ்தானில் உள்ள லாகூர் நகரில் நடந்த கிரிக்கெட் போட்டியில், இந்தியா பாகிஸ்தானிடம் தோற்றுப் போனதைப் பற்றிதான் புலம்பியுள்ளனர், அமைச்சர்கள். குறிப்பாக உள்துறை மந்திரி இந்திரஜித் குப்தா டெண்டுல்கரின் நிறை குறைகளை விலாவாரியாக அலசியுள்ளார். இந்த வெட்டிப் பேச்சினிடையே தேநீரையும், பிஸ்கெட்டுகளையும் உள்ளே தள்ளிக் கொண்டிருந்த குப்தா, சிறிது நேரத்திலேயே குறட்டை விட ஆரம்பித்து விட்டாராம்!

## கேதுவிடம் வேண்டினால் போண்டியாவது நிற்குமா?

தாய்லாந்து நாட்டின் நாணய மதிப்பு வீழ்ந்து போனதால், அந்நாட்டை ஆளும் கூட்டணி அரசாங்கம் ஆட்டங்கண்டு போயுள்ளது. இந்த அபாயத்தில் இருந்து கூட்டணி அரசைக் காப்பாற்ற இந்துக் கடவுளான கேது பகவானை மனமுருக வேண்டி வருகிறார், அந்நாட்டு பிரதமரின் மனைவி. கேதுவிற்கு கோழி அடித்து அந்நாட்டைச் சூழ்ந்துள்ள துஷ்ட தேவதைகளை விரட்டப் போகிறாராம், அவர். துஷ்ட தேவதைகள் ஓடுவது இருக்கட்டும். கேதுவிற்கு கோழி அடிக்கும் அபச்சாரம் குறித்து பா.ஜ.க. கும்பல் கோபம் கொள்ளாமல் இருக்க எதைக் கொண்டு அடிப்பது?

## நுகர்பொருள் பண்பாட்டின் கோலம்

சமீபத்தில் பிரிட்டனில் ஏழு வயது முதல் பதினான்கு வயதுக்கு உட்பட்ட 1000 சிறுவர்களிடம் கருத்துக் கணிப்பொன்று நடத்தப்பெற்றது. "உலகிலேயே நீங்கள் மிகவும் அதிகமாக விரும்பும் பொருள் எது?" என்பதுதான் அச்சிறுவர்களிடம் கேட்கப்பட்ட கேள்வி. இதற்கு 40 சதவீத சிறுவர்கள் அளித்த பதில் "பணம்". விலை உயர்ந்த ஆடைகள், ஆடம்பர பெரிய பங்களாக்கள், நவீன கார்கள் - இவையெல்லாம் பிரிட்டன் சிறுவர்கள் அடையத் துடிக்கும் பட்டியல் வரிசை. இதோடு, பெரும்பாலான சிறுவர்கள் அழகான பெண் துணை இல்லையென்றால் வாழ்க்கை இனிக்காது எனக் கூறியுள்ளனர்.

## பாக்: இருண்ட எதிர்காலம்



காஞ்சிபுரம் பட்டு நெசவுத் தொழிலில் குழந்தைத் தொழிலாளர்கள்

உலக வங்கி - ஐ.எம்.எஃப். உத்தரவுக்கு இணங்க, பாகிஸ்தானில் அரசு மற்றும் பொதுத்துறை ஊழியர்களுள் 50,000 பேரை வீட்டிற்கு அனுப்பிவிடத் தயாராக உள்ளது அந்நாட்டு அரசு. இதன் முதல் கட்டமாக ஐக்கிய வங்கியைச் சேர்ந்த 8,000 ஊழியர்கள் முன்னறிவிப்பு ஏதுமின்றி வேலை நீக்கப்பட்டனர். அரசின் அடுத்த குறி தென்னக வாயு நிறுவனத்தைச் சேர்ந்த 5,000 தொழிலாளர்கள் மீது விழுந்துள்ளது. 1983 ஆம் ஆண்டு வேலை வாய்ப்பின்மை உச்சத்தில் இருந்தபொழுது, இளைஞர்கள் கொள்ளைக்காரர்களாக, கிரிமினல்களாகச் சீரழிந்தனர். ஐ.எம்.எஃப். கட்டளைக்கு அடி பணிவதால், அந்த நிலை மீண்டும் உருவாகி விடும் என பாகிஸ்தான் எங்கும் அச்சம் எழுந்துள்ளது.


Published and Owned by R. SHANMUGARAJ, 25 Arunachalam St., Jothiramalinga Nagar, Chennai - 600 083.
Printed by him at EZHIL PRINTS, 110, II Floor, 63, Arcot Rd., Chennai - 600 024. Editor: R. SHANMUGA RAJ

படிப்பகம்

www.padippakam.com






கள்ளச் சாராயத்தை ஊர் ஊராகக் கடத்திச் செல்லுவதற்காகவே ஓடிய பேருந்து இது. கன்னியா குமரி மாவட்டத்தில் பேச்சிப்பாறை, களியல் வழியாக ஓடிய இப்பேருந்தில் மூக்கைப் பிடித்துக் கொண்டுதான் பயணம் செய்ய வேண்டும். இது பற்றி பொதுமக்கள் பலமுறை போலீசில் புகார் கொடுத்த போதும், கள்ளச் சாராயத்தைக் கடத்துவதற்கு இப்பேருந்து செய்த சேவைக்கு தடையேதும் ஏற்படவில்லை. பொறுத்துப் பொறுத்துப் பார்த்த பொதுமக்கள் ஒரு நாள் பேருந்தை மடக்கி, ''சாராய பஸ்'' என முத்திரை குத்தி, ''கள்ளச் சாராயத்தை ஒழி'' என சாலை மறியலில் ஈடுபட்ட பின்னர்தான் போலீசு ஓடிவந்தது.

இப்படத்திற்கு அருகிலுள்ள வரைபடம் சென்னையிலும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் எங்கெல்லாம் கள்ளச் சாராயம் காய்ச்சப்படுகிறது என்பதை அம்பலப்படுத்துகிறது. இதை வெளியிட்ட ''இந்தியன் எக்ஸ்பிரஸ்'' என்ற ஆங்கில நாளிதழ், மணலி, இராதாகிருஷ்ண நகர், ராஜமங்கலம், செம்பரம்பாக்கம், பம்மல், காட்டுபள்ளி ஆகிய பகுதிகளில் காய்ச்சப்படும் கள்ளச் சாராயம், பேருந்து - படகுகள் மூலம் போலீசின் ஆசியோடு நகரினுள் கடத்தி வரப்படுவதை வெட்ட வெளிச்சமாக்கியது. வடக்கிலுள்ள தலைநகர் சென்னை தொடங்கி தென்கோடி எல்லை வரை கள்ளச் சாராயம் ஆறாகப் பெருகி ஓடுவதற்கு இவை சிறு சான்றுகள் தான்.

# இதுதான் இன்றைய இந்தியா



இதோ, தங்கள் கட்டுப்பாட்டின் கீழுள்ள பகுதிகளில் கள்ளச் சாராயத்தை ஒழிக்கத் தீவிரமாக நடவடிக்கை எடுத்ததற்காக, ஐந்து போலீசு அதிகாரிகளுக்கு, கருணாநிதி தனது கையால் உத்தமர் காந்தி விருதை வழங்குவது தான் இந்தப் படம். ஐந்து பேருக்கு விருது மாட்டிவிட்ட கருணாநிதியால், தமிழகத்திலுள்ள அனைத்து போலீச[illegible]ருக்கும் இதை மாட்டி விட முடியுமா?

திருந்தி வாழ நினைப்பவனைக் கூட, சாராயம் காய்ச்சச் சொல்லி தொல்லை கொடுக்கும் கிரிமினல் புத்தி கொண்டதுதானே தமிழக போலீசு! கள்ளச் சாராயம் பற்றி புகார் கொடுக்கச் சென்றவர்களையே பொய் வழக்கில் உள்ளே தள்ளியதற்கு ஆயிரம் ஆதாரங்களைத் தர முடியுமே! குடியிருப்புப் பகுதியில் கள்ளச் சாராயம் விற்கத் தடையாக நின்ற செய்யாறைச் சேர்ந்த கூலித் தொழிலாளி மோகனை கொட்டடியில் தள்ளி கொலை செய்[illegible] தமிழகப் போலீசு தானே! புருசனை[illegible] சாராயம் காய்ச்ச சொல்லிவிட்டு, பொண்டாட்டியைப் படுக்கச் சொல்லும் வக்கிரப் புத்தி கொண்டவர்[illegible] தானே தமிழகப் போலீசார்! அரசு [illegible] சம்பளத்தை விட, கள்ளச் சாராய கி[illegible]மினல்களிடம் கைகட்டி வாங்கும் மாமூல் தானே போலீசுக்குப் பெரி[illegible]

போலீசு தரும் பாதுகாப்போ[illegible] கள்ளச் சாராயம் தமிழகமெங்கு[illegible] ஆறாகப் பெருகி ஓடும் எதார்த்தம் ஒருபுறம்; கண் துடைப்புக்காக போலீசு எடுக்கும் கள்ளச் சாராய வேட்டைகளை மெச்சி, விருதும் பரிசும் தரும் நாடகம் மறுபுறம். இன்னும் எத்துணை நாள் இந்த ஏமாற்று வித்தைகளைப் பொறுத்து வாழ்வது?